Registered No. M. 878.

431

# பூர்ணசந்திரோதயம்.

சென்னை ராஜதானியின் தென்பாகத்திலுள்ள
பிரஹ்மஞானக் கிளைச்சங்கங்களின் மஹாசபையின்
ஆதரவின்மேல் மதுரையில் பிரசுரயாகி நடைபெறும்

## மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை.


தொகுதி 2. } 1912ஞு ஏப்பிரல்மீ 15உ பரீதாபிஞு சித்திரைமீ 3உ { பகுதி 12.



ப. நாராயண ஐயர், B. A., B. L., F. T. S.
அ. ரங்கஸ்வாமிஐயர், B. A., B. L., F. T. S. } பத்திராதிபர்.



வருஷ சந்தா ரூ 2. தனிப்பிரதி அணு 4.

மதுரை:
விவேகபாநு அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது.

## பொருளடக்கம்.


| | பக்கம். |
|---|---|
| சன்மார்க்கசபையைநடத்தும் முறை—ப. நா. | ௩௯௫ |
| அயநம்—R. S. நாராயணஸ்வாமி ஐயர். | ௪0௧ |
| இஷ்டம், பூர்த்தம், தானம்—P. S. ஸுப்ரஹ்மண்ய ஐயர். | ௪0௬ |
| சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம்—எஸ். சாமிநாதையர் | ௪௧௭ |
| ஸ்ரீசிருங்ககிரிமடத்து ஸ்வாமிகளின் விதேகமுக்தி—ப. நா. | ௪௨௧ |
| புத்தகவரவு—பத்திராதிபர். | ௪௨௩ |
| சமாசாரம்—பத்திராதிபர் | ௪௨௪ |
| பதஞ்சலிமகரிஷி அருளிச்செய்த யோகசூத்திரம். | |


## புஸ்தகம், துண்டுப் பத்திரிகைகள் விளம்பரம்.

| | |
|---|---|
| ஏசுகிறீஸ்து என்பார் ஒழுகிக்காட்டிய ஒழுக்கமுறைநூல். The Imitation of Christ (in Tamil) | 1-0-0 |
| கடோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-8-0 |
| பிராசீந தர்மங்களின் உயர்வும், இக்கால ஆசாரங்களும் | 0-6-0 |
| மனிதனின் வமிசாவளியின் உண்மை | 0-4-0 |
| ஹிந்துமததூஷண பரிகாரம் | 0-4-0 |
| Avvayar's Yoga aphorisms in English | 0-4-0 |
| தைத்திரீயோபநிஷத் தமிழ் மொழிபெயர்ப்பு | 0-3-0 |
| சுவேதாசுவதரோபநிஷத் | 0-3-0 |
| ஐதரேயோபநிஷத் ஷை | 0-2-0 |
| மௌநவாக்கு | 0-2-0 |
| சன்மார்க்கதீபம் | 0-2-0 |
| ஈசோபநிஷத் தமிழ்மொழிபெயர்ப்பு | 0-1-0 |
| அன்னிபெஸண்டு அம்மையார் சரித்திரம் (செய்யுள்) | 0-1-0 |
| டில்லிதர்பார் மஹோத்ஸவம் | 0-1-0 |
| வெள்ளியம்பலம் என்னும் ஞாநிகளின் சங்கமும் அதனின்று வெளிவரும் ஆசாரிய புருஷர்களும் | 0-1-0 |
| வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர் அவர்களின் சரித்திரச்சுருக்கம் | 0-0-6 |
| ஏசுகிறீஸ்து என்பார் சரிதம் | 0-0-6 |
| தேவாலயம் | 0-0-3 |
| தர்மசத்திரங்களும் அவைகளின் சீர்திருத்த முறைகளும் | 0-0-3 |
| இந்தியபுத்திரர்களின் சங்கம் | 0-0-3 |
| பிரஹ்மவித்யை (ஆங்கிலத்தில்) | 0-0-3 |
| சிராத்தம் | 0-0-3 |
| சன்மார்க்க சபையை நடத்தும் முறை | 0-0-3 |
| பிரஹ்மஞாந சபையின் யந்திரம் | 0-0-2 |
| பிரஹ்மவித்யை | 0-0-2 |
| அஷ்டமி பிரதக்ஷிணம் | 0-0-1 |
| பிரஹ்மஞாந சபை | 0-0-1 |

மேற்கண்டவைகளுக்கு 100-க்கு 10 கமிஷன் கொடுக்கப்படும். தபாற்கூலி பிரத்தியேகம். வேண்டுவோர் மதுரை தியஸாபிகல் ஸொஸைட்டி பிரெஸிடெண்டு ப. நாராயணையரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

# பூர்ணசந்திரோதயம்.

தொகுதி 2. | 1912௵ ஏப்பிரல்௴ 15௳ பரீதாபி௵ சித்திரை௴ 3௳ | பகுதி 12.

## சந்மார்க்கசபையை நடத்தும் முறை.*

உலகத்தில் பல விஷயங்களைப்பற்றிப் பல ஜனங்கள் ஸமாஜம் கூடித் தாம் கொண்ட கர்மத்தைச் சித்திசெய்துகொள்ளுகிறார்கள். விவசாய சபை, கைத்தொழில் முயற்சி சபை, வர்த்தமானப் பத்திரிகைகளை வாசிக்க ஏற்பட்ட சபை(Newspaper Club), வாதசாஸ்திர சபை, வைத்தியசாஸ்திர சபை, ராஜதந்திர சபை (Political Club), உல்லாஸமாய்க் காலங்கழிக்கும் சபை (Recreation Club), இவை போன்ற ஆயிரக்கணக்கான சபைகள், நாகரிகமுள்ள நாடுகளில் அறிஞர்களால் நிருவப்பெற்று நடைபெறுகின்றன. வித்தை, அபரவித்தை என்றும் பரவித்தை என்றும் இரண்டாகப் பிரிவுபெறும். அபரவித்தையின் அம்சங்கள் கோடாநுகோடி; எண்ணிறந்தன.† உலகத்தில் மேற்கண்டபடி நடைபெறும் எல்லாச் சபைகளும் கூட்டங்களும் அபரவித்தையின் ஓரோர் அம்சத்தை விளக்கவும், விவகரிக்கவும், ஆராய்ச்சிசெய்யவும் ஏற்பட்டுள்ளன. பரவித்தையோ என்றால் அக்ஷரமான பிரஹ்மத்தை அடையும் முறை ஒன்றே என்பதாம். ஸங்மார்க்கமென்றால் ஸத் என்ற பிரஹ்

* Adapted from C. W. L.'s Inner Side of a Lodge Meeting.

† முண்டக உபநிஷத்தில் 1-வது முண்., 4 முதல் 9 வரையுள்ள மந்திரங்களைப்பார்க்க.

மத்தை அடையும் முறை என்பதேயாம். அந்த பரவித்தையைப் பற்றி நடைபெறும் சபை ஸங்மார்க்கசபை. இந்த சபைக்கும் ஏனைய சபைகட்கும் வெகு வித்தியாசங்கள் உண்டு. ஏனையசபைகளில் விக்ஞாநப்பயிற்சியில் (Intellect) ஆராய்ச்சி பலவாறாக விரியும். தர்க்கவாதங்கள் ஏற்படும். ஒரோர் சமயத்தில் மநத்தின் கீழ்க்கடையான எண்ணங்களை சபையின் அங்கத்தினர்கள் கொள்ளுவார்கள். கோபம், பொறாமை, அஹங்காரம் முதலியவைகளின் தோற்றம் சம்பவிக்கும்.

2. ஸங்மார்க்கசபையிலோவென்றால், அது சரியாய் நடத்தப் பெறுமாகில், மேற்கண்ட கீழான மநோபாவங்கள் தோன்றுவதற்கு இடமிராது. அச்சபையில் சேரும் அங்கத்தினர்கள் சபைக்குள் நுழையுமுன் விகற்பங்களான எண்ணங்களைக் கூடியவரை தவிர்த்து, மநச்சாந்தராய் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு அங்கத்தினரும் மேற்படி கூட்டத்தினால் தனித்தனி சொந்த லாபங் கருதாமல் அதனால் தங்களுக்குள் வேற்றுமை பாவத்தை விருத்திபண்ணாமல் இருந்துகொண்டு தற்சமயம் கூடிய சபையார் முழுவதும் ஒரேமநத்தினராய் சாந்தராய் இருக்கவேண்டும். பெரியான் சிறியான், அறிந்தவன் அறியாதவன், ஏழை பணக்காரன், இவை போன்ற உலகத்தில் நிகழும் வேற்றுமைகள் குன்றியிருக்கவேண்டும். இச்சபை இவ்விதம் நிகழில், ஈசுவரன் அருள் பிரவாகம் இச்சபையின் மூலமாய் ஏற்படும். இச்சபையின் துவாராக ஜநஸமூகத்திற்கும் ஞாநக் கிளர்ச்சியும் உற்சாகமும் உண்டாகும். எவ்வளவுக்கு எவ்வளவு இச்சபை நேர்மையாய் நடத்தப்படுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு உயர்நலம் அமைந்த ஞாநப் பிரவாகம் உலகத்தில் பாய்ந்தோடிப் பரவுவதற்கு இச்சபை ஓர் வாய்க்காலாகவமையும்.

3. இச்சபை கூடுங்கால் யாதேனுமொரு ஞாநவிஷயத்தைப் பற்றி ஸம்பாஷணை நிகழலாம். ஆராய்ச்சி ஏற்படலாம். அது ஸம்பந்தமான படிப்பும் நிகழலாம். அப்போது அங்கத்தினர், முன் பிரஸ்தாபித்திருக்கிறபடி, ஒருங்கே பொதுநலம் பெறவேண்டுமென்ற கருத்தைத் தவிர, தனிமையாக சுயநலம் பெறவேண்டுமென்ற எண்ணங் கொள்ளாதிருத்தல் வேண்டும். ஒரோர் சமயத்தில் சபையில்

ஒன்றுந் தெரியாத திருமூடராக ஒரு அங்கத்தினர் இருப்பார். அவர் மநத்தில் பளிச்சு என்று யாதேனும் ஒரு ஞாநவிஷயம், அவர் முன் நினையாமலே, உதயமாகும். அவ்வித ஞாநவெழுச்சிக்கு அவர் உத்தரவாதி அல்லர். ஆனல் அச்சபைக்கு ஆதாரபூதமாயுள்ள மஹாபுருஷர் சூக்ஷ்மமான சரீரத்தை எடுத்துக்கொண்டு அச்சபையாரை அநுக்கிரஹிக்குமாறு அத்திருமூடர் மநத்தில் ஞாநவிஷயம் உதயமாகும்படி செய்விப்பார்.

4. இந்த சபையில் கூடும் அங்கத்தினர்கள் சபையினின்று எவ்வித சொந்த லாபத்தையும் கருதாமல் சபைக்கும் அச்சபை நடக்கின்ற இடத்திற்கும் சுகிர்தம் உண்டாகும்படி நினைப்புக் கொள்ளவேண்டும்.

5. இச்சபையில் கூடுகின்றவர்கள் இந்த சபையில் நடத்துகிறதாக உத்தேசித்துள்ள படநம், ஆராய்ச்சி, சம்பாஷணை முதலியவைகளைப்பற்றி முன்னரே படித்து ஆயத்தமாக வரவேண்டும். சபைக்கு வந்தமேல் எல்லாம் தெரிந்துகொள்ளலாமென முன் ஆயத்தமில்லாமல் வரக்கூடாது. தாய்க்குருவி இரையைக் கொண்டுவருமெனவெதிர்பார்க்கும் சிறு குஞ்சுகள் போல் இருத்தல் நலமன்று. அப்படி இருந்தால் நல்ல ஸம்ஸ்காரம் மநத்தில் அமையவேண்டுமென்ற சபையின் நோக்கம் நிறைவேறாது.

6. இச்சபைக்கும் மற்றைய சபைகளுக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை முன்னரே தெரிவித்திருக்கிறோம். அதைத்தவிர ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. அதாவது, ஏனைய சபைகளின் ஆராய்ச்சிமுறை, படிப்பு, ஸம்பாஷணை முதலியன கீழான பிரஞ்ஞாபூமியில் நிகழும். மேலும் அவைகள் உலகப்பற்று உள்ளவைகளாகவும் உலகக் காமனைகள் தோய்ந்தவைகளாகவும் இருக்கும். எண்ணங்கள் ஜல அலைபோல் பரவும் இயல்பின. காமனைபற்றிய எண்ணங்கள் அதிக தீவ்ரமாய்ப் பரவும். ஜநங்களின் மநம் பொதுவாய்க் காமனைபற்றி இருப்பதால் என்று அறிக. நல்ல எண்ணங்கள் பரவுதலிலும் ஜநங்களின் மநத்தைத் தாக்குதலிலும் சிரமப்படும். ஜநசமூகத்தின் மநம் உயர்நலம் பெறவேண்டுமானல், இச்சந்மார்க்க சபைகள் பல இடங்களில் உண்டாகி நேர்மையாக நடத்தப்பட

வேண்டும். சந்மார்க்கசபை நடைபெறும் முறையோவென்றால் உயர் தரப் பிரஞ்ஞாபூமிகளுடன் சம்பந்திக்கும். இச்சம்பந்தம் மிகவும் சூக்ஷ்மமானது. உயர்நலம் அமைந்த எண்ணங்கள் இச்சபையில் சிந்திக்கப்படுமாகில், அவ்வெண்ணங்கள் ஜல அலைகள்போலப் பரவுவதில் அத்தன்மையான உயர்தர லக்ஷியமுள்ளவர்களின் மநத்தைமாத்திரம் தாக்கும். தாக்கப்பெறவே, அம்மநம் முன் ஏகதேசத்தில் சிந்தனைகொண்டு மறைந்துபோயிருந்ததும், சபையில் சிந்திக்கப்பட்டதுமான உயர்நலமமைந்த எண்ணங்கள் அம்மநத்தின்கண் தோன்றும். இவ்விதம் அடிக்கடி நல்ல எண்ணங்கள்பரவி நல் மநத்தினரைத் தாக்குமாகில், நாளடைவில் நல்லார் அதிகம் ஏற்படுவர். அவர்கள் இச்சபையை நாடிச் சேருவர். இச்சபை இன்னும் அதிக நலம் தரும்படியாக நடைபெறும். ஓரோர் சமயத்தில் இச்சபையை அநுக்கிரஹித்து நடத்தும் மஹாபுருஷர்கள், முன் பிரஸ்தாபித்தபடி, சில ஞாநவிஷயங்களை அசரீரியாக ஒருவர் மநத்தில் தோன்றும்படி செய்திடுவர். சில சமயத்தில், சபையானது உயர்நலமமைந்து நேர்மையாய் நடத்தப்பெறுமாகில் ஈசுவரனின் அருள்வெள்ளமே சபைக்கு இறங்குவதாகும். அதன் மூலமாக உலகம் நலம்பெறும்.

7. ஆதிகாலத்தில் தேவ ஆலயங்களிலும் மடாலயங்களிலும் தேவ குருபூசைகளின் அந்தியத்தில் பிரசங்க தீபாராதனை என்று ஒரு உயர்வான ஆராதனை நடைபெற்றுவந்தது. அப்போது உண்மையான பக்தர்கள் மெய்ம்மறந்து அன்புருகி அகம் குழைந்து ஈசுவர ஸ்தோத்திரங்கள் செய்வார்கள். தற்சமயம் கூடியிருக்கின்ற பொது ஜநங்களின் மநத்திலும் ஞாந எழுச்சியும் உற்சாகமும் உண்டாகும். இத்தன்மையான பிரசங்க தீபாராதனை என்பது இக்காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள தேவ ஆலயங்களிலும் மடாலயங்களிலும் நடத்தப்பெறுகிறதாகத் தோன்றவில்லை. காசி மஹாக்ஷேத்திரத்தில் ஸ்ரீ விசுவநாதர் ஸந்நிதியில் இரவில் இந்தக் காலத்திலும் நடத்தப்படுகிறது. அச்சமயத்தில் நாஸ்திகனாகவிருக்கிறவனின் மநங்கூடக் குவிந்து கை அஞ்சலிபண்ணும்.

8. இவ்விதமாக குரு ஆராதனை, ஈசுவர ஆராதனைசமயங்களிலும், அறிஞர்கள் ஞாநவிஷயத்தைப் பற்றி ஆராய்ச்சிசெய்யும்

சமயங்களிலும், குரு அல்லது ஈசுவரசம்பந்தமான ஸ்தோத்திரங்கள் செய்யப்படுமாகில் குரு அல்லது ஈசுவரனுடைய பிரசாதம் உண்டாகும். அல்லது யாதேனுமொரு நன்மையான எண்ணத்தை சபையார் ஒருங்குசேர்ந்து ஒரு மநத்தினராய் சிரத்தையுடனே சிந்திப்பாராகில் அதுவும் நலந்தரும். இத்தன்மையான சபையை நடததுகிறதில் பொதுப்படையாக தக்ஷிணாமூர்ததி ஸ்தோத்திரம், அல்லது பகவத்கீதை 11-வது அத்தியாயம், 15 முதல் 23 வரையுள்ள சுலோகங்கள், இவை போன்றவைகளை, சபையார்களெல்லாரும் கூட்டாக ஒருங்காகச் சொல்லி அதன்மேல் சபையின் காரியங்களை ஆரம்பித்தல் நலமாகவிருக்கும். அல்லது நமது தேசத்து சம்பிரதாயப்படி, எந்தெந்த ஞாநசாஸ்திரம் படிக்கப்படுகின்றதோ, அல்லது சிரவணம் செய்யப்படுகின்றதோ, அந்தந்த ஞாநசாஸ்திரத்திற்குரிய ஈசுவர மூர்த்தி ஞாநகுரு முதலியவர்களைப் போற்றி செய்து தியாநித்து, அதன்மேல் படநம் ஆரம்பித்தல் நலமாம். உதாரணமாக, சைவசித்தாந்திகளாகவிருப்பின் சிவஸ்தோத்திரங்களும் ஞாநசம்பந்தர் முதலிய மஹாத்மாக்களின் ஸ்தோத்திரங்களும், தேவாரத் திருவாசகப் பாசுரங்களும், வைணவர்களாகவிருப்பின் விஷ்ணு ஸ்தோத்திரங்களும் அவரவர்கள் அன்புபாராட்டும் அந்தந்த ஆழ்வாரின் ஸ்தோத்திரங்களும் முறைப்படி காநம் செய்யப்பெற்று அர்த்தத்துடன் சிந்திக்கப்படுமாகில், தற்சமயம் அந்தந்த மஹாபுருஷர்களின் ஸாந்நித்தியம் உண்டாகும், அல்லது அருள் பிரகாசிக்கும். அதன்மேல் உத்தேசிக்கப்பெற்ற படநங்கள் சம்பாஷணைகள் நிகழுமாகில் அம்மஹாபுருஷர்களே நேரிலிருந்து உபதேசித்தாற் போல சபையின் அங்கத்தினர்கள் தெள்ளிய ஞாநம் பெறுவார்கள்.

9. இத்தன்மையான சபை கூடுகிறதில் ஒரே இடத்திலும், ஒரே காலத்திலும் கூடவேண்டும். இடம் மாற்றம், காலம் மாற்றம் ஏற்படும் பக்ஷத்தில் முன் கூடியதினால் இடத்திற்கும் காலத்திற்கும் ஏற்பட்ட நல்ல ஸம்ஸ்காரங்கள் சபையோர்களுக்குப் பிரயோஜநமின்றிப் போய்விடும். கூடுகிற சபையின் அங்கத்தினர்களின் மநமும் ஒருநிலைபெறுமல் சிதறும்.

10. படிப்பு, சம்பாஷணைகள் நிகழுங்கால், அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்படுமாகில் ஒருவர் தாம் கொண்ட அபிப்பிராயத்தினுடன் பிறர் அபிப்பிராயங்களையும் குரோதமின்றி ஸஹிக்கவேண்டும். மேலும் உண்மையென்பது சூர்யரஸ்மி போல் ஸப்த வர்ணங்கள் கூடிய வெண்மையான ஒளி. முக்கோண ஸ்படிகம் சூரியகிரணத்தை நாநாவித வர்ணங்களாகப் பகுத்து வெளிக்காட்டும். அவ்விதமே மநமும் செய்யும். ஓரோர் வர்ணம் ஓரோர் மதத்திற்குப் பிரியகரமாகவிருக்கும் என்பதான தர்மத்தை நன்குணர்ந்து சபையார்கள் பொறுமைபாராட்டவேண்டும். ஆனல் இப்பொறுமைபாராட்டுதலானது உண்மையான தர்மமென ஒவ்வொருவரும் நினைக்கவேண்டும். வெளிப்படையாக "மற்றவரது அபிப்பிராயம் சரிதான்" என்று சொல்லி உள்ளத்தில் கபடநாட்டத்துடன் இருத்தலானது பொறுமைபாராட்டுதல் ஆகமாட்டாது. சபையின் ஒற்றுமைத்தன்மைக்கு ஹாநியையும் விளைவிக்கும். இத்தன்மையான சபை நேர்மையாக நடைபெறுகிறதாக வெளியில் தோன்றினும் சில காலத்திற்கெல்லாம் அழிவுறும். அதனல் உள்ளும் புறமும் ஒன்றுயிருத்தல் வேண்டும். மநம், மெய், மொழி ஒன்றுபடவேண்டும். இத்தன்மையான தர்மம், இச்சபைகளை நடத்துவதில், மிகவும் முக்கியமாகக் கவநிக்கத்தக்கது.

11. மேற்கண்டவிதமாய் ஸந்மார்க்க சபைகள் நடத்தப்படுமாகில், அவைகள் உள்ள இடங்களில் நலத்தை உண்டுபண்ணும் ஸாதநமாகும். பிரஹ்மஞாநக் கிளைச்சபைகள் எல்லாம் சந்மார்க்க சபைகளாகும். அவை பலவிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதில் மேற்கண்ட முறையை அநுசரித்து அச்சபைகள் நடத்தப்படுமாஞல் நம் நாடு நலம் பெறும். அவ்விதம் நடத்தப்படவேண்டுமென்பது நம்முடைய பிரார்த்தனை.

ஓம் தத் ஸத்.

ப. நா.

## அயநம்.

(384-ம் பக்கத் தொடர்ச்சி.)

---

மேற்கூறிய விஷுவத்களும், அயநாதிகளும் 'அபஸரணவிதி' (Law of precession of equinoxes and solstices) க்குட்பட்டு, சுமார் 72 வருஷங்களுக்கு ஒரு தினம் வீதம் பின்னடைகின்றன.

இப்பொழுது அநுஷ்டானத்தில் வழங்கிவரும் தினங்கள், பிருஹத் ஜாதகம், பஞ்சஸித்தாந்திகா முதலான உயர்ந்த ஜ்யோதிஷ நூல்களை எழுதியவரான வராஹமிஹிரர்,* அவருக்கு முன் இருந்த ஆர்யபட்டர் முதலான, ஜ்யௌதிஷிக நிபுணர்கள் காலமான, கி. பி 6-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் அக்காலத்து கணனப்படி குறிக்கப்பட்டவைகள்.

பின்னால் ஜ்யோதிஷ சாஸ்திரத்தில் வரவர ஆராய்ச்சிக் குறைவாலும், மேற்கூறிய 'அபஸரணவிதி' யின் உண்மையை அறியாததாலும் காலத்துக்குத் தக்கவாறு மேற்கூறிய தினங்களையும் மாற்றிக் கொள்ளாமல், சுமார் 1,500 வருஷங்களுக்குமுன் அநுஷ்டித்து வந்த தினங்களையே இப்பொழுதும் அநுஷ்டித்து வருகின்றோம்.

ஆனால் இந்த 'அபஸரணவிதி'யை நமது முன்னோர்கள் நன்றாய் அறிந்திருந்தார்கள் என்றும், அந்தந்தக் காலங்களில், விஷுவஸ்தானங்களையும், அயநாதிகளையும்குறிப்பிட்டு, அவைகளுக்கிணங்கத் தங்கள் வர்ஷாதிகளையும், பஞ்சாங்கங்களையும் திருத்திக்கொண்டு வந்திருக்கின்றார்கள் என்றும், வேதங்களிலேயும், இதிகாஸம், புராணங்கள் முதலான பூர்வ க்ரந்தங்களிலேயும் அநேக ஆதாரங்கள் அகப்படுகின்றன. இவ்விஷயங்களைப்பற்றி 'வர்ஷம்' என்னும் வியாஸத்தில் விசேஷமாய்ச் சொல்லப்படும்.


ஜ்யோதிஷ முறைப்படி, தற்கால அநுஷ்டானத்தில், சூரியன் தக்ஷிண அபிமுகமாய் (Southerly Course) ச் செல்லுங்காலத்தை தக்ஷிணயநம் என்றும், உத்தராபிமுகமாய் (Northerly Course) ச்

---

* ஆர்யபட்டர் பிறந்தகாலம் 476 கி. பி. 'ஆர்யபட்டீயம்' என்ற ஜ்யோதிஷநூல் எழுதிய காலம் 499 கி. பி. வராஹமிஹிரர் பிறந்தகாலம் 505 கி. பி. இறந்தகாலம் 587 கி. பி. என்று கணிக்கப்பட்டிருக்கின்றன.

செல்லும் காலத்தை உத்தராயணம் என்றும், சொல்லுகின்றோம்.
ஆனால், ஆதிகாலத்தில், சூரியன் பூமத்யரேகைக்குத் தெற்கே ஸஞ்
சரிக்கும் காலத்துக்கு தக்ஷிணாயநம் என்றும், பூமத்ய ரேகைக்கு
வடக்கே ஸஞ்சரிக்கும் காலத்துக்கு உத்தராயணமென்றும் வழங்கி
வந்த 'ரிக்வேதங்களிலும்' 'தைத்ரியம்'முதலான ஸம்ஹிதைகளிலும்
அநேக ஆதாரங்கள் அகப்படுகின்றன.

குறிப்பு:—




AB. உத்தரவீதி (Tropic of Cancer).

C D. தக்ஷிணவீதி (Tropic of Capricorn).

1. தக்ஷிணாயநாதி — Summer Solstice
2. சரத்விஷுவ — Autumnal Equinox
3. உத்தராயணாதி — Winter Solstice
4. வஸந்தவிஷுவ — Vernal Equinox

4-2 பூமத்யரேகை — Equator
1-2-3-4 சூரியவீதி — Ecliptic

3-4-1 அநுஷ்டாநத்தில் உத்தராயணம்
4-1-2 வேதகாலத்தில் உத்தராயணம்
1-2-3 அநுஷ்டாநத்தில் தக்ஷிணாயநம்
2-3-4 வேதகாலத்தில் தக்ஷிணாயநம்.

அக்காலத்தில், 'வஸந்தவிஷுவ' உத்தராயணாதியாகவும், 'சரத் விஷுவ' தக்ஷிணாயநாதியாகவும் அமைந்திருந்தனவாய்த் தெரியவருகின்றன.*

* Tilak's Arctic Home of the Vedas, P. 67.

அப்போது உத்தராயணத்துக்கு 'தேவயானம்' அல்லது 'தேவபதம்' (Gods' path) என்றும், தக்ஷிணாயநத்துக்கு 'பித்ருயானம்' அல்லது 'பித்ருபதம்' (Path or Yana of Pitris) என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலும், தேவயாந காலமான ஆறுமாதமும் ஒரே பகலாகவும், பித்ருயாந காலமான தக்ஷிணாயநம் முழுமையும் ஒரே இரவாகவும், இருந்ததாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவ்வாறு உலக அற்புதங்களை வர்ணிக்கும் மேற்கூறிய வேத வாக்கியங்களின் கருத்துகளும், தற்காலத்தில்* ப்ரத்யக்ஷதர்சிகளால் சொல்லப்படும் உத்தரத்ருவ (North pole) வர்ணனைகளும், மத்யகாலத்தில்† 'மஹாமேரு'வர்ணனைகளும் ஒத்திருப்பதால், மேற்கூறிய வேதவாக்யங்கள், முற்காலத்தில், உத்தரத்ருவவாஸிகளால், கவநம் செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும், புராணங்களில்‡ கூறும் மஹாமேரு உததரத்ருவத்தைக் குறிக்கிறதென்றும், நமது முன்னோர்கள் உத்தரத்ருவப் பிரதேசங்களில் முன் ஒரு காலத்தில் வஸித்து இருக்கவேண்டுமென்றும் வித்வத்ஸ்ரீ திலகர் என்பவர் அபிப்பிராயப்படுகிறார்.§

* உத்தரத்ருவக் காட்சிகள்:—ஆகாச விதானமானது நமது தலைக்கு நேர்மேலாகச் சக்ராகாரமாய்ச் சுழன்றுவரும அற்புதக் காட்சியானது, உத்தரத்ருவத்தின் ஓர் விசேஷ இயற்கை அற்புதமே. அவ்வற்புதங்களின் வர்ணனைகள் எந்த ஜாதியாரின் (பூர்வ) க்ரந்தங்களில் அகப்படுகின்றனவோ, அவர்களாவது, அல்லது அவர்களுடைய முன்னோர்களாவது, ஒரு காலத்தில் உத்தரத்ருவப் பிரதேசங்களில் வஸித்திருக்கவேண்டும்.

†பஞ்சவிம்சத்தாந்திகா, அத். 15.

‡மஹாபாரதம் வநபர்வம் அத்தியாயம் 163,164.

§திலகரின் 'வேதங்களின் உத்தரத்ருவ உற்பத்தி' பக்கம் 65ல், இதன் விவரம் காண்கலாம். ரிக்வேதம் 10-வது மண்டலம், 89வது ஸூக்தம், 2, 4வது ரிக்; ரிக்வேதம் 2-வது மண்டலம், 15-வது ஸூக்தம், 2-வது ரிக், இவ்விஷயங்களைப்பற்றி இன்னும் விசேஷமாகவும், தெளிவாகவும் அறிய விரும்புகிறவர்கள் அவ்வித்வானால் இயற்றப்பட்ட உயர்ந்த கிரந்தங்களாகிய Arctic Home of the Vedas (வேதங்களின்உத்தரத்ருவ உற்பத்தி), Night of the Gods ('தேவராத்ரி, 4-வது அத்தியாயம்), Orion ('மிருகசீர்ஷகாலம்' 2-வது அத்தியாயம், 24-30வது பக்கம்) இவைகளின் மூலமாயறிந்துகொள்ளலாம்.

மேற்கூறிய விஷயங்களெல்லாம், 'பூமத்யஸித்தாந்த'த்தை (Geo-centric System) அநுஸரித்தே விவரிக்கப்பட்டன. ஆனல், சூரியமத்யஸித்தாந்த' (Helio-centric System)ப் படி, அயநங்கள் ஏற்படுகின்றன. அதாவது, 'பூமத்யதலமும்' (plane of the terrestrial equator) சூரியமத்யதலமும் ஓரே தல (plane) த்தில் இருக்குங்கால், சூரியன் பூமத்தியரேகைக்கு நேர் உச்சியில் வருஷத்தில் இரண்டு தினங்கள் மாத்திரம் பிரகாசிக்கின்றான். அதனல் இரண்டு விஷுவதினங்களும் ஏற்படுகின்றன. வஸந்தவிஷுவவுக்குப் பிறகு பூமியின் வடபாகம், கொஞ்சம் கொஞ்சமாய்ச் சூரியன் பக்கத்தில் உயர்வதால், சூரியன் வடக்கே ஸஞ்சரிப்பதாயும், மறுபடி தக்ஷிணயநாதிமுதல், மறுபடி கொஞ்சங் கொஞ்சமாய் நிமிர்வதால் சூரியன் மறுபடி தெற்கே திரும்பிவருவதாயும், மறுபடி பூமத்திய தலமும், சூரியமத்தியதலமும் ஸமதலமாகையால் மறுபடி 'சரத்விஷுவ' வும், அதுமுதல், பூமியின் தென்பாகம் சூரியனை நோக்கி உயர்வதால், சூரியன் தெற்குநோக்கிச் செல்வதாயும், தக்ஷிணவீதி சென்றதும், மறுபடி பூமி நிமிர்வதாதல், மறுபடி சூரியன் திரும்பி வடக்குமுகமாய் பூமத்யரேகாப் பிரதேசம் நோக்கிச் செல்வதாயும் நாம் காண்கின்றோம். இவ்விதமான பூசலநத்தாலே தான் மேற்கூறிய அயநவிபாகங்கள் ஏற்படுகின்றன. இப்பொழுது கடைசியாய்க் கூறப்பட்ட விஷயங்கள் சூரியமத்யஸித்தாந்தம் என்று பெயர். மேற்குத்தேசத்தார்களால் சமீபகாலத்தில் 16-வது நூற்றூண்டில் 'கோபர்னிகஸ்' என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதாய்ப் பெருமை பாராட்டப்படும் இந்த ஸித்தாந்தமானது, நமது தேசத்தில், சுமார் 1,500 வருஷங்களுக்கு முன்னதாகவே கி. பி. 5-வது நூற்றூண்டின் இறுதியில், 'ஆர்ய பட்டர்' என்ற ஜ்யௌதிஷிக நிபுணரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கோபர்னிகஸ் காலத்துக்குமுன், ஐரோப்பாதேசத்தில் (கி. பி. 130வருஷம் பிறந்த) தாலமியின்

ஸித்தாந்தமான பூமத்யஸித்தாந்த (Geo-centric System) மே அங்கீகரிக்கப்பட்டுவந்தது. இந்த சூரியமத்யஸித்தாந்தமானது* ஆர்ய பட்டரால் முதல் முதல் ஸ்தாபிக்கப்பட்டபொழுது அந்தக் காலத்தில் பின்வந்த வராஹமிஹிரரால், அங்கீகரிக்கப்படாமல், ஆக்ஷேபிக்கப்பட்டிருக்கின்றது. அக்காலத்தில், நடந்த விவாதங்களைக்†கவனிக்கும்பொழுது நமது முன்னோர்கள் இந்த ஜ்யோதிஷ சாஸ்திரங்களில் எவ்வளவோ பயிற்சியடைந்திருந்ததாகத் தெரிய வருகின்றது.

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்.

---

* சூரியமத்யஸித்தாந்தம்:— (Helio-centric theory) சூரியன் மத்தியில் இருப்பதாகவும், பூமியும் மற்றக் கிரகங்களும் அதைச் சுற்றிவருவதாயும் சொல்லுவது. ஆர்யபட்டரால் ஸ்தாபிக்கப்பட்டது.

பூமத்யஸித்தாந்தம்:—(Geo-centric theory) பூமி மத்தியிலிருப்பதாயும், சூரியனும மற்றைச்கிரகங்களும் அதைச்சுற்றிவருவதாயும் சொல்லுவது. வராஹமிஹிரர் முதலான மற்ற ஜ்யௌதிஷிகர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

† வராஹமிஹிரர் பஞ்ச சித்தாந்திகா அத்தியாயம் 13ல், சு. 6.

ப்ரமதி ப்ரமஸ்திதேவ
க்ஷிதிரித்யபரே வதந்தி ந உடுகணா:
யத்யேவம்ஶ்யேநாத்யா
நகாத் புன: ஸ்வநிலயம் உபேயு:

பூமியானது யந்திர சக்கியாற்போலச் சுழன்றுவருகின்றதென்றும், தாரகணங்கள் சுற்றவில்லையென்றும் (ஆர்யபட்டர் முதலான) மற்றவர்கள் சொல்லுகின்றார்கள். அது உண்மையானுல் (உயரப்பறக்கும்) கழுகு முதலான பக்ஷிகள் மறுபடி பூமியில் தன்னிலயத்து (கூட்டு)க்கு வந்துசேரமுடியாதல்லவா?.

444

# இஷ்டம், பூர்த்தம், தானம்.

நமது நாட்டினர் கொள்கையின்படி ஆன்மாக்கள் இகத்தில் பூர்வ கர்மங்களின் முறையால் பலவாறு பேதிக்கப்பட்டிருப்பினும், அவைகள் மின்னல்போல் தோன்றிச் சடிதியில் மறைகின்ற உடல் என்னும் பந்தம் ஒழிந்தபின்னர் நற்கதியென்னும் பரலோகநிலையை யடையுமாறு அந்தந்த ஆன்மாக்களின் பக்குவநிலைக்குத் தக்கபடி இம்மையில் அநுஸரிக்கவேண்டிய கடமைகளைப்பற்றி ஆன்றோர்கள் பற்பல முறைகளை விதித்திருக்கின்றனர். இம்முறைகளில் ஒன்று, இனிப்பிறப்பதின்றி ஆன்மா சுத்தவடிவையெய்தி நிரதிசயாநந்தத்தைப் பெற்று நித்தியமாயமர்ந்து விளங்குவதற்காக ஏற்பட்டது. அது மோக்ஷமார்க்கம் எனவும், வீடுபேற்று முறை எனவும், நிச்சிரேயஸதர்மம் எனவும் கூறப்படும். அதற்குத் தாழ்ந்தமுறை வேறொன்று. அம்முறையானது இகத்தில் ஆன்மா புரியும் புண்ணியத்தின் அளவுக்குத் தக்கவாறு உடலொழிந்தபின் சுவர்க்கலோகத்திலமர்ந்து தேவாநந்தத்தையடைந்து, அப்புண்ணியத்தின் பலன் புஜிக்கப்பட்டபிறகு மறுபிறப்பையடையுந் தன்மையைக் குறிப்பதாகும். அதற்குக் கர்மமுறையென்றும், அப்யுதயதர்மமென்றும் பெயர். இந்த இரண்டு முறைகளையும் அநுஸரிக்க வல்லமையற்ற பிராணிகள் அதோலோகம் என்று சொல்லப்படுகிற நரகத்திற்கு உள்ளாகித் தங்களுடைய புன்செயலுக்குத் தக்கவாறு அங்கே தண்டனையையநுபவித்துப் பின்னர் இழுக்கு நிறைந்த பிறவிகளை யடைந்து ஜநிக்கின்றார்கள். மேற்குறித்த இரண்டாவது முறையாகிய அப்யுதயதர்மமானது ஆன்மாக்களின் வர்ணம், ஆச்ரமம், மநப்பக்குவம் இவைகளுக்குத் தக்கவாறு மும்முறையாக பேதிக்கப்பட்டிருக்கின்றது. அவைகளுக்கு முறையே (1) இஷ்டம் அல்லது வேள்வி எனவும், (2) பூர்த்தம் அல்லது ஒப்புரவு எனவும் (3) தானம் அல்லது தக்கார்க்கு அளித்தல் எனவும் பெயர். இம்மூன்றும் பலன்களை நாடிச் செய்யப்படுவனவாகும். இஷ்டம் அல்லது வேள்விக்குச் சுவர்க்கத்தையடைந்து அநுபவிக்கும் அநித்தியமான சுகமே பலனாகும். பூர்த்தம் அல்லது ஒப்புரவு என்பது பிறர்களுடைய செளக்கியத்தை நாடி உலகத்தின்கண் தண்ணீர்ப் பந்தல், களைப்பாறுமிடம், சுமைதாங்கி, ஊருணி, வைத்தியசாலை

புத்தகசாலை, வித்யாசாலை முதலியவற்றை ஏற்படுத்துவதாகும். எவ்வளவுகாலம் வரையில் இந்தத் தர்மங்கள் உலகின்கண் குறைவின்றி நடைபெறுகின்றனவோ அவ்வளவுகாலம்வரை இவைகளை ஸ்தாபிப்பவன் சுவர்க்கலோகத்தில் அமர்ந்து அந்நிலைக்கு உரிய சுகங்களை அநுபவிக்கின்றான் என்பது சாஸ்திரங்களின் கருத்து. தாநம் அல்லது தக்கோர்க்கு அளித்தல் என்னும் தர்மமானது காலம், தேசம், பாத்திரம் அல்லது பெறுவோனின் பண்பு, விதி, திரவியங்களின் சுத்தி இவைகளை ஆராய்ந்து அளித்தலாகும். இது பெறுவோருடைய யோக்கியதைக்கும் மநமகிழ்ச்சிக்குந்தக்கவாறு உண்டாகும் பலன்களைச் சுவர்க்கலோகத்திலடையும் பிரயோஜநத்தையுடையது. இந்த இஷ்டம், பூர்த்தம், தாநம் என்கிற மூவகைத் தர்மங்களும், புரிவோனால் தனக்கு உண்டாகும் பிரயோஜநத்தைக் கருதிச் செய்யப்படுகின்றமைபற்றி ஸகாமம் எனவும் நிமித்தங்குறித்துச் செய்யப்படுவதுபற்றி நைமித்திகம் எனவும் பெயர்பெறும். இவைகளால் உண்டாகும் பலனானது, ஆகி இருந்து அழியும் ஏனைப் பொருள்களைப்போலவே சொற்பகாலத்திற்குள் அழியக்கூடிய தன்மையையுடையது. ஸகாமம் என்பதற்குப் பலனை விரும்பிச் செய்யப்படுவது என்பது பொருளாகும். நைமித்திகம் என்பதற்குப் புநிதமான ஒரு க்ஷேத்திரத்திற்குச் செல்லுங்காலத்து அந்தத் தேசத்தையும், பருவகாலம் முதலிய புண்ணிய முகூர்த்தம் நேருங்கால் அந்தக் காலத்தையும், உயர்ந்தசீலம் பொருந்திய ஒருவர் வருங்கால் அந்தப் பாத்திரத்தையும், பிறருடைய மநம் உவக்கத்தக்க பொருள் கையுறுங்கால் அந்தத் திரவியத்தையும் நிமித்தமாகக்கொண்டு அவ்வவைகளுக்கு ஏற்பட்ட விதி வழுவாது அளிப்பது என்பது பொருளாம். இம்மூவகைத் தர்மங்களையும் செய்வது மட்டும் தனக்குக் கடமையென்று கருதிச்செய்து, அதனால் உண்டாகும் எப்பலனையும் தனக்கென வேண்டாமல், அப்பலன்களை ஒருவன் ஈசுவரனுக்கு அர்ப்பணஞ்செய்யின் அதற்கு நிஷ்காமம் என்று பெயர். அம்முறை நிஷ்காமமாகச் செய்யப்படுந் தர்மமானது பிரஹ்மஜ்ஞாநத்திற்கு இன்றியமையாச் சாதநமாகிய சித்தசுத்தியை விளைவிக்கின்றது. ஒரு வேள்வியைச் செய்பவன் அதன் பலனை நாடாது செய்தால் அவனுக்கு அது சித்தசுத்தியையுண்டுபண்ணுகின்றது. தவிர

வும், அந்த வேள்வியால் ஆராதிக்கப்படும் தேவதைகளின் அங்கியாகிய பரமாத்மா ஸந்தோஷமுற்று அவன் வஸிக்கும் நாட்டிலுள்ள சகல பிராணிகளும் நன்றாகத் தழைத்து வாழும்வண்ணம் அவர்களுக்கு நல்ல மழையையும், ஆரோக்யத்தையும், ஸந்தோஷத்தையும் அளிக்கின்றான். பூர்த்தம் அல்லது ஒப்புரவு என்னும் தர்மத்தைச் செய்பவன் அத்தர்மத்தை 'நான் செய்தேன்' என்கிற அகங்காரமில்லாமலும், 'இன்னான் செய்தான்' என்கிற பிரதிஷ்டையை வரையாமலும், எவ்விதக் கீர்த்தியையும் அபேக்ஷிக்காமலும் செய்தால் அதுவும் சித்தசுத்திக்கே காரணமாகின்றது. இம்முறையாகவே தானமும் ஒரு பலனையும் நாடாமல் செய்யப்படும் பக்ஷத்தில், அது தியாகம் அல்லது ஒழித்தல் என்னும் சுபாவத்தையுடையதாகின்றது. அதற்குத் தேசம் முதலிய நிமித்தங்களை அபேக்ஷிக்க வேண்டிய நியமமில்லை. அதன் பலனும் சித்தசுத்தியைப் பயப்பதேயாம். ஆகவே, ஸகாமமாகச் செய்யப்படும் தர்மங்கள் சொற்ப சுகத்துக்குக் காரணமாயினும் சித்தசுத்தியை விளைவிக்காமல், அவைகளின் பலனை புஜிக்கவேண்டிய நிலைமையாகிய பந்தத்தை உண்டுபண்ணுவதாகவும், பகவானின் அங்கரூபமாகிய சில தெய்வங்களை அல்லது சில பிராணிகளைமட்டும் திருப்தியடையும்படி செய்யக்கூடியதாகவும் இருப்பதால் மோக்ஷத்தை விரும்புகிறவர்கள் அந்தத் தர்மங்களை ஒரு பொருட்டாக மதிக்கமாட்டார்கள். அவர்கள் என்ன பாடுபட்டாயினும் சித்தசுத்தியையே அடையவேண்டிய நோக்கமுள்ளவர்களாதலால் இஷ்டத்தை நிஷ்காமமாகச் செய்து யக்ஞரூபமாக இருக்கின்ற பரமாத்மாவையே உபாஸித்தும், பூர்த்தத்தை ஸ்தாபித்து ஒவ்வொரு பிராணிகளிடமும் விளங்குகின்ற பரமாத்மாவையே திருப்திசெய்தும், நிஷ்காமதானம் என்னும் தியாகத்தினால் பொருளின்கண்ணுள்ள ஆசையையொழித்து வைராக்கியம் என்னும் உயர்வான மனப்பான்மையைப் பழகியும் சித்தசுத்தியைப் பெற்று, அதனால் எவ்விதப் பிரதிபந்தகமுமின்றிப் பிரஹ்மஜ்ஞானத்தையே யடைகின்றார்கள். இனி, மேலே விவரிக்கப்பட்ட தர்மங்களின் விபாகங்களைப்பற்றித் தனித்தனி கூறுவோம்.

### 1. இஷ்டம்

இந்தப் பதமானது 'இஷ்' என்னும் தாதுவிலிருந்து உண்டானது. அந்த தாதுவுக்கு ஒன்றையடைவதற்கு முயலல் என்பது பொருள்.

இஷ்டமென்றால் முதலில் பலனைநாடிச் செய்யப்படும் சத்கருமமெ ன்ற பொருளுடையதாயிற்று. ஒரு பொருளை அர்ப்பணஞ்செய்து, ஆராதித்தல் என்னும் பொருளையுடைய யஜ் என்னுந் தாதுவிலிரு ந்து உண்டான யக்ஞம் என்னும் பதமும் இஷ்டம் என்னும் பதமும் சற்றேறக்குறைய ஒரேவித தாத்பர்யத்தில் கைக்கொள்ளப்பட்டு வருகின்றன. புல்லறிவும் புன்மொழியுமுடைய மானிடர்கள் தேவ தைகளின் அருள் இல்லாவிடில் எந்தப் பிரவிர்த்தியிலும் பூர்ணமான பலனையடையக்கூடாமைபற்றி அவர்கள் தாங்கள் செய்யும் முயற் சிக்கு அநுகுணமாய் உதவிபுரிந்து பலனையளிக்கும்படி தேவதை களை வழிபாடுசெய்யும் முறைதான் இஷ்டம் என்றும் யக்ஞம் என் றும் சொல்லப்படுகின்றது. அந்தத் தேவதைக்குள்ளாவார் ஆதி வேதமாகிய ருக்வேதத்தில் மொழியப்பட்ட சூர்யன், திக்பாலர்கள் அருணன், ஸந்தி முதலியவர்களாம். அவர்களை ஆராதிப்பதற்காக ஏற்பட்ட முறைகளைப்பற்றி விவரித்து யஜுர்வேதமானது கூறுகி ன்றது. மானிடர்களுக்கு உடலுடன் பிறந்த கடன்கள் நான்கென் பது வேதங்களின் கொள்கை.

“𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌹𑌰𑌹𑌰𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾 𑌅𑌶𑌨𑌮𑌿𑌚𑍍𑌛𑌨𑍍𑌤𑍇
𑌅𑌰𑍍𑌧𑌮𑌾𑌸𑍇 𑌦𑍇𑌵𑌾 𑌇𑌜𑍍𑌯𑌨𑍍𑌤𑍇
𑌮𑌾𑌸𑌿 𑌪𑌿𑌤𑍃𑌭𑍍𑌯𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇
𑌸𑌂𑌵𑌤𑍍𑌸𑌰𑍇 𑌵𑌨𑌸𑍍𑌪𑌤𑌯𑌃 𑌫𑌲𑌂 𑌗𑍃𑌹𑍍𑌣𑌨𑍍𑌤𑌿”

இதன்பொருள்:—தினந்தோறும் மநுஷ்யர்கள் அசநத்தை விரும் புகிறார்கள். பதினைந்து நாட்களுக்கு ஒருதரம் தேவருடைய பசி யும், ஒரு மாசத்திற்கொருதரம் பித்ருக்களுடைய பசியும் தீர்க்கப்பட வேண்டியன. ஒரு வருஷத்திற்கொருதரம் வநதேவதைகள் பல னைக் கிரகித்துக்கொள்ளுகிறார்கள் என்பதாம். இந்தக் கடமைகளை மானிடர்கள் நிறைவேற்றிக்கொள்ளாவிடில் இம்மைக்கும் மறுமைக் கும் அவர்களுடைய பிரவிர்த்திகளெல்லாம் பூர்ணமான பலனை அளி க்கமாட்டா எனக்கருதி இஷ்டம் அல்லது யக்ஞம் என்னும் முறை யானது ஏற்பட்டிருக்கின்றது. பகவத்கீதை 3-ம், அத்தியாயம், 14, 15–வது சுலோகங்களினால் “பிராணிகளின் சரீரம் உணவினின் றும், அவ்வுணவு மழையினின்றும், அம்மழை யாகத்தினின்றும்,

யாகம் கர்மத்தினின்றும், கர்மம் பிரஹ்மத்தினின்றும் உண்டாகின்றன" என்று சொல்லப்பட்டிருத்தலை அறிக. பிரஹ்மமானது யாகத்திலேயே நிலைபெற்றது என்று மேலோர்கள் கருதி யாகத்தை விதித்திருக்கின்றனர். 'யாகத்தினால் பிராணிஹிம்சை நடத்தப்படுவது மகாபாதகம் ஆகாதோ?' என்கிற ஒரு கேள்வி கேட்கப்படலாம்.

"𑌯𑌜𑍍𑌞𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌶𑌿𑌨𑌸𑍍𑌸𑌨𑍍𑌤𑍋
𑌮𑍁𑌚𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑍈𑌃"

என்னும் கீதாசாஸ்திர வசநத்தினால் "சுத்தஸ்வபாவமுடையவர் யக்ஞத்தில் தேவர்களுக்கு ஆகுதி செய்யப்பட்டு மீதமாகும் அந்தத்தை புஜித்து ஸர்வபாபங்களினின்றும் நிவிர்த்திக்கப்படுகின்றார்கள்" என்று கூறப்படுவதால் யக்ஞகர்த்தாவுக்குப் பிராணியை வதைக்கும் பாபமானது உண்டாகமாட்டாதென்பது திண்ணம். ஏனென்றால் யக்ஞம் செய்கின்றவன் (ஸந்தஃ) சுத்தஸ்வபாவமுடையவனாயிருந்தால் அவன் தன்னுடைய புண்ணியத்தின் வழியினால், தத்காலத்தில் ஒரு இழிந்த பிராணியாயிருப்பதும், பின்னர்க் கணக்கற்ற ஜன்மங்களின் வழியாகச்சென்று இறுதியில் பிரஹ்மநிஷ்டனான சுரோத்திரியனைப் பிறந்து அப்பால் உயர்ந்த பதவியை அடையவேண்டுவதுமான யாகப்பசுவிற்கு அப்பொழுதே அந்த உயர்ந்த பதவியை அளிக்கின்றானதலாலும், அந்தப் பசுவிற்கும் உயர்ந்த பதவியையளித்து உலகத்திலுள்ள மற்றைய எல்லாச் சராசரங்களுக்கும் க்ஷேமத்தை யுண்டுபண்ணுகின்றானதலாலும் யக்ஞத்தில் பசுவைக் கொல்வது பிராணிஹிம்சை என்னும் பாதகம் ஆகமாட்டாது. ஆனால், யக்ஞத்தைச் செய்வதற்குத் தகுந்த சுத்தஸ்வபாவம் என்பது என்ன, என்பதை நாம் கவனிக்கவேண்டும்.

" 𑌕𑍁𑌲𑌮𑌰𑍍𑌯𑌾𑌦𑌾𑌵𑌿𑌦𑌾𑌨𑍍
𑌪𑍍𑌰𑌜𑌾𑌰𑌕𑍍𑌷𑌣𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃।
𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌮𑍋𑌜𑌿𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌃
𑌸𑌵𑌨𑌵𑌾𑌵𑌰𑌿𑌤𑌮𑍍𑌕𑍍𑌷𑌮𑌃॥"

இதன்பொருள்:—யக்ஞம் செய்பவன் தன்னுடைய குலதர்மத்தை விடாது கைக்கொண்டு நடக்கவேண்டும். அவன் வேதம் முதலாக

வுள்ள எல்லா சாஸ்திரங்களையுங் கற்றறிந்து அவைகள் விதிக்கும் வண்ணம் நடந்துவரவேண்டும். தன்னால் இயன்றமட்டும் பிரஜை களை ரக்ஷிக்கவேண்டிய தர்மத்தை அறிந்தவனாக இருக்கவேண்டும். மோக்ஷத்தையடையவேண்டிய இச்சையுடையவனாக இருக்கவேண் டும். அவனுக்குக் கோபம் கூடாது என்பதாம். இத்தனை பண்பு களும் அவனுக்கு நிறைந்திருந்தால் மட்டும் அவன் யாகத்தைச் செய்ய, (அதனால் தன்னை மேன்மைப்படுத்திக்கொள்ளவும், யாகப் பசுவுக்கு உயர்ந்த பதவியைக் கொடுக்கவும், உலகத்திலுள்ள சகல சராசரங்களுக்கும் க்ஷேமத்தை யுண்டுபண்ணவும்) யோக்கியனாகி றான். இவ்விதமான நிர்ப்பந்தங்களுக் குள்ளடங்கிய சுத்த ஸ்வபாவத்தை யுடையவர்கள் இக்கலியுகத்தில் இருப்பார்களோ! என்பது ஒரு சங்கையாகும். மநுஷ்யன் மானிடப் பிறவியை யடைவதற்குமுன் பலவிதமான இழிந்த பிராணிகளாகப் பிறந்து உயிர்தரித்த காரணத்தினால் அந்தப் பிறவிகளிலிருந்து அவனுக்குக் கிடைத்திருப்பது இச்சை என்னும் ஓர் இழிந்த பண்பாகும். மனி தனாகப் பிறந்தவுடன் நல்ல அறிவினால் அவன் அடையவேண்டு வது நீதி என்னும் உயர்ந்த பண்பாகும். இந்த இரண்டு பண்புக ளும் அவனுடைய மநத்தைப்பற்றி நின்றபோதிலும் காலத்தின் ஸ்வ பாவத்தினால் அப்பண்புகளின் அளவானது வேறுபாட்டையடை கின்றது. எப்படியெனில், தர்மயுகமாகிய கிருதயுகத்தில் மூன்று பாகம் நீதியும் ஒரு பாகம் இச்சையுமாகப் பரவியிருந்தது. திரேதா யுகத்தில் இரண்டு பாகம் நீதியும் இரண்டு பாகம் இச்சையுமாகவும், துவாபரயுகத்தில் ஒரு பாகம் நீதியும் மூன்று பாகம் இச்சையுமாகவும் இருந்தது. பாபமே மிகுதியாகத் திரண்டு பிரகாசிக்கும் இக்கலியு கத்தில் நீதியென்பது முழுவதுங் குன்றிப்போய் இச்சையே பூர்ண மாகப் பரவி நிற்பதால், மேலே கண்ட சுத்தஸ்வபாவமுடையவர் கள் இக்காலத்தில் இருப்பது அரிதினும் அரிது. இந்தக் காரணத் தினால் தான் இக்கலியுகத்தில் நடத்தப்படும் யக்ஞத்தினால் யக்ஞகர் த்தாவுக்காவது, யக்ஞ பசுவுக்காவது, உலகங்களிலுள்ள சராசரங்க ளுக்காவது யாதொரு நன்மையும், உண்டாக நிமித்தமில்லையென வும், பிராணி ஹிம்ஸை என்னும் ஒரு பெரிய பாதகமே நிலைநிற்கு மெனவுங் கருதிக் கலியுகத்தின் தர்மாசாரியரான ஸ்ரீ பராசரமகா

முனிவர் கலியுகத்தில் யக்ஞத்தை அநுஷ்டிக்கக் கூடாதென்று விதித்திருக்கின்றார். ஆனல், கலியுகத்தின் ஸ்வபாவத்திற்குள்ளாகாத சுத்தஸ்வபாவமுள்ள மஹான்கள் அங்குமிங்கும் இருக்கலாம். அவர்கள் செய்யும் யக்ஞத்தை இங்கு நாம் நிந்திக்க முயலவில்லை. இஃதன்றியும் யக்ஞகர்த்தாவுக்கு உத்தம சீலம் பொருந்திய மனைவியிருக்கவேண்டும்.

* * * *

* * *—மனைத்தக்காள்

மாண்பிலள் ஆயின் மணமகன் நல்லறம்
பூண்ட புலப்படா போல்.

என்பதைக் காண்க. யக்ஞத்திற்குத் தகுந்த ஆதேஷ்டாவும் ரித்துவிக்குகளும், சுத்த திரவியங்களும் அமையவேண்டும். அவர்களைப் பெறுவதும், இக்காலத்தில் மிகவும் அரிதாகும். இது கருதித்தான் எல்லா யக்ஞங்களுக்கும் பிரதிநிதியாக வேதமானது அக்நிஹோத்ரத்தையும், ஸ்மிருதியானது ஔபாஸநம், பிரஹ்மயக்ஞம் இவைகளையும் மானிடர்கள் சாவதாநமாக அநுஸரித்து உய்யும் வண்ணம் விதித்திருக்கின்றன.

“ஜ்யோதிஷ்டோமேந ஸ்வர்க்ககாமோ யஜேத”

என்கிற வேதவசநப்படி ‘பரமபதத்தை அளிக்கக்கூடிய ஜ்யோதிஷ்டோமத்தை சுவர்க்ககாமத்தை யுடையவன் செய்தால் சுவர்க்கத்தை யடைவன்’ என்று விதித்திருக்கும் வண்ணம் மோக்ஷபதவிக்கே அநுகூலமான முற்கூறிய யக்ஞம் ஸகாமமாகச் செய்யப்பட்டால் சுவர்க்கபலனையும், நிஷ்காமமாகச் செய்யப்பட்டால் சித்தசுத்தியை விளைத்துப் பிரஹ்மக்ஞாநத்தையும் அளிக்குமென்பது தெளிவாய் விளங்கும். பராசரமகாமுனிவர் அவருடைய ஸ்மிருதியில் யக்ஞத்தின் பெருமையை நிந்தித்தவரல்லர். அதற்குத்தக்க அதிகாரிகள் இக்கலிகாலத்தில் துர்லபமென்பது கருதியே யக்ஞம் செய்யவேண்டாமென்று கட்டளையிட்டிருக்கின்றனர்.

அப்படியாயின், யாகத்தினல் மானிடர்கள் தேவர்களைத் திருப்தியடையச் செய்யவேண்டுமென்றும், அந்தத் தேவர்கள் அப்பொழுதுதான் மானிடர்களை விருத்தியடையச் செய்வார்கள் என்றும்,

யாகங்களினல் மகிழ்ந்து அளிக்கும் ஸம்பத்துக்களைத் தேவர்களுக்கே விநியோகித்து மீதத்தை மானிடர்கள் புஜிக்கவேண்டுமென்றும், மானிடர்களுக்குக் கிடைக்கும் பொருள்களைத் தேவர்களுக்கு விநியோகிக்காமல் மானிடர்களே புஜிப்பார்களானல், அவர்கள் திருடர்களேயாகிறார்கள் என்றும், சாஸ்திரவசநமானது திண்ணமாகப் பிறந்திருக்கின்றதே! அதை விலக்குவதற்கு என்ன முறை இருக்கின்றது?' என்று ஒரு ஆசங்கை யுண்டாகலாம். அந்தச் சங்கையை நிவிர்த்திக்கும் வண்ணமாகப் பெரியோர்கள் பலமுறைகளை இயற்றியிருக்கிறார்கள். எவ்வாறு எனில், "யஜ்" என்னுந் தாதுவுக்கு ஆராதித்தல் என்னும் பொருளிருப்பதால், 'யக்ஞம்' என்னும் பதத்திற்கு ஆராதனையென்று பொருள்கொண்டு, யக்ஞங்களுக்குப் பிரதிநிதியாகப் பற்பல ஆராதனைகளைப் பெரியோர்கள் விதித்திருக்கின்றார்கள், மேலும், யக்ஞத்தை நிஷ்காமமாகச் செய்யும் வைராக்யமுடையவர்கள் இல்லாதிருப்பது கண்டும், ஸகாமமாகச் செய்பவர்கள் அடையும் பலனனது மறுபிறவிக்கே ஏதுவாயிருப்பதுபற்றியும், யக்ஞமானது இக்காலத்தில் அநுஷ்டிக்கத் தகாததென்பதும் மேலோர் கொள்கை.

"நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை."

என்று திருவள்ளுவருங் கூறியிருக்கின்றார். ஆனதுபற்றி, தேவயக்ஞம், பிதுர்யக்ஞம் முதலியவைகளை விதித்து, அவைகளினல் மானிடர்கள் யக்ஞங்களினல் அடையும் நற்பலன்களை அடையவேண்டுமென்பது பெரியோர்களின் விதியாகும்.

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை."

இதனல், ஒருவன் தன்னுடைய முயற்சியினல் அடையும் பொருளை ஆறுபங்கு செய்து, அவைகளில் அரசனுக்கு அளிக்கப்படும் ஒரு பங்குபோக,மிகுதியாயுள்ள ஐந்து பங்குகளில்,ஒரு பங்கு தேவர்களுக்கும், ஒரு பங்கு பித்ருக்களுக்கும், ஒரு பங்கு அதிதிகளுக்கும், ஒரு பங்கு சுற்றத்தார்களுக்கும், ஒரு பங்குதனக்குமாக விநியோகிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கின்றது.

(1) இவற்றுள் தேவாராதனையானது அதிகார பேதங்களுக்குத் தக்கவாறு அமைந்துள்ளது.

1. உத்தமமானது உயர்ந்த வர்ணத்தாருக்கு விதிக்கப்பட்டிருக்கும் அக்நிஹோத்ரம். இதில், பிராணியின் ஹிம்ஸையொன்றுமிலாது அக்நியின்மூலமாக எல்லாத் தெய்வங்களும் ஆராதிக்கப்படுகின்றார்கள். இம்முறையைக் கைப்பற்றுவதற்கு அத்யயநம், ஆசாரம் விரதம், பத்நீ, திரவியம், ரித்விக்கு, மந்த்ரம் முதலிய சாதநங்கள் இன்றியமையாதன வாகையால் அம்முறை எல்லார்க்கும் பொருத்தமுள்ளதாகாது.

2. சிரௌத பிரஹ்மயக்ஞம்: இது, வேதவாயிலாக அமைந்துள்ள ஒரு முறை. இதுவும் அத்யயநத்தையும், சில ஆசாரநியமங்களையும் அபேக்ஷிப்பதால் இதுவும் எல்லாருக்கும் சுலபமாகாது.

3. ஔபாஸநம்: இது, அக்கிநிஹோத்திரத்திற்குப் பிரதிநிதியாக ஸ்மிருதி கர்த்தர்களால் அமைக்கப்பட்டுள்ளது. இதைக் கைப்பற்றி நடப்பது அனைவருக்கும் சுலபமாகும். இதையும் அநுசரிக்க முடியாதவர்களுக்கு,

4. ஸ்மார்த்த பிரஹ்ம யக்ஞம்: இது மிகவும் சுலபமாகும். நித்தியகர்மத்தைச் செய்து முடித்தவுடன், அக்நிஹோத்ரம் ஔபாசநம் இவைகளுக்குவேண்டிய சாதநங்களின் அபேக்ஷையின்றி, மந்தரசுத்தியான தீர்த்தத்தைக்கொண்டு தேவர்களையும், ரிஷிகளையும், பித்ருக்களையும் ஆராதிப்பதற்காக ஸ்மிருதி கர்த்தர்களால் ஏற்படுத்தப்பட்ட முறை.

5. அதையும் அநுஷ்டிக்க முடியாதவர்கள் தங்கள் கிருஹத்தில் தேவர்களை லிங்கம், சாளகிராமம் முதலியவைகளாலும், ஆவாகநஞ்செய்யப்பட்ட பிரதிமை முதலிய இதர பிம்பங்களாலும் வழிபாடு செய்து யக்ஞங்களின் பலனைத் தங்கள் தங்களுடைய சீலத்திற்குத் தக்கவாறு அடைகின்றார்கள். இம்முறைக்கு ஆசாரம் மந்த்ரம், திரவ்யம், தியாநம் வணக்கம் இவைகள் இன்றியமையாதவைகளாகும்.

6. மேற்கூறிய முறையை அநுஷ்டிக்கவும் யோக்யதையற்ற அநதிகாரிகள் வழிபாடுசெய்து உய்யுமாறு தேவாலயங்களையும, லிங்கங்களையும், தீர்த்தங்களையும் ஸ்தூல முறையாகக் காலக்கிரமமாய்ப் பெரியோர்கள் அமைத்துமிருக்கின்றார்கள்

இந்த அறுவகைப் புண்ணியங்களில் ஒன்றையேனும் அநுஷ்டிக்க முயலாதவன் உயர்குண மானிடனாயினும் ஓர் விலங்கிற்கு ஒப்புள்ளவனாவானென்பது திண்ணம்.

(2) இனி, பித்ருயக்ஞமானது பெற்றோர்கள் இறந்த பின்னர் அவர்கள் மூலமாகப் பித்ருதேவதைகள் என்னும் ஓர் வகுப்பினரான தேவர்களை யாராதிப்பதாகும். இது அந்தந்த வர்ணத்தாருக்குத் தக்கவாறு பூர்வாசாரியர்களால் பலமுறையாக விதிக்கப்பட்டுள்ளது.

(3) அதிதியக்ஞம்: அதிதியென்றால், நாம் அழைக்காது நம்மிடம் உணவை அபேக்ஷித்துவருகின்றவர்கள். அவர்களுக்கு முகங்கோணாமல் அவர் மநமுவக்க உபசரித்து அவர்களுக்கு உணவளித்துப்பின்னர் அவர்கள், 'அந்நதாதா ஸுகீபவ' என்றுரைக்கும்ஆசீர்வசநத்தைக் கைக்கொள்ளுதலாகும். இவ்வதிதிகள் நான்கு வகையினராவர்.

1. நமதூருக்கு வருந்துறவிகள்.
2. நமது வீட்டிற்கு வரும் ஆசார்யர்களும்,புநிதமிக்க பெரியோர்களும்.
3. நாம் காணுமிடத்து நம்மிடம் உணவை யாசிப்பவர்கள்.
4. நாம் நித்திய கர்மங்களை முடித்து உணவுக்குச் செல்லும்போது நாம் நமது வீட்டின் வாயிலில் வந்து பார்க்கையில், பசிநேர்ந்து உணவையாசிப்பவர்கள்.

(4) சுற்றம். நம்முடன் கொண்டாடும் உறவு பற்றி நம்முடைய அகத்திற்கு வரும் பந்து வர்க்கங்களும் சிநேகிதர்களுமாவார்கள்.

(5) தான். இது, உடையவனும், அவனுடைய குடும்பத்தார்களும் சுகமாக உய்யும் வண்ணம் பொருளை விநியோகிப்பதாகும்.

ஆகையாற்றான் வேதமானது மாத்ருதேவோபவ, பித்ருதேவோபவ, ஆசார்யதேவோபவ, அதிதிதேவோபவ என்று விவரித்து வற்புறுத்துகின்றது.

இந்த மேலான முறைகளை அநுஷ்டிக்க அதிகாரமற்றவர்களுக்கு விதிக்கப்பட்டிருப்பது பூர்த்தம்.

## பூர்த்தம்.

இந்தப் பதம் 'பூர்' என்னும் தாதுவிலிருந்து உண்டானது. இதற்கு நிரப்பல், எங்கும் பரவச் செய்தல் என்பது பொருளாகும். அதாவது ஒரு பாத்திரத்தில் நிறைந்த ஜலத்தின் மேலாக ஒரு துளி தைலத்தையாவது பாலையாவது தெறித்தால் அது ஜலத்தின் மேலாக முழுவதும் பரவுவதுபோல, நமக்குள்ள பொருள் சொற்பமாயினும் அதைக்கொண்டு ஒரு தர்மத்தைச் செய்து, அந்தத் தர்மத்தினால் உலகத்திலுள்ள எல்லாப்பிராணிகளும் சுகம் பெறும்படி விநியோகிப்பதாகும். இது, குளம் வெட்டுதல், சத்திரங்கட்டுதல், சோலை வளர்த்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், சுமைதாங்கியமைத்தல், வைத்தியசாலை, புத்தகசாலை, கலாசாலை முதலியவைகளை ஏற்படுத்தல் முதலிய தர்மமாகும். இவைகளைப் பிரதிஷ்டைக்காக வைக்காமல், இவைகளினால் பிராணிகள் நன்மையையடையவேண்டுமென்று மட்டும் கருதிச் செய்தால் தான், இவைகளிலிருந்து கருதிய மேலான பலனானது உண்டாகும். இவைகளை நான் செய்தேன் என்ற அகங்காரத்தைக் கொண்டாலும் இவகளை இன்னான் செய்தானென எழுத்தாலும் (Inscription) பத்திரிகை வாயிலாலும் வெளியிட்டுப் புகழை விரும்பினாலும், அச்செயல்களுக்கு அப்புகழே பயனாகி மற்றொருமேலான பலனும் உண்டாகமாட்டாது. பூர்த்தத்தைச் செய்ய எல்லாவர்ணத்தார்களும் அதிகாரிகள்.

(இன்னும் வரும்.)

P. S. ஸுப்ரஹ்மண்ய ஐயர்.

# சுமதியென்னும் உத்தமியின் சரித்திரம்.

(313-ம் பக்கத் தொடர்ச்சி.)

சுமதியின் மொழிகளைக் கேட்ட கணிகையானவள் வணிகர் வேந்தனிடம் சென்று பின் வருமாறு சொல்லத் தொடங்கினள். "ஐயா! என்னால் கூடியமட்டும் சுமதிக்கு வேண்டிய போதனைகளைச் செய்தும் அவள் கேட்கவில்லை. கேளாமலிருப்பதுமன்றி என்னையே திருப்பிக்கொண்டு பலவிதமாய்ப் போதனைசெய்ய ஆரம்பித்தனள். அவளது பேச்சைக் கேட்கவே கல்லுங் கரைந்துருகும் எனத் தோற்றியது. அவள் சிறு பெண்ணாயிருப்பினும் புத்தியிற் பெரிய பாட்டியாய்த் தோற்றுகிறாள். அவள் பேசுகிற பேச்சைக் கேட்டால் பரம ஞானமாக இருக்கிறது. நான் எத்தனையோ காலம் அநுபவமுள்ளவள். உலக நடவடிக்கையில் எவ்வளவோ அடிபட்டவள். என் மனமும் பிரமிக்கும் வண்ணம் பேசி என்னை மயக்கி விட்டாள். அவளது திட சித்தத்தையும் மனோ தைரியத்தையும் எவரும் அணுவளவும் அசைக்க முடியாது. வாகைப்பூவின் நுனியால் வைரத்தைப் பிளந்தாலும் பிளக்கலாம்; சுமதியின் மனத்தை மட்டும் திருப்ப முடியாது. நானும் கஜகர்ணம் கோகர்ணம் போட்டுப் பார்த்தாய்விட்டது. யாதொரு பயனுமில்லை. அவள் வசப்படுவாள் என்று வைத்து ஆதரிப்பது பால்கொடா எருமையைக் காப்பாற்றுவதாகும். ஆகையால் அவளை உடனே துரத்துவதே நன்மையாகும். வேறு யோசனை வேண்டுவதில்லை. அவளை இனி ஒரு நிமிஷமும் இங்கு வைத்துக்கொண்டால் கேடாகவே முடியும்" என்றனள்.

அக்கணிகையின்வார்த்தைகளைக் கேட்ட வணிகன் நெடுநேரம் யோசனைசெய்தும் யாதொன்றும் தோன்றாமல் மயங்கினான். கணிகை சொல்லுகிறவண்ணம் செய்தால் நம் மனோபீஷ்டம் நிறைவேறாது. அவளோ தன்னால் சிறிதும் முடியாது என்கின்றனள். இனி என் செய்வது. நானே ஒருவாறு மறுபடியும் முயல்வேன். அச் சுமதி இணங்காவிடின் கணிகையின்யோசனைப்படி உடனே துரத்தி விடுவதே மேல். வீண் மனப்பால் குடிப்பதிற் பயனில்லை. ஆகையால் நானே போய் முயல்வேன்" என்று தனக்குள் தீர்மானஞ் செய்துகொண்டு தோட்டத்தை நோக்கிப் புறப்பட்டான்.

சுமதியோ கனிகை சென்றதின் பின்னர் பகவானைத் தியானம் பண்ணிக்கொண்டு தரையில் படுத்தவண்ணமாய் இருந்தாள். அவள் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி ஏக்கமுற்றது. அத னால் அவள் சிறிதும் தளரவில்லை. தன்னைக் கொடிய பாதகர்கள் கையினின்றும் தப்பிக்கச்செய்யப் பகவானைப் பன்முறையாகப் பின் வருமாறு பிரார்த்தித்தாள்.

"காவாய் கனகக் குன்றே போற்றி
யாவா வென்றனக் கருளாய் போற்றி
படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
இடரைக் களையு மெந்தாய் போற்றி
ஈச போற்றி யிறைவ போற்றி
தேசப் பளிங்கின் றிரளே போற்றி
அரைசே போற்றி அமுதே போற்றி
விரைசேர் சரண விகிர்தா போற்றி
வேதி போற்றி விமலா போற்றி
ஆதி போற்றி அறிவே போற்றி
கதியே போற்றி கனியே போற்றி
நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
உடையாய் போற்றி யுணர்வே போற்றி
கடையே னடிமை கண்டாய் போற்றி" என்றும்,

"வாழ்கின்றாய் வாழாத நெஞ்சமே வல்வினைப்பட்
டாழ்கின்றாய் ஆழாமற் காப்பானை யேத்தாதே
சூழ்கின்றாய் கேடுனக்குச் சொல்கின்றேன் பல்காலும்
வீழ்கின்றாய் நீயவலக் கடலாய வெள்ளத்தே"

என்றும் பலவாறாகப் பகவானை நெஞ்சார நினைந்து வாயார வாழ்த் திப் படுத்துக்கொண்டிருந்தனள்.

அச்சமயம் வணிகர்வேந்த தன் பரிவாரங்களுடன் வந்து சேர்ந்தான். சுமதி தரையிற் பாயுமின்றிப் படுத்திருப்பதைக் கண்ணுற்றான். தன் பரிவாரங்களை வெளியே நிறுத்திவிட்டு ஒரே ஒரு வேலைக்காரியுடன் சுமதியின் அறையுட்புக எண்ணிக் கதவைத் திற

க்க முயன்றான். கதவோ உட்பக்கம் தாழிட்டிருந்தது. வேலைக்காரியைவிட்டுத் தட்டச்செய்தான். சுமதி கதவின்சப்தத்தைக் கேட்டு "யார்" எனலும், அவ்வேலைக்காரி தன் பெயரைச் சொல்லவே எழுந்திருந்து வந்து கதவைத் திறந்தனள். நெடிய மரம்போல் வணிகர்வேந்தன் நிற்பதைக் கண்ணுறவே, அவள் உடல்பதைபதைத்தது. அவள் நெஞ்சு நடுக்குற்றது. கற்பே காவலாகக் கொண்டவளாகையால் மனோதைரியங் கொண்டனள். பகவானுடைய பாதாரவிந்தத்தைத் தியானம் பண்ணினாள்.

வணிகர்வேந்தைப் பார்த்துப் பேச மனமில்லாதவளாய் அவன் அருகில் நிற்கும் வேலைக்காரியை முன்னிட்டும் தன் வலக்கால் பெருவிரலைப் பார்த்துக்கொண்டும் பேசலாயினள். "பெண்ணே! நீயும் உன் யஜமானரும் இந்த அகால வேளையில் இங்குவருவதற்கு யாது காரணம். துர்ப்போதனை செய்ய முயன்ற கணிகை ஏவலால் இம்மாதிரி வந்தீர்களோ. அல்லது ஏதாவது முக்கிய காரியத்தைமுன்னிட்டு வந்தீர்களோ? பெண்ணே! விவரமாய்த் தெரிவிப்பாயாக. எவ்வளவு தலைபோகிற காரியமாக இருந்தாலும் இந்த அகால வேளையில் வந்தது பெருமையாகாது. இருந்தாலும் வந்த விவரமென்ன?" என்று கேட்கவே வணிகர் வேந்தன், "கண்ணே! உன்னுடன் இனிமையாய்ச் சம்பாஷிக்கவே நான் இங்கு வந்தேன். நல்ல வசந்த காலமாக இருக்கிறது. தோட்டமோ ரமணீயமாக இருக்கின்றது. மரங்களோ பூத்துப் பரிமளகந்தத்தை வீசுகின்றன. புஷ்பக்கொடிகள் அழகாய்க் கொத்துக் கொத்தாய்ப் பூத்திருக்கின்றன. நிலவோ பட்டுப்பட்டென்று எரிக்கின்றது. மந்தமாருதம் வீசுங்கால் அப்புஷ்பங்களுடைய வாசனையையும் அவற்றின் மகரந்தப் பொடியையும் கவர்ந்துகொண்டு வருகின்றது. ஆம்பல்கள் தடாகத்திற் பூத்து நகைமுகம் காட்டுகின்றன. இவ்வளவு வைபவங்களுங் கூடிய இந்தச் சுபமான வேளையில் நாம் சரச சல்லாபமாய் அந்த லதாக்கிருகத்தின்நடுவே இடப்பட்டபளிங்குமேடையில் உட்கார்ந்து இனிமையாய்ச் சம்பாஷிக்காவிடின் இந்த ஜன்மம் எடுத்ததற்குத்தான் பயனென்ன? பேதாய்! நீ யவ்வன பருவமுடையவள். உன் வாழ்நாளெல்லாம் வீணிற் கழிகின்றன. மங்கையர் ஒரு நாயகனையடைந்து உல்லாசமா யிருப்பதே அவர்களுக்கு மேன்மையைத் தரும். என்னிலும் தனவானும் பெருமைவாய்ந்தவனும் உனக்கு யாரே கிடைக்கப்போகிறார்கள். இந்தச் சுகமான காலமெல்லாம் வீணாக்கி ஜன்மத்தை வீண்படுத்திக் கொள்ளுகிறாய். அதனால் உன்னுடன் கடைமுறையாய்ச் சம்பாஷித்து உன்னை மணம்புரியலாமென்று எண்ணங்கொண்டு வந்தேன். எப்பாடுபட்டாயினும் உன் மனத்தைத்திருப்ப வேண்டுமென்று எண்ணங்கொண்டே வந்துளேன். எத்துணையோ முறை முயன்றும் விழலுக் கிறைத்ததா

விற்று. இதோ கடைமுறையாய் நான் உனக்குச் சொல்வது. உன்னைக் கட்டாயப்படுத்துவதில் எனக்குப் பிரியமில்லை. நன்ருய் யோசனைசெய்து பார். காலத்தைக் கடத்துவதிற் பயனில்லை. நானும் எவ்வளவோ காலம் பொறுத்தாய்விட்டது. இனிப் பொறுக்கமுடியாது. இரண்டில் ஒன்று தீர்மானம் செய்யவே இச்சமயம் இங்கு வந்தேன். நீ தக்கபடி யோசித்துச் சம்மதிக்காவிடின் உன் கதி அதோகதியாம். இன்னதுதான் செய்வேன் என்பது உனக்கு இச்சமயம் தெரியவராது. வீணிற் கெட்டுப்போகாதே. சிறு மடந்தைக்கு இவ்வளவு பிடிவாதம் கூடாது. நீயோ என் வசப்பட்டவளாயிருக்கிருய். "உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா" நான் சொல்வதற்கு இணங்குவாயானல் உனக்கு எவ்வளவோ மேன்மையுண்டு. எல்லாரிலும் உயர்ந்த பதவியில உன்னை வைக்கச் சித்தனயிருக்கிறேன். நீ காலாலிட்டதை நான் தலையாற் செய்யக் காத்திருக்கிறேன் இந்த உத்தியானவனம்போல் அநேக உத்தியானவனங்கள் எனக்குண்டு. நீ அவைகளில் எங்கேவேண்டுமானுலும் வசிக்கலாம். பெண்ணரசே! அதோ பார் அவ்வோடையின் அழகான நீரோட்டத்தை. அது சந்திர கிரணங்கள் பொழியப்பெற்று எவ்வளவு கம்பீரமாய்த் தோன்றுகின்றது. அதன்கண் உள்ள ஆம்பல்கள் மலர்ந்து சந்திரனுகிய தம் நாயகனுக்கு நகைமுக விருந்தளித்தவண்ணமா யிருப்பதைப் பார்த்தாகிலும் நீ விவேகமடையக் கூடாதா. இவ்வுத்தியான வனத்தில் எவையும் இரம்மியமாய்த் தோன்ற நீ மட்டும் ஏக்கங்கொண்டு சிறிதும் முகமலர்ச்சியின்றி காணப்படுகிருய். உனக்கு இங்கு யாது குறைகளிருக்கின்றன. தந்தை தாய் தமர் எவருமில்லாத அநாதையாகிய நீ என்னை காதலுக அடைந்தால் தந்தைக்குத் தந்தையாகவும் தாய்க்குத் தாயாகவும் நீ மிகவும் நினைந்துருகுகிற சகோதரனுக்குச் சகோதரனுகவும் தோழனுக்குத் தோழனுகவும் பந்துக்களுக்குப் பந்துவாகவும் விளங்குவேன். என் ஐசுவரியம் முழுவதும் உன்னுடையதே. இவ்வுலகில் செல்வமில்லாதவர்கள் சீருஞ் சிறப்புமடைய முடியாது. "பணமில்லாதவர்கள் நடைப்பிணத்துக்குச் சமானமானவர்கள்" என்ற பழமொழியைக் கேட்டதில்லையா? "குணமிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுந்தமிழின் மணமிருந்தாலும் ஓர் காசும் பெருது. சிங்காரவரைப் பணமிருந்தால் அவர்க்கெல்லாரும் அஞ்சலி செய்குவாரே" என்றதைக் கேட்டதில்லையா. வீணில் சம்பத்துக்களை இழக்காதே. 'கரணம் தப்பினல் மரணம்.' வீணில் இவ்வைபவங்களை அசட்டை செய்து தள்ளாதே. உதித்து ஜாமம் வரை உனக்குக் கடைமுறையாகக் காலங் குறிக்கிறேன். அதற்குள் சேடியினிடம் உன் மனத்தைத் தெரிவிப்பாயாக" என்று சொல்லித் தன் அரண்மனைக்குத் திரும்பினன் அவ்வனிகர் வேந்தன். (இன்னும்வரும்)

எஸ். சாமிநாதையர்.

## ஸ்ரீ சிருங்ககிரி மடத்து ஸ்வாமிகளின் விதேகமுக்தி.

ஸ்ரீ சிருங்ககிரி மடாதிபதி அவர்களாகிய ஜகத்குரு ஸ்ரீ ஸச்சி
தாநந்த சிவாபிநவ ந்ருஸிம்ஹபாரதி ஸ்வாமிகள் சென்ற மார்ச்சு
மீ 20உ புதன்கிழமை காலை சுமார் 11 மணிக்கு, சுக்லபக்ஷம் த்வி
தியையில் வழக்கம்போல் பூஜை முடித்து ஸமாதிகொள்பவர்போல
இருந்தவர் யாவரும் எதிர்பாராமல், எவ்விதவியாதியுமின்றி விதேக
முக்தி பெற்றார்கள். இஃது அவர்களுடைய எண்ணிறந்த சிஷகோ
டிகளுக்கு மிகவும் துக்கத்தை விளைவிக்கும். அவர்கள் தர்க்கம், சா
ங்கியம், வேதாந்தம், யோகம் முதலிய சாஸ்திரங்களில் மஹா பிர
க்ஞையுள்ளவர்கள். உயர்ந்த ஸ்வாநுபவம் உடையவர். மஹா
சீலர். மஹா காருண்ணியம் உள்ளவர். ஈசுவர கடாக்ஷம் பெற்ற
புண்ணியர். சாபாநுக்கிரக சக்தியுள்ளவர். எப்பொழுதும் சிரித்த
முகத்தினர். சாந்தர். எவரும் அவர் அவர் பிறந்துள்ள மதத்
தைச் சரிவர அநுஷ்டிக்கவேண்டுமென்று வற்புறுத்தி அடிக்கடி
உபதேசம் செய்வார்கள். பிற மதத்தினரைப் பொதுவாய் துவே
ஷியாமல் அன்போடு நன்குமதித்துப் பாராட்டினர்கள். அவர்கள்
சிஷர்களின் நன்மையின் பொருட்டு, தென்னாட்டில் இருமுறை யா
த்திரை செய்தார்கள். அவர்கள் யாத்திரையில் தங்கிய க்ஷேத்திர
ங்களில் எல்லாம், சிஷர்களின் சபையைக் கூட்டிவைத்து, அவர்களு
க்கு ஆசார விஷயத்திலும் ஞாந விஷயத்திலும் உயர்ந்த உபதேசங்
களுள்ள உபந்நியாசம் செய்துவந்தார்கள். அவர்கள் மதுரையில்
செய்த உபந்நியாஸத்தில், அடியில் வருமாறு உபதேசித்தார்கள்.
"நீங்கள் ஒவ்வொருவரும் உலக சம்பந்தமான உத்யோகம் செய்கி
றீர்கள். அதன் பற்று உங்களை இலகுவில் விடாது. உத்யோகம்
புகுமுன், இவ்வளவு திரவியம் அல்லது சொத்து சம்பாதித்தால்
போதுமானது, அதின்மேல், ஞாநவிஷயத்தின் விசாரணையும் அநு
ஷ்டாநமும் தீவ்ரமாய் நடத்தவேண்டுமெனத் தீர்மானம் கொள்ள
வேண்டும். அவ்வளவு திரவியம் அல்லது சொத்து சேர்ந்தமேல்,
ஞாநவிஷயத்தைப் பற்றியதாக நீங்கள் மிகுந்திருக்கும் வாழ்நாளை
நலம்பெறும்படி கழிக்கவேண்டு" மென்றார். அவர்கள் சென்றவிட
மெல்லாம் ஏராளமான ஜநங்களுக்கு, முக்கியமாய்ப்பிராஹ்மணர்களு
க்கு போஜநம் செய்வித்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள்
ஸ்ரீ சிருங்ககிரி மடத்திற்கு குரு சிஷ வார்சு கிரமத்தில் 33-ம் பட்

டம் பெற்றிருந்தார்கள். அவர்கள் பிங்கள௵ பங்குனிமீ கிருஷ்ணபக்ஷம் ஏகாதசி திதி திநம் ஜநநம். குரோதன௵ உபநயந ஸம்ஸ்காரம் பெற்றார்கள். அக்ஷய௵ ஸந்யாஸ ஆசிரமம் பெற்றார்கள். இவர்கள் பிதா அவர்கள் தென் ராஜ்ஜியத்தில் பெயர்போன சதகோடி இராமா சாஸ்திரிகளாவர். அவர்கள் தமயனார் தர்க்க வேதாந்தமுதலியசாஸ்திரங்களில்பிரக்யாதிபெற்றபிரஹ்மஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ சாஸ்திரிகளாவர். அவர்கள், இதுவரைநடத்தப்பெறாத இரண்டு சிரேயஸ்கரமான கார்யங்களைச் செய்து முடித்தார்கள். ஒன்று, சென்ற 1910௵ பிப்பிரவரிமீ 21உயில் திருவநந்தபுரம் ஸம்ஸ்தாநத்தில் காலடி என்ற க்ஷேத்திரத்தில் ஆதி ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யர் அவர்களின் விக்கிரகம் ஒன்றும், ஸ்ரீ சாரதாம்பா தேவிக்கு விக்கிரகம் ஒன்றும் இவ்விரண்டு விக்கிரகங்களைச் செய்வித்தும் அவ்விக்கிரகங்களுக்குக் கோவில்களும் நிர்மாணம் செய்வித்தும், அக்கோவில்களின்கண் ஷை விக்கிரகங்களைப் பிரதிஷ்டையும் செய்வித்தார்கள். இது ஒரு பெரிய புண்ணியகரமான விஷயம்.* பங்களூரில் சங்கரபுரம் என்னும் ஒருஅக்கிரகாரம்நிருவித்து, அதில் உயர்தர ஸம்ஸ்கிருத வித்யாசாலையை 1911௵த்தில் ஸ்தாபித்தார்கள். இதுவும் சிரேயஸ்கரமானது¶. இவைபோன்ற அநேக நற்காரியங்களைச் செய்ய உத்தேசித்திருந்தார்கள். ஸ்ரீமத் ஆசாரிய ஸ்வாமிகள் அவர்கள் விதேகமுக்தி யடைந்த விஷயம் அவர்கள் சம்பந்தப்பட்டமட்டில் உயர்நல முள்ளதாக விருப்பினும், சிஷகோடிகள் அவரை இழந்தவிஷயத்தில் மிகவும் துக்கிக்கின்றார்கள். இவர்கள் தம்முடைய ஞாந பரம்பரை விருத்தியாகும்படி தம்முடைய ஸ்தாநத்தில் வார்சு நியமநம் செய்யாமல் போன விஷயம் இன்னும் அதிக துக்கத்தை உண்டுபண்ணுகிறது. இத்தகைய மஹாபுருஷர் இன்னும் சில வருஷங்கள் உலகத்திலிருந்து உத்தேசித்திருந்த நற்காரியங்களை எல்லாம் முடித்து சிஷர்களை நல்வழிப்படுத்தியும், ஹிந்து மதத்தை இக்காலத்திற்கேற்பவும், இனி வருங்காலத்திற்கு உதவும் வண்ணமும் சீர்திருத்திய மிருப்பரேல், மிகவும் நலமாக இருந்திருக்கும். எல்லாம் ஈசன் செயல்.

ப. நா.

---

* பூர்ணசந்திரோதயம் முதலாம் தொகுதி 21-ம் பக்கம்.

¶ பூர்ணசந்திரோதயம் முதலாம்தொகுதி 37-ம் பக்கம்.

# புத்தகவரவு.

**திருச்சுழியல் வெண்பா அந்தாதி**:-இஃது ஒரு பழைய தமிழ்நூல். இதை இயற்றிய கிரந்தகர்த்தா இன்ன இயற்பெயரினர் என்றும், இன்ன வருணத்தினர் என்றும், இன்ன காலத்தினர் என்றும் தெரியவில்லை. இதர மதங்களைப்பற்றித் துவேஷமில்லாத சைவசமயத்தினரும் தமிழிலுள்ள நூல்களை நன்கு ஆராய்ந்தவருமான ஒரு பெரியார் இதைச் செய்திருக்கவேண்டுமெனத் தோன்றுகிறது. திருச்சுழி என்பது இராமநாதபுரம் ஸம்ஸ்தானத்தில் உள்ள சிவக்ஷேத்திரங்களில் பிரஸித்திபெற்றது. அதிலுள்ள கோயிலின் திருப்பணி வேலை செய்து வருகின்ற மகா-௱-௱-ஸ்ரீ தி. அ. ராம. இராமசாமி செட்டியார் அவர்களின் வேண்டுகோளின்படி அவர்களின் திரவிய சகாயத்தால், பிரஹ்மஸ்ரீ பாலசரஸ்வதி பண்டிதர் P. R. கிருஷ்ணமாசாரியர் அவர்கள் இந்நூலுக்கு அழகான உரை இயற்றி பிரஸித்தம் செய்திருக்கின்றார்கள். பதவுரையுடன், அருமையான இலக்கண இலக்கியக் குறிப்புக்களும், எழுதப்பட்டுள்ளன. இவ்வொரு புத்தகத்தை மாத்திரம் ஒருவன் நன்றாய்ப் படிப்பானாகில், தமிழ்ப்பாஷையில் நல்ல பயிற்சியைப் பெறுவான். இது நன்றாய் அச்சியற்றப்பெற்றிருக்கின்றது. இராமநாதபுரம் டிரஷரி டிப்டி கலெக்டராகிய ஸ்ரீமான். ராவ்பகதூர். எம்.ஆறுமுகம்பிள்ளைஅவர்கள் தமிழ்ப் பாஷையின்மேல் உள்ள அபிமானத்தையும், அதில் முயன்று வேலைசெய்கின்ற பண்டிதர்களுக்குச் செய்யும் உபகாரத்தையும் உத்தேசித்து அவர்களுக்கு இப்புத்தகம் ஸமர்ப்பித்திருக்கின்றமை மிகவும் நியாயமே. இப்புத்தகம் சென்றமீ 10-ம் தேதி யன்று மதுரைத் தமிழ்ச்சங்கத்தில், பல வித்வான்களும் உத்யோகஸ்தர்களும் கூடிய ஒரு பெரிய சபையில் அரங்கேற்றப்பட்டது. தமிழ்ச்சங்க அக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய ஐயரவர்களும், திருவாவடுதுறை யாதீன வித்வானும் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய சேற்றூர்ச் சுப்பிரமணியக்கவிராயர் அவர்களும் மற்றும் பலரும் இந்நூலையும் உரையையும் பற்றி மிகவும் சிலாகித்துச் சாற்றுக்கவிகள் கொடுத்திருக்கிறார்கள். இப்புத்தகத்தின் விலை 6 அணா தான். வேண்டுவோர் பிரஹ்மஸ்ரீ P. R. கிருஷ்ணமாசாரியரிடத்திலும் நம்மிடத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

---

**கல்யாணி அல்லது வாழ்வில் தோன்றிய விபத்து**:-இது பிரஹ்மஸ்ரீ R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B. A, B. L., அவர்கள் நவீந ஸம்பிரதாயத்தை அநுசரித்துத் தமிழில் இயற்றிய ஓர் கட்டுக்கதை. உலக வாழ்வில் நல்லவர்களுக்கும் துன்பம் நேரிடுவது ஸஹஜந்தான் என்பதை இக்கதை அழகாய் எடுத்துக்காட்டுகிறது. கிராமாந்தரங்களில் தந்தி ஸமாசாரம் வந்தால் அதில் ஜநங்களுக்கு உண்டாகும் மனக்குழப்பத்தையும் பதட்டத்தையும் ரயில்வேஸ்டேஷனில் நம்மவர்களின் பரபரப்பையும் அவஸரத்தையும், அவற்றால் உண்டாகும் விபத்துக்களைப்பற்றியும்.ஜோஸ்யர்களின் குணாதிசயங்களையும்பற்றி இயற்கைக்குஒத்ததாய் வர்ணனைகள் இதின்கண் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்தின் முகப்பிலும் அந்தந்த அதிகாரத்தில் நிகழும் ஸம்பவங்களைப்பற்றிச் சூசிப்பிக்கும் பொருத்தமுள்ள பாசுரக்கள் பல அருமையான புஸ்தகங்களினின்று எடுக்கப்பெற்று உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

இப்புஸ்தகம் எளிய தமிழ்நடையில் அழகாய் எழுதப்பட்டிருக்கின்றது. ஆங்கிலம்மலிந்த இக்காலத்தில், தமிழையபிமானித்து யாவருக்கும்பயன்படும் படியாய் வசனநடையில் எழுதியிருப்பது மிகவும் ஸந்தோஷிக்கத்தக்கது. இவர்கள் இதுபோன்ற நாவல்களை எழுதி வெளியிடுவார்களென்று நினைக்கிறோம். இதன் விலை அணு 10. இதைவாங்க விரும்புகிறவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ R. S. நாராயணஸ்வாமி ஐயரவர்கள், B. A.B. L., வக்கில், தானப்ப முதலி அக்கிரஹாரம், மதுரை என்ற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பத்திராதிபர்

## சமாசாரம்.

**ஸ்திரீகளின் கூட்டம்.**—சென்றமீ 21உ சாயங்காலம் கும்பகோணத்திலுள்ள பிரஹ்மவித்யா ஆலயத்தில் (The National Indian Association) சபையின் ஆதரவின் பேரில், பல ஜாதிஸ்திரீகளின் கூட்டம் கூடியது. அதின்கண் ஆங்கில ஸ்திரீகள், முகம்மதிய ஸ்திரீகள், பிராஹ்மணஸ்திரீகள், வைச்யஸ்திரீகள் வேளாள ஸ்திரீகள் முதலியவர்கள் அநேகர் இருந்தார்கள். ஒருவரோடொருவர் சம்பாஷணை புரிந்தார்கள். சங்கீத வாத்தியத்துடன் பாடல்களும் தனிப்பாடல்களுங் எல்லோரும் ஆநந்திக்கும்படியாக அங்குவந்திருந்த ஸ்திரீகளாற் பாடப்பெற்றன. மாதுஸ்ரீ விசாலாக்ஷி அம்மாள் என்பவள், பகவத்கீதையின் 16-ம் அத்யாயத்தில் விவரித்திருக்கும் தெய்வ ஸம்பத்துக்களைப்பற்றி விஸ்தாரமாக உபந்நியாசம் செய்தும், கடைசியில், சாகுந்தல நாடகத்தில், கண்வமகரிஷி, தம்முடைய வளர்ப்புப் பெண்மணியான சகுந்தலை, தன் புருஷன் கிருகத்திற்குப் போகும் தருணத்தில் ஸ்திரீகளின் ஒழுக்க முறையைப்பற்றி உபதேசித்த நலமமைந்த விஷயங்களை எடுத்து பிரஸ்தாபித்தும் அவ்வுபதேசங்களெல்லாம் அன்பு என்னும் உயர்வான மனோதர்மத்தை ஆதாரமாக உடையனவென்றும் ஸ்திரீகள் அந்த உபதேசங்களைத் தங்கள் மநத்தில் பதியவைத்து எல்லாரிடமும் அன்புபற்றியவர்களாக ஒழுகவேண்டுமென்பதாகவும் மிக உற்சாகத்துடனே உரையாடினார். மாதுஸ்ரீ தேவஸகாயம் என்பார் மனித ஸ்தூல உடல் சாஸ்திரத்தைப்பற்றி உபந்நியசித்ததில், சுவாஸப்பைகளைப்பற்றி விஸ்தாரமாகப் பேசினார். ராஜாம்பாள் என்ற ஸ்திரீயின் சரித்திரவரலாறு, அவருடைய குமாரத்தியாற் படிக்கப்பெற்றது. முடிவில், பழம் புஷ்பம் தாம்பூலம் முதலியவை விநியோகிக்கப்பெற்றன. எல்லாம் நிர்விக்நமாய் நடந்தன. புருஷர்கள் ஒருவரும் இச்சபையில் கூடவில்லை.

தக்ஷிண துருவம் கண்டுபிடித்தல்:--நார்வே தேசத்தவரான காப்டென் (Captain Almond Sen) ஆமெண்டு ஸேன் என்பார் சென்ற டிசம்பர்மீ 14௳ தக்ஷிண துருவத்தின் மேல் ஸாக்ஷாத்தாக நேரில் நின்றார். அது ஒரு விசாலமான பொட்டல். அதற்குச் சமீபத்தில் சுமார் 2 மைல் உயரமுள்ளதும் பனிக்கட்டியால் மூடப்பெற்றதுமான கம்பீரமான மலைகள் உள்ளன. முன்னர் அதே தேசத்து Nansen என்பார் உத்தரதுருவத்தை நாடிச் சென்று கண்டுபிடித்தார். இவர்களே நீரர்களானவர்கள். தெற்கு துருவமானது 10100 அடி உயரமுள்ள மலையின் உச்சியாம். சில நாள் நாய் மாம்ஸத்தைச் சாப்பிட்டுக்கொண்டே ஜீவித்தார்களாம்.

---

சீனதேசத்தில் இப்போது பிரஜாதிபத்யம் ஏற்பட்டு தாத்காலிகமாக உவான்ஷிகே என்பார் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கின்றார். ராஜ்யத்தில் கலகமும் குழப்பமும் இருந்து கொண்டிருக்கிறது. முன்னிருந்த ராஜ குடும்பஸ்தர்கள் ஜனங்களுடைய ஹிம்ஸையால் ராஜாங்கத்தைத் துறந்து விலகிக்கொண்டார்கள். பிரஜாதிபத்யத்தை ஸ்தாபித்தவர் டாக்டர் ஸன் எட் யாட்ஸ்ன் என்பார். இவர் உயர்ந்த புத்திமான், குணசீலர். இவ்வித ராஜாங்க மாற்றத்துக்கு முக்கிய காரணஸ்தராக விருந்தும் புதிய ராஜாங்கத்திற்குத் தலைவராகத் தன்னை நியமித்துக்கொள்ளாமல் ஸ்ரீமான். உவான்ஷிகே என்பாரைத் தலைவராக ஏற்படுத்தியது டாக்டரின் பெருந்தன்மையையும், உயர் நலம் அமைந்த தேசாபிமானத்தையும் காட்டுகின்றது. எத்தனையோ ஆயிரக்கணக்கான வருஷங்களாகச் சக்ரவர்த்தி ஆதிபத்யம் இத்தேசத்தில் நடைபெற்று வந்தது. சொற்ப காலத்திற்குள் அது முற்றும் மாறி பிரஜாதிபத்யம் ஏற்பட்டிருப்பதானது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இது மனிதர்களுடைய சக்தியால் மாத்திரம் நடந்ததாகத் தோற்றவில்லை. ஈசுவராநுக்கிரஹம்இல்லாமல் இப்பெரியகாரியம் நிறைவேறாது. இப்போது தொலைந்துபோன ராஜாங்கம் சில வருஷங்களாகப் பொதுஜனங்களுடைய க்ஷேமத்தைக் கருதாமல் ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் தங்கள் தங்கள் சொந்த லாபத்தைக் கருதிக்கொண்டு வந்தமையால், இத்தன்மையாக நேரிட்டது.

---

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ரெயில்வே:—இப்போது தென்னிந்தியா ரெயில்வேயானது தநுஷ்கோடிவரை போகிறது. இடையில் பாம்பன் வாய்க்கால் குறுக்கே அதைத் துண்டிக்கிறது. அதன் மேல் ஒரு பாலம் கட்ட உத்தேசித்திருக்கிறார்கள். தநுஷ்கோடிக்கும் இலங்கைத் தீவிலுள்ள மன்னாருக்கும் 22 மயில் சமுத்திரம் இருக்கிறது. மேலும் ஒரு கம்பீரமான பாலம் கட்ட உத்தேசமிருந்த போதிலும் அதை இப்போது கட்டப்போகின்றார்களில்லை. தற்காலத்தில் இந்த 22 மைலுக்கு 3 நீராவி யந்திரக் கப்பல்கள் மூலமாய் யாத்திரை நடத்தப்படும். இக்கப்பல்கள் ஸோக்டிலாண்டிலுள்ள கிளாஸ்கோவில் கட்டப்பட்டுவருகின்றன. வருகிற வருஷம் ஜூன் மாசத்திற்குள் இக்கப்பல்கள் ஓடும் என்று தெரிய வருகிறது.

---

உலகத்தில் 960 பிரஹ்மஞான கிளைச்சபைகளும் 21,464 அங்கத்தினர்களும் உள்ளார். இந்தியாவில் 418 கிளைச் சபைகளும் 5,646 அங்கத்தினர்களும் உள்ளார்.

"நம் தேசத்தில் ஒருவயது முதல் 15-வயது வரையுள்ள பால்யவித வைகள் 90லக்ஷம் பெயர்களிருக்கின்றார்கள். அவர்களில் 25 லக்ஷம் பெயர்கள் 11வயதுக்குட்பட்டவர்கள். அவர்களுக்குள் 40லக்ஷம் பெயர்கள் இரண்டாம் முறை விவாகம் செய்யக்கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டவர்கள். இவ்விதமான நிலைமை நம்மவர் பெறுதலுக்குக் காரணம் நம்முடைய ஹிந்துமத சாஸ்திர ஆராய்ச்சிக்குறைவே என்பதாம். சாஸ்திரங்களின் உண்மையான கருத்து இதுவாம். விதவையாக ஏற்படவேண்டுமானல், முன்னர் விவாகம் ஆகியிருக்கவேண்டும். சம்யோகம் ஏற்பட்டால் தான் விவாகம் பூர்ணமாகும். பக்குவமான பிரவடையான ஸ்திரீதான் விவாகத்திற்கு அருகமாவாள். குறைந்தபக்ஷம் 12வயதுக்குக் குறைந்தவள் பிரவடையாகக் கூடியவள் அல்லள்; அதனால் விவாகத்திற்கு அருகமாகாள்." இவ்விதம் திவான் பகதூர் ரகுநாத ராயர் அவர்கள் எழுதுகிறார்கள். ஆகவே, இக்காலத்திய விவாகங்கள் சாஸ்திர விரோதமான போலி விவாகங்கள் எனமுடியும். மரப்பாச்சிக் கல்யாணங்களாகும். நம்மவர் இதற்கு யாதேனும் ஒரு விமோசநத்தைத் தேடார்களா?

---

ஸ்ரீகாளஹஸ்தி என்ற திவ்விய க்ஷேத்திரத்தில், நாளிது ஏப்ரல்மீ 21தேதியில் மஹாகும்பாபிஷேகம் என்ற பெரும் சாந்தி நடத்தப்பெறப்போகின்றது. தேவகோட்டை நகரத்தார்களான மகா-ா-ா-ஸ்ரீ மெ. அரு. நா. இராமநாதன் செட்டியார் அவர்களும் மகா-ா-ா-ஸ்ரீ மெ. அரு. அரு. அருணசலம் செட்டியார் அவர்களும் அவர்கள் முன்னவர்களும், ஐந்துலக்ஷம் ரூபாய் வரை செலவுசெய்து, ஷை தேவாலயத்தின் திருப்பணி மராமத்துக்கள் செய்வித்து, இப்போது மஹா கும்பாபிஷேகம் நடத்தப்போகின்றார்கள். இதற்குக் குறைந்தபக்ஷம் ஒருலக்ஷம் ரூபாய் செல்லும்.

---

கூடலூரிலுள்ள சந்மார்க்க சபை என்ற பிரஹ்மஞாந சபையின் கார்யதரிசி ஸ்ரீமான் கே. சிவலிங்க முதலியார் அவர்கள் சென்றமீ 29உ ராத்திரி 2மணிக்கு சிவலோகபிராப்தி அடைந்தனர். இது மிகவும் துக்ககரமானது. இவர்கள் சென்ற 1911 வருஷத்தில் கூடலூரில் பிரஹ்மஞாந சபைகளின், பெரியகூட்டம் கூடியசமயத்தில் மிக அன்புடனே எல்லாரையும் ஆதரித்து வேண்டிய சௌகர்யங்கள் செய்தார். இவர் நற்குணமுள்ளவர். பொறுமையுடையவர். சிவபக்தர். பெரிய கார்யங்களை சிரத்தையுடனே கொண்டுசெலுத்தி முடிக்கும் திறமையுடையவர். எல்லாரிடமும் முகமலர்ச்சியுடனே இனியமொழி கூறுபவர். பிரஹ்மஞாந தர்சநத்தில் உள்ளன்புடையவர். அவ்வூரின் கிளைச்சபையை ஊக்கத்துடன் நடத்தியவர். சுவர்க்கலோக அநுபவங்களை சீக்கிரம் அநுபவித்து அவர்கள் எண்ணியிருந்த நற்கார்யங்களை முடிப்பதற்கு நம் தேசத்திலேயே முன்னரைவிட அதிகச்சௌகர்யங்கள் அமைந்துள்ள குடும்பத்திற் பிறக்கத்திரும்புவார்கள் என நம்புகிறோம்.

பத்திராதிபர்.

## ADVERTISEMENT.

### சுதேச வைத்திய ரத்தினம்.

(இரண்டாம் பதிப்பு.)

முன் பதிப்பைக்காட்டிலும் விரிவானது.

ஆனரபிள் ஸ்ரீ திவான் பகதூர் R. ரகுநாதராவ் C. S. I. அவர்களுடைய நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது. ஐகோர்ட்டு வக்கீல் N. K. ராமஸ்வாமி ஐயர், B. A, B. L. அவர்களின் முகவுரையுடன் எழுதப்பட்டது. இப்புத்தகம் டாக்டர் S. சந்திரசேகரர் அவர்களாலநேக சுகாதார விபரங்களுடனும், இன்னும் பல அருமையான விஷயங்களுடனும் நம் நாட்டிலுண்டாகும் செடி, கொடிகள், காய்கனிகள், கடை மருந்துகள் முதலியவற்றின் குணம், செய்கை, உபயோகம், உபயோகிக்கும் விதம், அவற்றைப் பல ரோய்களுக்கும் உபயோகித்துக் குணங்கண்ட ஐரோப்பிய டாக்டர்மார்களின் பெயர்களுடனும், பல நூல்களின் ஆதாரங்களுடனும், ஒவ்வொரு மூலிகைகளுக்கும் தமிழ், இங்கிலீஷ் பெயர்களுடனும் அந்நோய்களுக்கு வைத்தியருதவியின்றி தாமே செய்துகொள்ளக்கூடிய விபரங்களுடனும் சிறுவர்களுக்கு வாசிக்கக்கூடிய செந்தமிழ் நடையில் வரையப்பட்டிருக்கின்றது. வேண்டியவர்கள் உடனே எழுதவும்.

விலை ரூ. 1—0—0 தபால் சார்ஜ் 0—3—0.

வைத்தியபோதினி:—சித்திரப் படங்களோடுகூடிய ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை. தபால்சார்ஜ் உள்பட வருஷசந்தா ரூபாய் 1—0—0 தொடுவாய்ப் பகுதிகளுக்கு ஷில்லிங் 3.

மானிட ஜீவிய சிந்தாமணி அல்லது ஆண்மையின் அழிவும் அதனை அகற்றும் விதமும், இப்புத்தகம் அச்சிலிருக்கிறது. விலை ரூபாய் 1. வேண்டியவர்கள் இப்பொழுதே எழுதிக்கொள்ளவும்.

வைத்தியபோதினி ஆபீஸ், கும்பகோணம்.

---

### ஸ்ரீ பரமேஸ்வர திருவுருவப்படம்.

வர்ணத்துடன் போட்டோக்கிராப்பில்

எடுத்திருப்பதாகிய படம், சைவசமயிகளாகிய பக்தர்கள் ஒவ்வொருவர் வீடுகளிலும் மடம் சத்திரமுதலிய இடங்களிலும் வைத்துப் பூசிப்பதற்குமிகச்சிறந்ததென்பது திண்ணம். இப்படம் வேண்டியவர்கள் அடியிற்கண்டவிலாசத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம். தபாற்செலவு வேறு. படத்தின் அளவு 24 × 20, அங்குலம் உள் அளவு 17 × 13, படம் 1-க்கு கிரயம் ரூ. 0—12—0.

சு. சந்திரசேகரம் பிள்ளை,

ஆர்டிஸ்டு & போட்டோகிராப்பர், அருந்தவம்புலம், நீர்முளைபோஸ்டு,

திருத்துறைப்பூண்டி தாலூகா, தஞ்சாவூர் ஜில்லா.

# ADVERTISEMENT.

# மறந்துவிடாதீர்கள்.

அநேக பொன் வெள்ளி பதக்கங்களும் நற்சாக்ஷிபத்திரங்களும் பெற்றவர்கள்.

புதிய சரக்குகள்! —— புதிய மாதிரிகள்!!

பிடித்தமில்லாத தினுசுகளை வாபஸ் பெற்றுக்கொள்வோம்.

## நாகரிகமான வெண்பட்டு வேஷ்டிகள்.

| முழம் நீளம் | | முழம் அகலம் | | ரூ. | அ. | முழம் நீளம் | | முழம் அகலம் | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | ,, | 2½ | ,, | 6 | 8 | 10 | ,, | 3 | ,, | 13 | 0 |
| 6 | ,, | 3 | ,, | 9 | 0 | 4 | ,, | 1¾ | ,, | 4 | 0 |
| 7 | ,, | 3 | ,, | 10 | 0 | 16 | ,, | 2½ | ,, | 22 | 0 |
| 8 | ,, | 3 | ,, | 11 | 0 | | | | | | |

## கம்பளிப் போர்வைகள்.

பனி குளிர் முதலியவைகளுக்கு உபயோகிக்கக்கூடிய நைஸான கம்பளி ரோமத்தால் நிசவு செய்த போர்வைகள் உறுதியும், மிருதுவும், நேர்த்தியும் நீடித்து நிலை நிற்கும் சாயமுமுள்ளது. வெள்ளை, மஞ்சள், ரோஸ், பச்சை, சிவப்பு, காக்கி, வாதாமி முதலிய பல்கலர்களிலுமுண்டு. 6 முழ நீளம் 3 முழ அகலம் விலை ரூ. 4½, 5, 7.

மேகவர்ண போர்வை 6 முழம் நீளம் 3 முழம் அகலம் ஜிர் 1. ரூபா. 7—8.

ஷை ஷை ஷை ,, 2, ரூபா. 6—0,

"காபூல் பால்காயம்" 10 தோலா டப்பி 1க்கு ரூ. 1.

## Brass toys.

இது அருமைக்குழந்தைகளின் மனதை ரமிக்கச்செய்யக்கூடியவிளையாட்டுச் சாமான். இது இந்தியர்களின் வீடுகளில் சமையல்செய்யும் பாத்திரங்களைப் போன்ற வடிவுள்ளது. இந்த விளையாட்டு செற்று ஒவ்வொன்றிலும் 32 வித சாமான்களடங்கியிருக்கும். பித்தளையினால் செய்யப்பெற்று மிகப் பளபளப்பும் அழகும் வாய்ந்தவை. ஐரோப்பியர்களும் வெகு பிரியத்துடன் ஏராளமாக வாங்குகிறார்கள். இது இந்தியரின் கை வேலை.

☞ இந்த அருமையான விளையாட்டு சாமான் இந்தியாவில் பிரபல பத்திரிகையாகிய "பம்பாய் டைம்ஸ் ஆப் இந்தியா" வால் மிகவும் புகழ்ந்து கொண்டாடப்பெற்றது.

| | | | |
|---|---|---|---|
| இதின் விலைகள். | பெரிய சயிஸ் செற்று 1க்கு ரூ. | | 3—8—0. |
| | மத்திம | ஷை | 2—0—0. |
| | சின்ன | ஷை | 1—8—0. |

கேட்லாக் இனாம்.

**கே. எஸ். முத்தையா அண்டு கம்பெனி,**

பட்டு வர்த்தகம், ஸ்ரீகாசி. **Benares City**

467

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## முகவுரை.

—:o:—

பதஞ்சலி மஹாமுனிவர், சரீரசுத்தி செய்து, அதனால் காய ஸித்தி பெறுதலுக்கு அநுகூலமாக வைத்திய சாஸ்திரத்தையும்; வாக்கு சுத்திசெய்து, அதனால் சப்தப்பிரஹ்ம உபாஸனை நலம் தரும்படி அனுஷ்டிப்பதற்கு, பாணினி வியாகரண சூத்திரங்கட்குப் பெயர்போன மஹாபாஷ்யத்தையும்; மனத்தைச் சுத்தி செய்து, கைவல்யம் பெறுவதற்கு அனுகூலமாக இந்த யோக சாஸ்திரத்தையும், மனிதர்களின் மேல் உள்ள காருண்ணியத்தினால் அருளிச்செய்தார். அவர் இன்ன தேசத்தில் இன்ன காலத்தில் அவதரித்தாரென்பது, வியக்தமாகத் தெரியவில்லை. ஆனால் இற்றைக்கு 2,300 வருஷங்களுக்கு முன்னர் காஷ்மீரத்தில் இருந்திருக்கலாமென்று சில வித்துவான்களின் அபிப்பிராயம். இவரை ஆதிசேஷ அவதாரமாகச் சொல்லுவதுண்டு.

இந்த யோகசாஸ்திரம் நன்கு பாதங்களாக நடைபெறுகிறது:—(1) சமாதிபாதம் (2) ஸாதநபாதம் (3) விபூதிபாதம் (4) கைவல்யபாதம் என்பனவாம்.

இந்த யோக சாஸ்திரத்துக்கு பாஷ்யம் செய்தவர் வியாசர். இவர் பகவான் ஸ்ரீ. வேதவியாஸர் எனச் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். மற்றும் சிலர், இவர் வேறொரு ரிஷியாவர் என்றும், வேதவியாஸரல்லர் என்றும் சொல்லுகிறார்கள். இவ்வியாஸ பாஷ்யத்திற்கு வாசஸ்பதி மிச்ரர் "தத்வ வைசாரதி" என்னும் விரிவான வியாக்கியானம் செய்திருக்கிறார். மேலும், விஞ்ஞானபிக்ஷு என்பவர் "யோகவார்த்திகம்" என்னும் வார்த்திகமும் எழுதியுள்ளார். ஸ்ரீ.போஜராஜர் என்பவர், "ராஜமார்த்தாண்டம்" என்னும் ஓர் விருத்தியையும் செய்திருக்கிறார்.

யோகசாஸ்திரத்தின் முக்கிய தாத்பரியமென்னவென்றால்: யோகத்தின் ஸ்வரூபம், அதன் ஸாதநம், அதன் விபூதிகள், சித்திகள் அதன் பலனான கைவல்லியமாம். இவ்விஷயங்களில், யோகசாஸ்திரத்திற்கும் உபநிஷத்துக்களுக்கும் யாதொரு விரோதமுமில்லை. உபநிஷத்துக்களின் பரமதத்துவங்களை சாக்ஷாத்கரிப்பதற்கு யோகசாஸ்திரம் பரமஸாதகமானது. ஆனால் சாங்கிய சாஸ்திரத்தின் ஸித்தாந்தத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு யோகசாஸ்திரம் நிகழ்கின்றமையாலும், சாங்கியத்துக்கும் உபநிஷத்துக்களுக்கும் சில முக்கிய விஷயங்களில் வேற்றுமை உண்மையாலும், யோகசாஸ்திரத்திற்கும் உபநிஷத்துக்களுக்கும் சில விஷயங்களில் விரோதமுள்ளதென அறியத்தக்கது.

இம்மொழிபெயர்ப்பு வியாஸ பாஷ்யத்தை அனுசரித்து நடைபெறுகிறது. ஷை பாஷ்யத்தினின்றும், மற்றவிடங்களினின்றும் சில முக்கியமான விஷயங்கள் குறிப்பாய், சுருக்கமாய் எழுதப்பட்டுள்ளன.

மொழிபெயர்ப்பு ஆசிரியர்.

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

469

## 1-வது. சமாதிபாதம்.

---

### பதஞ்சலியார் ஸ்தோத்திரம்.

* 𑌯𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌰𑍂𑌪𑌮𑌾𑌦𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌭𑌵𑌤𑌿 𑌜𑌗𑌤𑍋
𑌽𑌨𑍇𑌕𑌧𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯
𑌪𑍍𑌰𑌕𑍍𑌷𑍀𑌣𑌕𑍍𑌲𑍇𑌶𑌰𑌾𑌶𑌿𑌰𑍍𑌵𑌿𑌷𑌮𑌵𑌿𑌷𑌧𑌰𑍋
𑌽𑌨𑍇𑌕𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌃 𑌸𑍁𑌭𑍋𑌗𑍀।
𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌿𑌰𑍍𑌭𑍁𑌜𑌗𑌪𑌰𑌿𑌕𑌰𑌃
𑌪𑍍𑌰𑍀𑌤𑌯𑍇 𑌯𑌸𑍍𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂
𑌦𑍇𑌵𑍋𑌽𑌹𑍀𑌶𑌃 𑌸 𑌵𑍋𑌽𑌵𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌿𑌤𑌵𑌿𑌮𑌲𑌤𑌨𑍁
𑌰𑍍𑌯𑍋𑌗𑌦𑍋 𑌯𑍋𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌃॥

(இதன் பொருள்) சகல கிலேசங்களும் அற்றுப்போனவரும், உக்கிரமான விஷத்தையுடையவராயும், அநேக முகங்களையுடையவராயும், யோகஸித்தியைக் கொடுக்கிறவராயும், எப்போதும் தியானத்தில் இருப்பவராயுமுள்ள ஸர்ப்பராஜாவான ஆதிசேஷன், உலகத்தின் அநுக்கிரகத்திற்காக அனேக ரூபமாக அவதரிக்கிறர். அத்தகைய “ஆதிசேஷபகவான் சீஷர்களான உங்களை இரக்ஷிக்கட்டும்.

† 𑌯𑍋𑌗𑍇𑌨 𑌚𑌿𑌤𑍍𑌤𑌸𑍍𑌯 𑌪𑌦𑍇𑌨 𑌵𑌾𑌚𑌾𑌂
𑌮𑌲𑌂 𑌶𑌰𑍀𑌰𑌸𑍍𑌯 𑌚 𑌵𑍈𑌦𑍍𑌯𑌕𑍇𑌨।
𑌯𑍋𑌽𑌪𑌾𑌕𑌰𑍋𑌤𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌵𑌰𑌂 𑌮𑍁𑌨𑍀𑌨𑌾𑌂
𑌪𑌤𑌞𑍍𑌜𑌲𑌿𑌂 𑌪𑍍𑌰𑌾𑌞𑍍𑌜𑌲𑌿𑌰𑌾𑌨𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿॥

(இதன்பொருள்) வாக்கு, காயம், மனம் இவைகளின் மலங்களைப் போக்கடிக்கும்படியாக முறையே சப்தசாஸ்திரத்தையும், வைத்திய சாஸ்திரத்தையும், யோகசாஸ்திரத்தையும் ஜன உபகாரமாக அருளிய பகவான் பதஞ்சலியாரைப் போற்றுவாம்.

---

* இது வியாஸ பாஷ்யத்திலுள்ளது.

† இது வேறொரு இடத்தினின்று எடுக்கப்பட்டது.

## சூத்திரங்கள்.

1. 𑌅𑌥 𑌯𑍋𑌗𑌾𑌨𑍁𑌶𑌾𑌸𑌨𑌮𑍍 ॥

**யோகசாஸ்திரம் பூர்வமுறையின் சார்பாய் ஆரம்பிக்கப்படுகிறது.**

குறிப்பு:— ஆதியில் சாங்கியத்திற்குக் கபிலமுனியும், வேதாந்தத்திற்கு வியாசபகவானும் இருக்கின்றமைபோல, யோகசாஸ்திரத்திற்கு ஆதிகர்த்தர் ஹிரண்ணிய கர்ப்பராவர். பதஞ்சலியார் முன்னுள்ள சாஸ்திரத்தை அநுசரித்துப் பிரகிருதநூலைச் செய்திருக்கின்றமையால் சூத்திரத்தில் "அநுசாஸநம்" என்ற பதம் உபயோகிக்கப்பட்டுள்ளது.

யோகம் என்றால் சமாதி என்பது பொருள், அல்லது சேர்தல் என்றும் பொருள் கொள்ளலாம். ஜீவாத்மா பரமாத்மாவினுடன் ஒன்றுபடுதலாம். முன்னது தான் இந்நூலாசிரியரின் கருத்து. யோகசாஸ்திரத்தின் பிரயோஜனம் பிரகிருதிக்குட்பட்ட ஆன்மாவை வியோகம் பெறும்படி செய்தல். பந்தத்திற்குட்பட்டவன் பந்தவிமோசனம் பெறுதலுக்குச் சாதனமான நூல்.

சித்தமானது ஐந்து பூமிகள் அல்லது படிகள் உடையது.

(1) க்ஷிப்தம்=சஞ்சலமான நிலைமை.

(2) மூடம்=ஒன்றுமறியாத நிலைமை

(3) விக்ஷிப்தம்=சொற்பகாலம் சஞ்சலமின்மையும், வெகுகாலம் சஞ்சலமுண்மையும் இருக்கின்ற நிலைமை.

(4) ஏகாக்கிரம்=ஒரே வஸ்துவை அவலம்பித்திருக்கின்ற நிலைமை.

(5) நிருத்தம்=விருத்திசூந்நியமான நிலைமை, ஆனால் விருத்திபீஜமாகிய சம்ஸ்காரமாத்திரம் உள்ள நிலைமை.

முதல் மூன்றுபடிகளில் யோகாப்பியாசம் முடியாது. நான்காம், ஐந்தாம் படிகளில் கூடும்.

2. 𑌯𑍋𑌗𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌰𑍋𑌧𑌃 ॥

**யோகம் என்பது சித்தவிருத்திகளை நிரோதம் செய்தலாம்.**

குறிப்பு 1:—இந்த சூத்திரத்தால் நிருத்தம் என்ற நிலையான அஸம்பிரஜ்ஞாத சமாதி என்பது மாத்திரந்தான் யோகம் எனப் பொருள்படும். ஆனால் எல்லாச் சித்தவிருத்திகள் என்று சூத்திரத் தில் சொல்லாமையால் கீழான படிகளான க்ஷிப்தம், மூடம், விக்ஷிப் தம் இவைகளை நீக்கி ஏகாக்கிரம், நிருத்தம் என்ற இரண்டுபடிகளும் யோகப்பயிற்சிக்கு உரியதாகும். சித்தம் என்பது சத்வ, ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடன் கூடி நிகழ்வது. சத்வகுணமானது எப்போதும் அதனிடம் உள்ளது. சித்தம், ரஜஸ், தமஸ் இவைக ளுடன் சம்பந்திக்கும்போது, உலக விஷயங்களின் பாவங்கள் உண் டாகின்றன. தமஸ் மேலிட்டால், அதர்மம், அஜ்ஞானம், வைராக் கியமின்மை, ஐசுவரியமின்மை மனத்திற்கு ஏற்படும். ரஜஸ் மேலி ட்டால், ஷை பாவங்களின் எதிர்மறையான நிலைமை உண்டாகிறது. ரஜஸ் அற்பமேனும் இல்லாமல் பொய்த்துப்போமாகில், புருஷ ஸ்வ ரூபத்தில் பிரதிஷ்டை உண்டாகிறது. இந்நிலையானது தர்மமேகத் தியானத்திற்குப் போதலுக்கு அநுகூலமாயுள்ளது. தர்மமேக சமாதிவரையில் உள்ள சமாதியின் பல படிகள் ஸம்பிரஜ்ஞாத சமா தியில் அடங்கும். தர்மமேக சமாதியைப்பற்றிப் பின்னர் விவரிப் போம்.

குறிப்பு 2:—ஸம்ஸ்காரமாத்திரம் மிகுந்திருந்து விருத்திகள் ஒழிவடையும்போது, அந்நிலை அஸம்பிரஜ்ஞாத சமாதியாம். யோ கம் ஸம்பிரஜ்ஞாத சமாதியென்றும் அஸம் பிரஜ்ஞாத சமாதியென் றும் இருவகைத்தாம். இவ்விரண்டும் முறையே ஸபீஜம் என்றும் நிர்பீஜம் என்றும் பெயர்பெறும்.

3. 𑌤𑌦𑌾 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍 ॥

அப்போது (விருத்திகள் அடங்கும்போது) புருஷன் தன் ஸ்வரூபத் தில் இருப்பான்.

குறிப்பு:—விருத்திகள் அடங்கினால் விஷயம் ஒன்றுமில்லை. அச்சமயத்தில் கேவலம் தன்னிலையில் புருஷன் இருப்பான். அது கைவல்லிய ஸ்திதியைப் போன்றதாம்.

4. 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌮𑌿𑌤𑌰𑌤𑍍𑌰 ॥

ஏனையகாலத்தில் (விருத்திகள் அடங்காமல் இருக்கின்ற காலத்தில்) புருஷன், நிகழும் அந்தந்த விருத்தியுடன், ஸம்பந்தித்திருப்பான்.

5. 𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃 𑌪𑌞𑍍𑌚𑌤𑌯𑍍𑌯𑌃 𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌾𑌃 ॥

விருத்திகள் ஐவகை. சில துக்ககரமானவை. சில துக்கமின்மையானவை.

6. 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑌿𑌦𑍍𑌰𑌾𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌃 ॥

பிரமாணம், விபரியயம், விகற்பம், நித்திரை, ஸ்மரணை என்பன ஐவகை விருத்திகளாம்.

7. 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌗𑌮𑌾𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑌿 ॥

பிரத்தியக்ஷம், அநுமானம், ஆகமம் என்பன பிரமாணங்கள்.

குறிப்பு 1:—உபமானம், அருத்தாபத்தி, அனுபலப்தி, இம்மூன்றையும் சேர்த்து சிலர் ஆறு பிரமாணங்கள் உண்டென்பார்கள். ஆனால் இவை மூன்றும் அநுமானத்தில் அடங்கும். ஆகமம் = ஆப்த வாக்கியம், சப்தம், சர்வஞ்ஞனாகவும், கருணையுள்ளவனாகவுமிருக்கின்ற புருஷனின் வாசகம்.

குறிப்பு 2:—இம்மூன்று பிரமாணங்களினும் தாரதம்மியமுண்டு. சாதாரண மனிதன் பிரத்தியக்ஷத்தையும், அறிவில் மிகுந்தவன் பிரத்தியக்ஷம் அனுமானத்தையும், இன்னும் விசால அறிஞன் சப்தத்தையும் பிரமாணமாகக் கொள்ளுவான். எல்லாப் பிரமாணங்களும், ஆத்மஸம்வித் பெறும்வரையில் பயனுள்ளவை. ஆத்மஸம்வித் அடைந்த மஹாபுருஷனுக்குத் தன்னுடைய சாக்ஷாத்காரமே அன்றி, மற்றவை பிரமாணமன்று. அந்த உயர்நிலை பெறுவதற்கே, பிரமாணங்கள் படிகளாம், சாதனங்களாம்.

8. 𑌵𑌿𑌪𑌰𑍍𑌯𑌯𑍋 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌤𑌦𑍍𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌮𑍍 ॥

விபரியயம் என்பது ஒரு வஸ்துவிற்குரிய ஸ்வரூபம் தோன்றாமல் பொய்யான வேறொரு ஸ்வரூபம் தோன்றலாம்.

குறிப்பு:—சந்தேகம் என்பது விபரியயத்தில் சேர்ந்ததாக சூத்திரக்காரர் அபிப்பிராயம், அதனால் அதைப்பற்றி வேறாகச் சொல்லவில்லை.

9. 𑌶𑌬𑍍𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌪𑌾𑌤𑍀 𑌵𑌸𑍍𑌤𑍁𑌶𑍂𑌨𑍍𑌯𑍋 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌃॥

விகற்பம் என்பது வஸ்து உண்மையில் இன்றி, வார்த்தை மாத்திரையை அநுசரித்து உண்டாகும் மனோவிர்த்தியாம்.

குறிப்பு:—முயற்கொம்பு, வந்தியா புத்திரன், சைதன்னியம் (அறிவு) புருஷனுடைய ஸ்வரூபம், (இதில் சைதந்நியம், புருஷன் என்ற இரண்டு வார்த்தைகளினால் வித்தியாசம்இருப்பினும், அவைகள் குறிக்கும் பொருள் ஒன்றே, இரண்டல்ல) ராகுவின் தலை. இவை போன்றவை உதாரணமாகும்.

10. 𑌅𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌲𑌮𑍍𑌬𑌨𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌨𑌿𑌦𑍍𑌰𑌾॥

நித்திரை என்பது வெளிவிஷய பிரஞ்ஞை இன்றியும் (சத்வ ரஜோ குணங்கள் அடங்கி, தமோகுணம் மேலிடும் காலையில்) அவித்தை சம்பந்தருமான மனோவிருத்தியாம்.

குறிப்பு:— சாதாரண ஜனங்களின் அபிப்பிராயத்தில், நித்திரையில் விருத்தி சூன்யமாம். தூங்கி விழித்ததின்மேல், 'சுகமாய்த்தூங்கினேன்' என்ற ஸ்மரணை இருக்கின்றமையால் உண்மையில் அது தூக்கத்தில் அபாவரூபமான ஒரு விருத்தியாக இருக்கின்றது.

11. 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤 விஷயாஸம்ப்ரமோஷ꞉ 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃॥

ஸ்மிருதிஎன்பது அநுபவித்தவிஷயம் மனத்தைவிட்டு நழுவாமலிருத்தலாம்.

குறிப்பு:—அநுபவித்த(பிரமாணத்தினால் அநுபவித்த)இவ்வைந்து விருத்திகளும் சுகம், துக்கம், மோகம்இவைகளுக்குட்பட்டவை. இவ்விருத்திகளில் பிரமாணம், விபரியயம், விகற்பம் இவை மூன்றும் ஜாக்கிரதாவஸ்தையில் அநுபவிக்கப்படுகின்றன. இவைகளின் வாசனைகள் மாத்திரம் ஸ்வப்நாவஸ்தையில் அநுபவிக்கப்படுகின்றன. ஸுஷுப்தி அவஸ்தையில் நித்திரை மாத்திரம் உள்ளது. ஸ்மிருதி மற்றைய இரண்டு அவஸ்தைகளிலும் உள்ளது; நித்திரையில் இன்றும்.

12. 𑌅𑌭𑍍𑌯𑌾𑌸𑌵𑍈𑌰𑌾𑌗𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑍋𑌧𑌃॥

இவைகள் (மேற்கண்ட விருத்திகள்) அப்பியாசம்; வைராக்கியம் (என்ற உபாயங்களால்) நிரோதம் செய்யத்தக்கவை.

குறிப்பு:—மனோவிருத்திகளாகிற பிரவாகமானது, சத்வம் மேலிட்டிருந்தால், நல்ல மார்க்கத்திலும், ரஜஸ், தமஸ்கள் மேலிட்டிரு

ந்தால், தீயமார்க்கத்திலும் செல்லுகின்றது. நல்ல மார்க்கம் என்பது அந்தர்முகமாய்க் கைவல்லியத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கும். தீய மார்க்கமானது விஷய நுகர்ச்சி என்ற ஸம்ஸாரத்திற்குள் கொண்டுபோய் விடும். வைராக்கிய ஸாதநத்தால், விஷயப் பிரவாகத்தைத் தடுத்து அணைபோட்டும், அப்பியாச சாதநத்தால், நல்ல மார்க்கம் என்றதனை வெட்டிவிட்டும், அதில் மநோவிருத்திகளைச் செல்லும்படி செய்தலுமாம். வைராக்கியம், பிரதிபந்தம் அநிஷ்ட நிவிர்த்தியையும், அப்பியாசம் இஷ்டப்பிராப்தியையும் தரும்.

13. தத்ர ஸ்திதௌ யத்நோऽப்யாஸ:॥

அதில் (அப்புருஷனிடத்தில்) மனத்தை ஸ்திரமாக நிறுத்தலின் முயற்சி அப்பியாசமாம்.

குறிப்பு:—பகிர்முகமான விருத்திகள் போய் அந்தர்முகமான விருத்திகள் நடைபெறல் ஸ்திதி எனப்படும். அந்நிலையை அடைவதற்காக, பஹிர் அந்தர் சாதநங்களை அநுஷ்டித்தல் அப்பியாசமாம்.

14. ஸ து தீர்க்காலநைரந்தர்யஸத்கார
ஸேவிதோ த்ருடபூமி:॥

நீண்டகாலம் இடையறாமல் குறித்த லக்ஷியத்தில் பிரயத்தனத்துடன் அவ்வப்பியாசம் நிகழுமாகில், அது திடமானதாகும்.

15. த்ருஷ்டாநுஶ்ரவிக விஷய வித்ருஷ்ணஸ்ய
வஶீகாரஸம்ஜ்ஞா வைராக்யம்॥

வைராக்கிய மென்பது, பிரத்தியக்ஷ,(சாஸ்திரங்களில் பிரஸ்தாபித்திருக்கிற)அப்பிரத்தியக்ஷ விஷயங்களில் அவாவின்றி அவைகளை ஸ்வாதந்தர்யம் செய்யும் தகைமையாம்.

குறிப்பு:—வேண்டுதல், வேண்டாமை, இல்லா நிலைமை, வைராக்கியம். அது நாலுபடியுள்ளது. (1) யதமாநம்—முயற்சி. மனம் இந்திரிய விஷயங்களிற் செல்லாமல், தடுத்தலின் முயற்சி முதற்படி. (2) வியதிரேகம்—அம்முயற்சி செய்கிறதில், சில விஷயங்களைப்பற்றி விருப்பு வெறுப்பில்லாமல் முன்னரே தள்ளப்பட்ட விஷயங்களாகின்றன. அஃதாவது அவைகள் சம்பந்தமாக வைராக்கியம் பக்குவமாகியிருக்கிறது, சில நம்மை இழுக்கின்றன; அவை நம்மை இழுக்காமல் தடுக்க முயலுகின்றோம். இவைகளைப்பற்றிய வைராக்கியம்

பக்குவமாகிக்கொண்டுவருகின்றது. சில நம்மை இழுக்கின்றன. ஆனால் அவைகளைத் தடுக்க எவ்விதமுயற்சியும் செய்ய நாம் ஆரம்பிக்கவில்லை. இவைகளைப்பற்றி வைராக்கியம் ஏற்பட்டு, இனி பக்குவமாகவேண்டும். இவ்விதமாக விஷயங்களின் இழுப்பில் தாரதம்மியம் அறிதல் இரண்டாம்படி. (3) ஏகேந்திரியம்—பக்குவமானவைகளில், இந்திரியங்கள் சலிக்காமல் இருக்க, மனம் மாத்திரம், விஷயங்களில் ஒரு விருப்பு அல்லது வெறுப்பைக் கொள்ளுதல். மனமாகிற ஒரு இந்திரியத்தின் தொழில் இருக்கின்றமையால் ஏகேந்திரியம் என்பது மூன்றாம்படி (4) வசீகாரம்—விஷயங்கள் தாமே ஒழிவை அடைகின்றன. இந்திரியங்கள்சலிக்கவில்லை, மனத்தினிடத்திலுள்ள விருப்பு, வெறுப்பு என்றவையும் அற்றுப்போதல், அதனால் சுதந்தரம் ஏற்படும். நாம் விஷயங்களின் வசமாகாமல், அவைகளை வசமாக்கிக் கொள்ளல். இது நான்காம் படி. புருஷ தர்சனம் நிகழ்வதினால் இஃது உண்டாகும். கீதை உ-ம் அத்தியாயம் 59-ம் சுலோகம் இங்கு கவனிக்கத்தக்கது.

16. 𑌤𑌤𑍍𑌪𑌰𑌂 𑌪𑍁𑌰𑍁𑌷𑌖𑍍𑌯𑌾𑌤𑍇𑌰𑍍𑌗𑍁𑌣𑌵𑍈𑌤𑍃𑌷𑍍𑌣𑍍𑌯𑌮𑍍॥

பரம வைராக்கியம் என்பது, புருஷதர்சனம் நிகழ்வதினால் (சத்வ, ரஜஸ், தமஸ் என்ற) குணங்களினும் பற்றில்லாத நிலையாம்.

குறிப்பு:—சாதாரண வைராக்கியம், காரியங்களான விஷயங்களில் பற்றில்லாமை. காரணங்களான குணங்களில், பற்றில்லாமை பரமவைராக்கியம். முன்னது அபர வைராக்கியம் என்றும் பின்னது பரவைராக்கியம் என்றும் பெயர்பெறும். முன்னது ஸத்வ குணம் மேலிட்டு ரஜோகுணம் சம்பந்தமுடையதாய் தமஸ் அற்றுப்போயிருக்கின்ற நிலை. இதில் சித்திகள் அடையலாம். சுவர்க்கம், விதேகிகளின் நிலைமை, பிரகிருதிலயம் முதலியவை பெறலாம். பின்னதான பரவைராக்கியம் பெற்ற யோகி ஷை அனுபவங்கள் அடைய அருகனாகவிருந்தும், அவைகளை அலக்ஷியம் செய்து, புருஷதர்சனம் நோக்கமுள்ளவனாக, புருஷனை சாக்ஷாத்கரிக்கிறான்.

17. 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌵𑌿𑌚𑌾𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌾𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌰𑍂𑌪𑌾
𑌨𑍁𑌗𑌮𑌾𑌤𑍍𑌸𑌂𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾𑌤𑌃॥

ஸம்பிரஞ்ஞாத ஸமாதி என்பது விதர்க்கம், விசாரம், ஆநந்தம் அஸ்மிதை என (நால் வகை) ரூபத்தை அனுசரித்து நிகழ்வதாகும்.

குறிப்பு:—சாதனங்களைச் சொல்லி, பின்னர் சாத்தியம், அதாவது அடையப்படும் ஸமாதிகளைச் சொல்லுகின்றார். ஸமாதி இருவிதம். முதற்படி ஸம்பிரஞ்ஞாத ஸமாதி, இரண்டாம்படி அஸம்பிரஞ்ஞாத ஸமாதி. ஸம்பிரஞ்ஞாத சமாதி நான்கு உட்பிரிவுகளையுடையது. யோகியானவன் ஸ்தூல வஸ்துவை முதன்மையில் தியானம் செய்து (விதர்க்கம்), பின்பு அதன் சூக்ஷ்ம நிலையான தன்மாத்திரைகளைத் தியானம் செய்கிறான் (விசாரம்). இது வில்வித்தையில் பழகுவோன், முதலில் ஸ்தூல லக்ஷியத்தையும், பின்பு சூக்ஷ்ம லக்ஷியத்தையும் வைத்துப் பழகுவது போன்றதாகும்.

(1) ஸ்தூலவஸ்து தியானம்—விதர்க்கம்.

(2) சூக்ஷ்மவஸ்து தியானம்—விசாரம்.

(3) இந்திரியங்கள் ஸ்தூலவஸ்துக்களில் செல்லாமல் அதனதன் ஸ்தானத்தில் நிற்கும்படி செய்தலினால் உண்டாகும் அனுபவம்—ஆனந்தம்.

(4) வேறு ஒன்றும் மனத்தில் வராமல் பிரயத்தனத்தால் தடுத்து நான் என்ற பிரஞ்ஞைமட்டும் இருப்பது அஸ்மிதை. விசாரம், ஆனந்தம், அஸ்மிதை இம்மூன்றும் விதர்க்கத்தில் இருக்கின்றன. ஆனந்தம், அஸ்மிதை இவ்விரண்டும் விசாரத்தி லிருக்கின்றன. அஸ்மிதை மாத்திரம் ஆனந்தத்தில் இருக்கின்றது. மேற்கண்ட விஷயங்களையே அடியில் வருமாறு சொல்லலாம்:

(1) முதற்படியில் ஸ்தூல விஷயங்களின் ஒன்றை லக்ஷியம் செய்து தியானம் நிகழும்—விதர்க்கம்.

(2) இரண்டாம்படியில் சூக்ஷ்மமான விஷயங்களின் யாதேனும் ஒன்றை லக்ஷியம்செய்து தியானம் நிகழும். பஞ்சதன்மாத்திரை, அகங்காரம், மஹத்தத்துவம் முதலியவைகளில் ஒன்றின்மேல் தியானிப்பது—விசாரம்.

(3) மூன்றாம்படியில், ஸ்தூலசூக்ஷ்ம விஷயங்கள் இல்லாமல், இந்திரியங்களை அதனதன் ஸ்தானத்தில் நிறுத்தி, அந்நிலையில் தியானம் பண்ணுவது ஆனந்தம்.

(4) நான்காம் படியில், இந்திரியங்களையும் விட்டு நான் என்ற பாவம் தனித்திருத்தல் அஸ்மிதை.

இம்முறையில் மனத்திற்கு யாதேனும் ஒரு ஆலம்பநம் (பிடிப்பு) உள்ளது. அதனால் இந்த ஸமாதிக்கு ஸம்பிரஞ்ஞாத ஸமாதி எனப் பெயர்.

18. விராமப்ரத்யயாப்யாஸபூர்வ:
ஸம்ஸ்காரசேஷோऽந்ய:॥

குறிப்பு:—இம்முறையின் அப்பியாஸம் ஸ்திரமானபிறகு, ஒருவித ஆலம்பநமுமின்றி மனம் தனித்திருத்தல் ஏற்படும். ஆனால் ஸம்ஸ்கார சேஷம், இச்சமாதி நிகழுங்கால், இருக்கும். இச்சேஷமும் இச்சமாதி ஸ்திரப்படுமாகில், ஒழியும். இந்நிலையைத் திருமூலர் அடியில் வருமாறு பிரஸ்தாபிக்கிறார்:—

நானென்றுந் தானென்று நாடினான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகிலேனே —திருமந்திரம்.

இது எல்லா விர்த்திகளும் ஓய்ந்த நிலை. திரிபுடி அற்ற படி ஆனால் இது ஸ்ருஷ்டியின் லயம் அன்று. பிரஞ்ஞை மாத்திரம் இருக்கும். அலையற்ற கடல்போன்ற நிலை இது. "திரை பொரா மன்னும் அமிர்தத் தெண் கடலே" என்ற மாணிக்கவாசகர் அனுபவ வாக்கு இங்கு கவனிக்கத்தக்கது. ரஜஸ், தமஸ் என்ற குணங்கள் நீங்கப்பெற்று, சுத்த ஸத்வ குணஸ்வரூபமாகவே ஆகின்ற நிலை இதுவாம். பரவைராக்கியம் இவ்வுயர்நிலைக்குச் சாதனமாம்.

மனத்தின் ஏகாக்கிர நிலையில் ஸம்பிரஞ்ஞாத சமாதி ஏற்படக்கூடியது. மனத்தின் நிருத்த நிலையில், அஸம்பிரஞ்ஞாத சமாதி ஏற்படக்கூடியது. அதனால் அஸம்பிரஞ்ஞாத சமாதி, நிரோத சமாதி என்றும் பெயர் பெறும்.

19. 𑌭𑌵𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑍋 𑌵𑌿𑌦𑍇𑌹𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌲𑌯𑌾𑌨𑌾𑌮𑍍 ॥

இந்த அஸம்பிரஜ்ஞாத சமாதியானது வைராக்கியம் முற்றும் ஏற்படாமல் போன நிலையில்) தேவர்களின் ஸ்தானத்தையும் பிரகிருதிலய ஸ்தானத்தையும் கொடுக்கும்.

குறிப்பு:—அஸம்பிரஜ்ஞாத சமாதி (1) பவப்பிரத்தியயம் (2) உபாயப்பிரத்தியயம் என இருபடிகள் உடையது.

(1) பவப்பிரத்தியயம், அவித்தையைக் காரணமாக உடையது. அதாவது அவித்தையின் சம்பந்தமுடையது. இந்நிலையில் அவித்தை என்ற ஆவரணம் உள்ளது. பல புவனங்களின் போகங்களை அனுபவிக்கவேண்டுமென்ற இச்சை யோகியைப்பற்றி நிற்கும். வைதேகியம் அல்லது தேவர்களின் நிலைமையும் இதில் அடங்கும். இவ்வித அனுபவங்களுக்குக் காலவரம்பு உண்டு, "இந்திரியங்களை உபாஸிக்கிறவர்கள், 10 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வஸிப்பார்கள் என்றும், பூதங்களை, அதாவது பஞ்சதந்மாத்திரைகளை உபாஸிக்கிறவர்கள் 100 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களிலும், அகங்காரத்தை உபாஸிக்கிறவர்கள் 1000 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களிலும் வஸிப்பார்கள்" என்றும் வாயுபுராணத்தில் சொல்லியிருக்கிறது.

பிரகிருதிலயாள், மகத், அவியக்தம் முதலியவைகளை உபாஸிக்கிறவர்கள். அதாவது அதுவும் தானும் ஒன்று என, உபாஸிக்கிறவர்வர்கள். சரீரம் போனபிறகு, உபாஸியமான வஸ்துவுடன் லயத்தை அடைகிறார்கள்.

"𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌤𑍁𑌰𑌸𑍍𑌮𑌿𑌂𑌲𑍍𑌲𑍋𑌕𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋 𑌭𑌵𑌤𑌿 𑌤𑌥𑍇𑌤𑌃
𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯 𑌭𑌵𑌤𑌿"—சாந்தோக்கிய உபநிஷத்.

(இதன் பொருள்) புருஷன் எந்த சங்கல்பத்துடன் மரணமடைகிறானோ, அந்த சங்கல்பரூபமாக லோகாந்தரத்தில் ஆகிறன்.

"𑌯𑌂 𑌯𑌂 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌸𑍍𑌮𑌰𑌨𑍍𑌭𑌾𑌵𑌂 𑌤𑍍𑌯𑌜𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌕𑌲𑍇𑌵𑌰𑌮𑍍 ।
𑌤𑌂 𑌤𑌮𑍇𑌵𑍈𑌤𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌸𑌦𑌾 𑌤𑌦𑍍𑌭𑌾𑌵𑌭𑌾𑌵𑌿𑌤𑌃 ॥

பகவத்கீதை.

(இதன்பொருள்) "கௌந்தேய (ஒருவன் தனது வாழ்வின்) முடிவிலே எந்தெந்தப் பொருளை நினைந்து சரீரத்தை விடுகின்றனே, அதனைப் பற்றிய பாவனையை எப்பொழுதும் பாவித்த, (ஸம்பாதித்துக்கொண்ட) வனாய் அதையே அடைகிறன்.

இவர்களுக்கு நீடித்த சுகமிருந்தாலும் அதற்கு முடிவு உண்டு. புநர்ஜந்மம் உண்டு. தவளைகளின் கருக்கள் மழையில்லாத காலத்தில் மண்ணேடு கலந்து அந்தர்கதமாக இருக்கின்றன, அவைபோல, இப்பிரகிருதிலயாள் அவியக்தத்தில் லயமடைகிறார்கள். பின்பு தவளைக் கருக்கள் வருஷகாலத்தில் உண்டாகுமாறுபோல, இப்பிரகிருதிலயாளானவர்கள், பூமியில் சரீரம் பெறுகிறார்கள். அவர்களுக்கு அந்த லயகாலத்தில் அந்த லயம் கைவல்லியத்திற்குச் சமமானதாகத் தோன்றும்; ஆனல், அது கைவல்லியமன்று.

உபாயப்பிரத்தியயம்:—புருஷ ஸாக்ஷாத்காரத்தை உண்டுபண்ணுதல் மநத்தின் பிரயோஜநம். மேற்கண்ட பிரகிருதிலய அநுபவங்களில் பற்றில்லாமல், மநம் மேல் நோக்கி, புருஷ தர்சநம் பெறுமாகில், அதுவே கைவல்லிய நிலை. இது தான் உபாயப்பிரத்தியயம். மஹத்தை அதாவது புத்தியை நான் என்று உபாஸிக்கிறவர்கள், 10,000 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பார்கள் என்றும், அவியக்தத்தை உபாஸிப்பவர்கள் 1,00,000 மந்வந்தரங்கள் லோகாந்தரங்களில் வசிப்பார்கள் என்றும், புருஷ தர்சநம் அடைகிறவர்கள் காலவரம்பைத் தாண்டுகிறார்கள் என்றும், வாயு புராணத்தில் சொல்லியிருக்கின்றன.

20. ஶ்ரத்தாவீர்யஸ்ம்ருதிஸமாதி
ப்ரஜ்ஞாபூர்வக இதரேஷாம்॥

(முன் பிரஸ்தாபித்த தேவர்களின் ஸ்தாநம், பிரகிருதிலயஸ்தாநம் இவைகளைக் கடந்தாத)மற்றவர்களுக்கு சிரத்தை, வீரியம், ஸ்மிருதி, ஸமாதி இவைகள் மூலமாய் (கைவல்லியம் சித்திக்கும்.)

குறிப்பு:—சிரத்தை என்பது இங்கு, உயர்நிலமமைந்த லக்ஷியமான கைவல்லியத்தை நோக்கான மநத்தின் தெளிவும், அதனால் மநத்தின் விசேஷ முயற்சியுமாம். புத்தி மேன்மேலும் தெளிவுபெற, வீரியம், அதாவது மந எழுச்சி, மந உத்ஸாகம் ஏற்படும்.

ஸ்மிருதி: அந்த உயர்நலமுள்ள லக்ஷியம் மநத்தில் தோன்றவே, அதை இடையறாது நினைத்தல், தியானித்தல்.

ஸமாதி: அப்படி நினைத்தலால் மநம் ஐகாக்ரியம் கொள்ளும். மநச்சலநமின்மை உண்டாம்.

பிரஞ்ஞை: மநம் ஸமாதி பெறவே யதார்த்தமான ஞாநம், மெய்யுணர்வு உண்டாகும்.

இவைகளில் முன்னது, பின்னது உண்டாவதற்கு அநுகூலமாம்.

21. தீவ்ரஸம்வேகாநாமாஸந்ந:॥

தீவிரமான வைராக்கியமுள்ளவர்களுக்கு, ஸமாதிநிலை ஸமீபமாயுள்ளது.

குறிப்பு:—யோகிகள் 9 வித படிகளில் உள்ளவர்கள். உபாயங்கள், வைராக்கியங்களின் தாரதம்மியங்களினால் அப் படிகள் ஏற்படுகின்றன. உபாயம் மூன்று விதம்—மிருது, மத்தியமம், அதிமாத்திரை; வைராக்கியமும் மூன்று விதம். அதிமாத்திரையான உபாயம், அதிமாத்திரையான வைராக்கியம் இவையிரண்டும் கூடிய யோகிக்கு, இச்சூத்திரத்திற் சொல்லிய பிரகாரம், ஸமாதி ஸமீபத்திலுள்ளது. அதாவது ஸமாதி லாபம், ஸமாதிபலம் உண்டாகிறது.

சிரத்தை முதலிய உபாயங்களை அப்பியஸித்தாலும், ஸமாதி லாபம், ஏன் எல்லாரும் அடையவில்லை என்றால், மேற்கண்ட விதமாக, சிரத்தை முதலியவைகள் பல படிகளாக இருக்கின்றன. அப் படிகளின்கண்ணுள்ள யோகிகள் பல திறத்தாராக இருக்கின்றார்கள். உபாயமு, வைராக்கியம் பல தாரதம்மியங்களை உடையன. அத் தாரதம்மியங்களுக்குக் காரணம், பூர்வஜந்மங்களில் ஏற்பட்ட ஸம்ஸ்கார விசேஷங்களாம். ஸம்பிரஞ்ஞாத ஸமாதியின் பலன் அஸம்பிரஞ்ஞாத ஸமாதியாம். அஸம்பிரஞ்ஞாத ஸமாதியின் பலன் கைவல்லியமாம்.

22. 𑌮𑍃𑌦𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃॥

மேலும் அதிதீவிரமான வைராக்கியம் மூன்று படிகளை உடையது, மிருது, மத்தியமம், அதிமாத்திரை. அவைகளில் பின்னது முன்னதை விட விசேஷமாம்.

23. 𑌈𑌶𑍍𑌵𑌰𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌨𑌾𑌦𑍍𑌵𑌾॥

ஈசுவரபக்தி விசேஷத்தினலாவது.

குறிப்பு:—முன் 20-ம் சூத்திரத்தில் கண்ட உபாயங்களைத் தவிர, பின்வரும் சூத்திரங்களில் பிரஸ்தாபிக்கப்படும் இன்னும் பல உபாயங்களால் ஸமாதிநிலையைப் பெறலாம் என்பதைச் சொல்லுகிறார். இச் சூத்திரத்தில் ஈசுவரப் பிரணிதானம், அதாவது இறைவனிடம் அன்பின் மிகுதியால் ஸமாதி லாபம், பலம் பெறலாம் என்பது சொல்லப்படுகிறது. வேறு வியாபாரமின்றி பக்தியினுல் மாத்திரம் இச்சமாதி லாபம் சித்திக்கும். பக்தி என்பது மநம், மொழி, மெய்களால் நிகழ்வது. பக்தியினுல் மாத்திரம் என்பதற்குப் பகவத்கீதை 9-ம் அத்தியாயம், 22-ம் சுலோகம் பார்க்க.

24. 𑌕𑍍𑌲𑍇𑌶𑌕𑌰𑍍𑌮𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌶𑌯𑍈𑌰𑌪𑌰𑌾𑌮𑍃𑌷𑍍𑌟𑌃
𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑌿𑌶𑍇𑌷 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃॥

கிலேசம், கர்மம், பலன்கள், ஆசயம் இவைகள் இல்லாத புருஷசிரேஷ்டன் ஈசுவரனும்.

குறிப்பு 1:—முன் சூத்திரத்தில் சொன்ன ஈசுவரன் எத்தன்மையன் என்பதை, 24, 25, 26-வது சூத்திரங்களிலும், அவரைப் பக்திசெய்யும் முறையை 27, 28-லும், அதன் பயனை 29-லும் விவரிக்கிறார்.

குறிப்பு 2:—கிலேசம், 2-வது பாதம், 3-ம் சூத்திரத்திற் சொல்லியிருக்கிறபடி, அவித்தை, அஸ்மிதை, ராகம், துவேஷம், அபிநிவேசம், என்பனவாம். கர்மங்கள் என்றால் அவைகளுக்குக் காரணமான நன்மை, தீமையாம். பலம் என்பது அக்கர்மங்களின் பயன்கள். அவை ஜாதி, ஆயுஸ், போகங்கள் என்பவையாம். ஆசயம் என்றால் பூர்வகர்ம வாசனைகள். இப் பூர்வகர்ம வாசனைகளே இந்த ஜன்மத்தில் கர்மங்கள் நடைபெறக் காரணமாகும். இவை சித்தத்தில் ஸம்

ஸ்காரரூபமாக இருக்கின்றன. புருஷன் அவைகளின் பலன்களை அநுபவிப்பதால் அவனிடம் ஆரோபிக்கப்படுகின்றன. இது, சண்டையில் யுத்தவீரர்கள் ஜயித்தாலும் தோல்வியடைந்தாலும், அஜ்ஜயமும் தோல்வியும் இராஜாவைச் சேர்கின்றமைபோலவாம். இந்த போகம் சுத்தமாய்ப் பற்ருத புருஷ சிரேஷ்டன் ஈசுவரன்.

(1) வேதாந்திகள், ஜீவனுக்கு அஞ்ஞானதசையில், கர்த்திருத்துவம், போக்திருத்துவம் உணடென்பார். சாங்கியர்களும் பாதஞ்சலர்களும், கர்த்திருத்துவம் புத்திக்கும், போக்திருத்துவம் ஜீவனுக்கும் உண்டென்பார்கள். இந்த வித்தியாசம் கவனிக்கத்தக்கது.

(2) கைவல்லியத்தை அடைந்த மஹாபுருஷர்கள் அநேகர் உண்டு. ஆனல், அவர்கள் ஈசுவரர்கள் ஆகமாட்டார்கள் என்பதைக் குறிப்பிட, சிரேஷ்டன், விசேஷன் என்ற பதங்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவர்களுக்கு முன் 3 பந்தங்கள் இருந்து, பின் அவைகள் விலகிவிட்டன. மூன்று பந்தங்களாவன :—

i. பிரகிருதிலயாளுக்கு : மூலப்பிரகிருதியால் மாத்திரம் பந்தம் உண்டு.

ii. விதேகாளுக்கு (தேவர்களுக்கு): ஷை பிரகிருதி விகாரங்களால் (மஹத், அஹங்காரம், பஞ்சதந் மாத்திரைகளால்) ஏற்படுகிற பந்தம் உண்டு.

iii. மேற்கண்டவர்களுக்குக் கீழானவர்களுக்கு தக்ஷிணுதி பந்தமுண்டு. அதாவது பூத பௌதிகமான பந்தம்.

ஈசுவரனே எப்போதும் எக்காலத்திலும் பந்தம் இல்லாதவன். பிரகிருதிலயாளுக்கு முன்னும் பந்தம் இருந்தது. இனியும் பந்தம் நேரிடும். அவர்களுக்குப் பிரகிருதியாலேயே பந்தம் ஏற்படுகிறது.

(3) அத்தன்மையான புருஷசிரேஷ்டர் இருக்கிறுர் என்பதற்குப் பிரமாணம் என்னவென்ருல், சாஸ்திரம்தான். சாஸ்திரம் எப்படிப் பிரமாணமாகும்? அஃது உத்தமமானவர்களின் உயர்கவ

மமைந்த புத்தியின் அநுபவஞானம். அத்தன்மையான புத்திக்கும் சாஸ்திரத்திற்கும் உள்ள சம்பந்தம் அநாதி. இது முன்னது, இது பின்னது என்று நம்மால் அறியமுடியாது. அதனுல் ஈசுவரன் என்றும் முக்தர், என்றும் எல்லா·சம்பத்துமுள்ளவர். மேலான வரையும் சமானமான வரையும் இல்லாதவர்.* அவர் எல்லா ஐசுவரியத்துக்கும் முடிவு, எல்லே.†

(4) உலகத்தில் எல்லா வகையானும் ஸமமாயுள்ள இரண்டு வஸ்துக்கள் இல்லே. காலத்தினுலாவது வித்தியாஸம் ஏற்படும். அதனுல் ஈசுவரன், மாணிக்கவாசகர் சொல்லுகிறபடி,

"முன்புமாய்ப் பின்பு முழுதுமாய்ப் பரந்த
முத்தனே! முடிவிலா முதலே!"

"குறைவிலா நிறைவே! கோதிலா அமுதே!
ஈறிலாக் கொழுஞ்சுடர்க்குன்றே!" —மாணிக்கவாசகர்.

தானுய்த், தனிமுதலாய், என்றுமுள்ளவர்.

அத்வைத வேதாந்தத்தின் மோக்ஷத்திற்கும் பாதஞ்சலாள் கைவல்லியத்திற்கும் வித்தியாஸம் என்னவென்றுல், பின்னதில் ஜீவபேதத்துவம், ஈசுவர பேதத்துவம் இருக்கின்றன. முன்னதில் இவைகள் அற்று அகண்டாகார விர்த்தியைப் பெறுதலே மோக்ஷமாம்.

---

* மனனக மலமற மலர்மிசை யெழுதரும்
மனனுணர் வளவிலன் பொறியுணர் வவையிலன்
இனனுணர் முழுநல மெதிர்நிகழ் கழிவினும்
இனனில னெனனுயிர் மிகுநரை யிலனே. —நம்மாழ்வார்.

† அவ்யக்தாத் புருஷ꞉ பர꞉ புருஷாந்ந பரம் கிஞ்சித்
ஸா காஷ்டா ஸா பரா கதி꞉। —கட உபநிஷத்

இதன்பொருள்—மூலப்பிரகிருதியைவிட புருஷன் மேலானவர். அவர் தான் முடிவு, எல்லே. அவரைவிட மேலானதுவேறு ஒன்றுமின்றும்

(5) ஐசுவரியம், ஞாந, இச்சா, கிரியா சக்திகளின் ஸம்பூர்ணமும், விசேஷ ஞாநமும், கிரியையும் ஈசுவரனிடம் எவ்விதம் இருக்கப்பாலன? ஈசுவரன் ஸதாமுக்தன். அவித்தைக்குப் புறம்பானவர். போகாபவர்க்கங்களுக்காக நம்மைப்போல அவருக்கு மநம் இல்லை. அப்படியானல் மநம் இன்றி, ஞாந கிரியா சக்திகள் எவ்விதம் அவரிடம் உள்ளன என்றால், ஜீவர்களிடம் உள்ள மநம் ஸத்துவ, ரஜஸ், தமஸ் உள்ளதாக இருக்கிறது. அவர் சுத்த ஸத்துவமான மநத்தைச் சுவீகரித்துக்கொள்ளுகிறார். தாமே அந்த சுத்த மநத்தில், ஞாந, கிரியை என்ற சக்திகள் அமைகின்றன. ஈசுவரன் இத்தன்மையான மநத்தைச் சுவீகரித்துக்கொளல், மனிதர்களைப்போல அவித்தையாலன்று. அதனல் இம்மநத்தில் ஸ்வாமி, ஸ்வாமித்துவம் இல்லை. ஜனங்களின்மேலுள்ள பரம கருணையால், தாபத்திரயத்தினின்று அவர்களைக் கரையேற்றும் பொருட்டு, ஞாந, தர்ம உபதேசத்திற்காக, தாமே சுத்த சத்துவமான மநத்தை ஏற்படுத்திக்கொள்ளுகிறார். சாதாரண மனிதன் அவித்தை வசமாகிறான். ஈசுவரன், அவித்தையின் ஸ்வரூபத்தைத் தெரிந்துகொண்டு, அவித்தையை, லோகோபஹாரார்த்தம், ஸ்வீகரித்துக்கொள்ளுகிறார். இராமனின் வேஷம் பூண்ட ஒருவன், இராமனுக நடித்தாலும், அந்நடந காலத்திலும், உண்மையில் தான் ராமன் அல்லன் எனத் தெரிந்திருப்பான்போல, ஈசுவரன் தாமே இந்த அவித்தையை வருவித்துக்கொள்ளுகிறார். இது அவருடைய தத்துவமன்று.

(6) ஜகத்திற்கு க்ஷேமம் உண்டாக்கவேண்டியதற்காக, ஸத்துவ குணத்தை ஈசுவரன் ஸ்வீகரித்துக்கொள்ளுகிறார்.* ஸ்த்துவ குணமிருந்தால்தான், ஜகத்திற்கு அநுக்கிரஹம் செய்யவேண்டுமென்று ஈசுவரனுக்கு இச்சையுண்டாகிறது. இவ்விதமாக அந்நியோந்

---

*𑌅𑌜𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍𑌨𑌵𑍍𑌯𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑍀𑌶𑍍𑌵𑌰𑍋𑌽𑌪𑌿 𑌸𑌨𑍍
𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌯 𑌸𑌂𑌭𑌵𑌾𑌮𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌮𑌾𑌯𑌯𑌾 ॥

ப. கீ. 4-ம் அத்தியாயம் 6-ம் சுலோகம்.

*இதன்பொருள்-(நான்) பிறப்பற்றவனுனலும், நாசமற்ற சுபாவமுள்ளவனுனலும், பிராணிகளுக்கீசனுயிருந்தாலும், சொந்தமான சத்வாம்ச மாயையைச் சுவீகரித்து, ஸ்வரூப சக்தியினுலே அவதாரஞ் செய்கிறேன்.

நிய ஆச்ரய தோஷம் போலத்தோன்றுகிறது. உண்மையில் இல்லை. ஜகத் சிருஷ்டி, ஸம்ஹாரம் என்பவை அநாதியாக இருப்பதால், ஈசுவரனிடம் எப்போதும் ஸத்துவ குணம் உள்ளது. அடுத்த கல்பத்தில், சிருஷ்டி முறை இவ்விதமென்று சங்கல்பித்துக் கொண்டு, ஈசுவரன் ஒரு கல்பத்தின் சிருஷ்டியை ஸம்ஹாரிக்கிருர். முன் சங்கல்பமானது மூலப்பிரகிருதியுடன் மஹாப்பிரளய காலத்தில் லய அவஸ்தையைப் பெற்றிருந்தாலும், சிருஷ்டி காலத்தில் அந்த ஸங்கல்ப வாசனையானது, பின்பு ஈசுவரனின் சத்வ சித்த ரூபமாகப் பரிணமிக்கின்றது. ஒருவன் மறுநாள் சூரிய உதயத்திற்கு முன் எழுந்திருக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் தூங்குகிருன். பின்பு, அவ்வெண்ணத்தின் காரியமாக, அந்தக் குறிப்பிட்ட காலத்தில் எழுந்திருக்கிருன். இது போலவே ஈசுவரன் சிருஷ்டி விஷயமும், ஈசுவரன் ஜகத்திற்கு அநுக்கிரஹம் செய்யவேண்டுமென்று இச்சையும், அதற்காகச் சத்துவ குணத்தைச் சுவீகரித்தலும், அதனல் சிருஷ்டியும், இவை அநாதியாகஇருக்கின்றமையால், மேல்கண்ட அந்நியோந்நியாச்ரய தோஷம் இல்லை.

(7) பிரளய காலத்தில், ஈசுவரனின்சித்தமானது, பிரகிருதியில் லயத்தை அடைகிறதில்லையென்று சிலர் சொல்லுவார். அது சரியன்று. பிரகிருதியில் லயத்தை அடையாமற்போனல்,சித்தம் அதினின்று உண்டானதாகச் சொல்ல இயலாது. சித்தம் ஜடமாயும், ஈசுவரன் சேதநனுகவும் இருக்கின்றமையால், சித்தம் ஈசுவரனிடமிருந்து உண்டாவது என்று சொல்ல இயலாது. அதனல், மூன்ருவதாக வேறு ஒன்றைக் கற்பிக்க, மூன்ருவது இருப்பதற்குப் பிரமாணம் இல்லை. அதனல், ஈசுவரரின் சித்தமானது பிரதானத்தில் லயம் அடைகிறது.

(8) மேற்கண்டபடி சொல்வதற்குப் பிரமாணம் யாதுசாஸ்திரம், அதாவது வேதம், ஸ்மிருதி, புராணங்கள், இதிஹாஸங்கள், இவைகள் ஈசுவரனின் உத்கிருஷ்ட சத்துவ குணத்தினின்று உண்டாயின. அதாவது மகரிஷிகளின் சுத்த மநத்தின் ஸத்துவ நிலையில் தோன்றிய விஷயங்கள் பின்பு வெளிவந்தன.

486

25. தத்ர நிரதிசயம் ஸர்வஜ்ஞபீஜம்

அவரிடத்தில் (ஈசுவரனிடத்தில்), எல்லாவற்றையும் அறியும் சக்தியானது உயர்வற உயர்வுபெற்றது.*

1. இந்திரியங்களுக்குப் புறம்பாய் உள்ள விஷயங்களில், நடந்த விஷயம், நடக்கப்போகும் விஷயம், நடக்கிற விஷயம் இவைகளைத் தனியாகவோ, ஒருங்காகவோ, பெரிதாகவோ, அல்லது சிறிதாகவோ அறியுஞ் சக்தியானது ஸர்வஞ்ஞபீஜம். அதாவது இந்த ஞானம் மேன்மேலும் பெருகிக்கொண்டுபோய் எந்த இடத்தில் முடிவு பெறுகிறதோ, அந்த ஞானஸ்வரூபி ஈசுவரன். ஞானம் பெருகிக்கொண்டுபோய் முடிவுபெறும் இடம் ஈசுவரன் என்றதினால், ஈசுவரன் இருக்கிறான் என்று சித்திக்கும். அப்போது, சப்தப் பிரமாணம் வேண்டுவதில்லையே என்றால், அநுமானத்தில் ஈசுவரன் உளன் என்று சாமாந்நியமான அறிவு மாத்திரம் உண்டாகும். அவன் குணங்களைப்பற்றியும், இத்தன்மையன் என்பதைப் பற்றியும் உள்ள விசேஷஞானம் சப்தப்பிரமாணத்தினால்தான் உண்டாகும்.

2. அவருடைய சிருஷ்டியினால் அவருக்கு யாதொரு பிரயோஜநமுமில்லை. பிராணிகளின் பிரயோஜநம் உண்டாகிறது. பிராணிகளுக்கு ஞான தர்மங்களை உபதேசிப்பதினால், "கல்பம், பிரளயம், மஹாப்பிரளயம் இவைகளில் ஏற்படும் ஜநந மரணங்களினின்று பிராணிகள் கரையேறும்படி செய்வதுதான் ஈசுவரன் அடையும் பிரயோஜநம். இவ்விதமே பஞ்சசிகாசாரியார் முன்னர் அடியில் வருமாறு சொல்லியிருக்கின்றார்." "ஆதி வித்வான் (கபிலர்)

---

* குறிப்பு:—காம் கிஞ்சிஞ்ஞன, அவர் ஸர்வஞ்ஞன். ஸ்ரீநம்மாழ்வார், ஸ்ரீமாணிக்கவாசகர், முதலாயினோரது பாசுரங்கள் இங்கு கவனிக்கத் தக்கன.

"உயர்வற வுயர்நல முடையவன் யவனவன்
மயர்வற மதிநல மருளினன் யவனவன்
அயர்வறு மமரர்க ளதிபதி யவனவன்
துயரறு சுடரடி தொழுதெழென் மனனே."—நம்மாழ்வார்.

"ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த இன்பமே"—மாணிக்கவாசகர்.

"வால் அறிவன்"—நாயனார்.

சுத்தஸாத்விக சித்தத்தை நிர்மித்து, அதன் மூலமாய், கருணையால் ஜிஞ்ஞாஸுவாகிய ஆசுரி என்பாருக்கு ஸாங்கிய சாஸ்திரத்தை உபதேசித்தார். கபிலர், மஹாவிஷ்ணுவின் அவதாரமாகையால், ஈசுவரன் பிராகிருத சரீரமில்லாதவர், அதனால் சுத்தசித்தத்தை நிர்மித்துக்கொண்டாரெனச் சொல்லியிருக்கிறது."

3. சாதாரணமாய் ஜநங்களுக்கு, அறிவு, ரஜஸ், தமஸ் என்ற குணங்களின் சம்பந்தத்தினால், மநம் ஆவரண விக்ஷேப சக்திகளுக்குட்பட்டிருக்கிறது. ஈசுவரனுக்கோ இவை யில்லை.

4. புத்தர், கபிலர், அர்ஹத்தர்கள் முதலான அநேக தீர்த்தங்கரர்கள் (சாஸ்திரத்தை உண்டுபண்ணியவர்கள், அவதாரபுருஷர்கள், மஹான்கள் அந்தந்த மதங்களில் ஸர்வஞ்ஞர்களாக மதிக்கப்படுகின்றமையால் அவர்களை ஏன் ஸர்வஞ்ஞர்களாகச் சொல்லக்கூடாது? ஸர்வஞ்ஞன் என்ற பதம், அநுமாநத்தினால், ஒருவன் என்றே ஏற்படும்.

அநுமாநத்தினால் ஸாமாந்யமான ஞாநம் உண்டாகுமேயன்றி விசேஷஞாநம் உண்டாகாது. அவ்வீசுவரனுடைய விசேஷகுணங்களைப்பற்றிய ஞாநம் உண்டாகாது. அது ஆகமத்தினால்தான் கூடும். (ஆகமம்=வருதல். இந்திரியங்கட்குப் புறம்பான விஷயங்களைப் புத்திக்குத் தெரிவிக்கும் சாஸ்திரம், ஆகமம். இது வழக்கமாய் வேதத்திற்கே சொல்லப்படுகிறது). ஆனால் புத்தர் முதலியவர்களால் உண்டுபண்ணப்பட்ட சாஸ்திரங்கள் ஆகமங்கள் ஆகமாட்டா. ஆகம ஆபாசமாம். போலியானவைகள் எல்லாப் பிரமாணங்களுக்கும் விரோதமான க்ஷணிகஞாநம், ஆத்மா இல்லையென்பது முதலியவைகளை அம்மத சாஸ்திரங்கள் உபதேசிப்பதினால் அவை புத்திக்கு மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன. சுருதி, ஸ்மிருதி, இதிஹாஸங்கள், புராணங்கள் இவைகள்தான் (அப்யுதய நிச்ஸ்ரேயஸ) அதாவது இஹ, பர, லோக விஷய சுகங்கள், சாசுவதமான பேறு இவைகளை அடைவதற்கு உண்மையான உபாயங்களை உபதேசிக்கின்றன. ஈசுவரனின் பெயர், குணங்கள் முதலியவை, வேத சாஸ்திரங்களால் தான் அறியக்கூடியவை. பெயர் என்றால் ஆறு அங்கங்கள். பத்து குணங்கள் ஏற்படுகின்றன.

இவ்விதம் வாயு புராணம்:— எல்லாவற்றையும் அறியுந்தன்மை, என்றும் திருப்தியாயிருத்தல், அநாதியான ஞாநம், ஸ்வதந்தரம், குறைவில்லா சக்தி, அநந்த சக்தி இவை ஆறும் ஈசுவர அங்கங்கள் என்று அறிஞர்கள் சொல்லுகின்றார்கள். ஞாநம், வைராக்கியம், ஐசுவரியம், தபஸ், ஸத்தியம், க்ஷமை, தைர்யம், ஜகத்தை சிருஷ்டிக்கும் சக்தி, ஆத்ம ஸ்வரூபஞாநம், எல்லாவற்றிற்கும் அதிஷ்டாநமாகவிருத்தல் என்ற 10 குணங்கள் எப்பொழுதும் அழிவில்லாமல் ஈசுவரனிடம் இருக்கின்றன. இத்தன்மையான குணங்களை உடையவரானால் துக்கம் நிறைந்த இந்த லோகத்தை ஈசுவரன் சிருஷ்டித்திருக்கமாட்டார் என்ற ஆக்ஷேபணைக்கு சமாதாநம்:— பரம சிரேயஸ்கரமான கைவல்லியத்தைப் பிராணிகள் அடையும் பொருட்டு சுகதுக்கங்களை ஏற்படுத்தி, அவைகளின் அநுபவங்களினால் பிராணிகளின் மநஸ் சுத்தியாகி, ஞாநம் உண்டாகி, பிரகிருதி புருஷ விவேகம் ஏற்படுகிறது. அதனால் கைவல்லியம் வித்திக்கிறது. இது ஈசுவரனின் பரமகாருண்ணியத்தைக் காட்டுகிறது.

முக்தி இருவிதம்:—(1) சத்தியோமுக்தி (2) கிரமமுக்தி. இந்த ஜந்மத்திலேயே உடனே முக்திபெறுதல் ஒருவிதம். மேல் மேல் படியேறி மேல் மேல் லோகங்களிற் சென்று கடையில் பிரஹ்மலோகம் (7-வது லோகம்) போய் பிரஹ்மாவுடன் தங்கியிருந்து மஹா பிரளயாந்தத்தில் பிரஹ்மாவுடன் சேர்ந்து முக்தி பெறுதல் தான் கிரமமுக்தி எனக் கூறப்படுவது. ஈசுவரனால் உபதேசிக்கப்பட்ட ஞாநதர்மங்களினால் அநேகர் இம்முக்தியை அடைகிறார்கள். மற்றவர்களோ பிரகிருதியில் லயமடைகிறார்கள், மரணத்துக்குச் சமாநமான துக்கத்தை யடைகிறார்கள். அவரவர்கள் விகாசமுறையில் இருக்கின்றபடிகளான நிலைமையுடன் லயம் அடைகின்றார்கள். பின்பு வேறு ஒரு பிரஹ்மாண்டம் சிருஷ்டி ஏற்படுங்காலத்தில், அந்தந்த நிலையில் வெளிக்கிளம்புகின்றார்கள். ஆனால் இவர்கள் பிரகிருதிலயர்கள் அல்லர், பிரகிருதிலயர்கள் உபாஸனைக்கிரமத்தில் முக்தியடைகின்றவர்கள். பிரஹ்மாவின் ஒரு பகலில் 14 கல்பம், 14 மநு, 14 இந்திரன். இவ்வாறு அதிகாரிகள் பதினன்கு பதினன்காக நிகழும். பிரஹ்மாவின் இராத்திரி நிதப்பிரளயம், ஓர் ஓர் கல்பாந்தில்

பூ: புவ: ஸுவ: என்ற மூன்று லோகங்களுக்கு மாத்திரம் லயம். 4 யுகங்களும் 72 தரம் சுற்றிவந்தால் ஒரு கல்பம். இப்போது பிரஹ்மா வுக்கு 51-வது வயது நடப்பு. வைவஸ்வத மங்வந்தரத்தில் 27 தடவை சதுர்யுகங்களும் சுற்றிவந்துவிட்டன. பிரஹ்மாவின் 100-வது வயசு முற்றுப்பெறுகிற காலமே மஹாப்பிரளயகாலமாம். சத்திய லோகத்தில் பூதங்கள் எல்லாம் லயமடைகின்றன. யோகிகளின் குருபரம்பரை ஈசுவரன், ஹிரண்ணிய கர்ப்பராவர்.

26. ஸ பூர்வேஷாமபி குரு:
காலேநாநவச்சேதாத்॥

காலவரம்பைக் கடந்தவராகையால் அவர், பூர்வீக ஞாதாசாரியர்களின் குருவாவர்.*

27. தஸ்ய வாசக: ப்ரணவ:॥

அவருடைய பெயர் பிரணவம்.

குறிப்பு :—பிரணவம் என்பதின் பொருள் 'என்றும் புதிதாயுள்ளது என்பதாம்.' மற்றைய சப்த ராசிகள் மாறும். பிரணவம் ஒன்றே என்றும் மாறுகதது, நித்தியமானது. 'ஓம்' என்ற பதத்திற்குப்பொருள் ஈசுவரன் என்பதே பதம், அர்த்தம் (பொருள்) இவைகளின் ஸம்பந்தம் ஸங்கேதமாக ஏற்பட்டதா, அல்லது தீபம், பிரகாசம் இவைகளின் சம்பந்தம் போன்று என்றும் உடன் நிகழ்வதா? அவருக்கும் (அர்த்தத்திற்கும்) பிரணவத்திற்கும் பதத்திற்கும் உள்ள சம்பந்தம் ஸ்வபாவமாய் என்றும் உள்ளது. மேலும், சங்கேதமென்றுல் மனிதர்களுடையதன்று. ஈசுவரனுல் சிருஷ்டிகாலத்திலேயே, இன்ன பதத்திற்கு இன்ன பொருளென்று சங்கற்பிக்கப்பட்டது. பதத்திற்கும் அர்த்தத்திற்கும் உள்ள சம்பந்தத்தை சங்கேதம் வெளிப்படுத்துகின்றது. பிதா, புத்திரன் என்பவர்களுக்குள் நிகழும் சம்பந்தம் என்றும்உள்ளது. அதை வார்த்தை பிரகாசப்படுத்துகிறது. ஓர் ஓர் கல்பத்தின் முடிவில், பிராணிகள் வாசனைகளுடன்

*மற்ற குருக்கள் காலவரம்புக்குட்பட்டவர்கள். அவர் ஆதி குரு சுவேதாஸ்வதரோபநிஷத்தின் பொ்வ்ஹாணம் என்ற மந்திரம் இங்கு கவனிக்கத்தக்கது.

லயமடைந்து, பின்பு வேறு கல்ப ஆரம்பத்தில் எல்லா வாசனைகளுடன் வெளிவருமாறுபோல, சப்த ராசிகள் அவைகளின் சக்தியுடன் (இன்ன அர்த்தத்திற்கு இன்ன சப்தம் என்ற சம்பந்தம்) பிரளய காலத்தில் பிரகிருதியில் லயம் அடைகின்றன. பின்பு சிருஷ்டி காலத்தில் வெளிப்படுகின்றன. சப்தத்திற்கும் அர்த்தத்திற்குமுள்ள சம்பந்தம் பரிணாம நித்தியம், கூடஸ்த நித்தியமன்று. புருஷன் ஒருவனே கூடஸ்த நித்தியன் சப்தராசிகள் எப்போதும் மாறிக்கொண்டேயிருக்கின்றன. பூமியினின்று உண்டாகின்ற ஜீவ ராசிகள் (உத்பிஜம்) மற்றகாலங்களில் பூமியோடு பூமியாக லயமாகி, வருஷகாலத்தில் வெளியாகின்றன. அவைபோல சிருஷ்டிகாலத்தில், முன் லயம் அடைந்த வஸ்துக்கள், ஜீவராசிகள், சப்தராசிகள் பின் வெளிப்படுகின்றன.*

28. 𑌤𑌜𑍍𑌜𑌪𑌸𑍍𑌤𑌦𑌰𑍍𑌥𑌭𑌾𑌵𑌨𑌮𑍍॥

அப்பிரணவத்தை ஜபித்தலும் அதன் பொருளாகிய ஈசுவரனைத் தியானித்தலும் வேண்டும்.

குறிப்பு:—அப்படிச் செய்வதினால் யோகியின் மனம் ஆவரண விக்ஷேபசக்தி குறைந்தவர ஐகாக்ரியம் பெறுகிறது அந்த ஐகாக்ரியததினால் ஸமாதியும் அதன் பலனான ஈசுவரப் பிரகாசமும் உண்டாகும்.

29. 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌚𑍇𑌤𑌨𑌾𑌧𑌿
𑌗𑌮𑍋𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌯𑌾𑌭𑌾𑌵𑌶𑍍𑌚॥

அதனால் (பிரணவ தியானத்தினால்) புருஷனுடைய உண்மையான ஸ்வரூபஞானமும் விக்நங்கள் நீங்குதலும் உண்டாகும்.

குறிப்பு:—ஈசுவரப் பிரஸாதத்தினால் வியாதி முதலானவைகள் இவனை அணுகா. இவனைவிட்டு அகன்றுவிடும். தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தைப் பார்ப்பான். ஈசுவரன் சுத்தனையும், பிரஸந்நராயும் (கிலேசங்கள் இல்லாதவராயும்), கேவலனையும (புண்ணிய பாப சம்பந்தமில்லாதவனையும்), ஜந்ம, ஆயுஸ், போகங்களில்

* கடோபநிஷத்தின் பிரணவத்தைப்பற்றிய மந்திரங்கள் இங்கு கவனிக்கத்தக்கன.

ஸானுயும் எப்படி இருக்கிறானோ, அப்படியே புத்திக்குப் பிரகாசத்தை உண்டுபண்ணுகிற புருஷனும் இருக்கிறான். விருத்த தர்மங்கள் உள்ள இரண்டு வஸ்துக்களில் ஒன்றை அறிந்தால் மற்றதை அறிய முடியாது. ஒரே மாதிரியான தர்மங்களையுடையவைகளாக இருப்பின் ஒன்றை அறிந்தால் மற்றதை அறிதல்கூடும். அதனால், ஈசுவரனுக்கும் புருஷனுக்கும் (யோகியின் புத்திக்கு சாக்ஷியான புருஷனுக்கும்) மேற்கண்டபடி குணஸாம்யமிருப்பதால் ஈசுவரஸ்வரூபத்தை அறிவதால், புருஷ ஸ்வரூபத்தை அறிவதாகும். பிரத்தியக்சேதநன் என்றால் அவித்தியாவான், அதாவது உள்ளபடி அறியாமல் விபரீதமாக அறிகிறவன் என்பதாம். இதன் தேர்ந்த கருத்து, இந்தப் பிரணவ உபாஸனையால், சித்தம் அந்தர்முகப்படுதலும், தடைகள் நீங்குதலும் உண்டாகும்.

30. வ்யாதிஸ்த்யாநஸம்ஶயப்ரமாதாலஸ்யாவிரதிப்ராந்திதர்ஶநாலப்தபூமிகத்வாநவஸ்திதத்வாநி சித்தவிக்ஷேபாஸ்தேऽந்தராயா:॥

தடைகளாவன:—(1) வியாதி, (2) மநநோய்மை, (3) ஸம்சயம், (4) பிரமாதம், (5) ஆலஸ்யம், (6) அவிரதி (துறத்தல்இன்மை), (7) பிராந்தி தர்சநம், (8) யோகபூமியை அடையாமை, (9) சமாதிநிலையினின்று நழுவுதல். மநத்திற்கு விக்ஷேபத்தை யுண்டுபண்ணும் தடைகளான, இவ்வொன்பது, இவைகளால்தான் மநோவிர்த்திகள் உண்டாகின்றன.

குறிப்பு:—வியாதி வாத, பித்த, சிலேஷ்மதாதுக்களும், ஆகாரங்களின் ரசமும், மநஸ் முதலிய இந்திரியங்களும் நேர்மையில்லாமலிருத்தலால் உண்டாகும்.

மநநோய்மை=ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தகுதியில்லாமை, அதாவது, பூர்வ அநுபவமின்மையாலும், பூர்வ ஸம்ஸ்காரமின்மையாலும் ஒரு காரியத்தைச் செய்வதற்குத் தகைமையின்றிருத்தல்.

ஸம்சயம்=இதுவோ அதுவோவென்று சந்தேகங் கொள்ளுதல்.

பிரமாதம்=ஸமாதி ஸாதநங்களில் பிரவிர்த்தியில்லாமை.

ஆலஸ்யம்=தமஸினால், சரீரம், மநம், இரண்டும் பிரவிர்த்திக்காமல் இருத்தல்.

அவிரதி= விஷய சுகங்களின் மேல் ஆசை, விஷயங்களில் ஒழிவில்லாமை.

பிராந்திதர்சநம்=பிரமையினால் ஒன்றை வேறொன்றாகவறிதல்.

யோகபூமியையடையாமை=யோகாப்பியாஸம் செய்துகொண்டுவருகையில் உயர்ந்த ஸமாதி நிலையைப் பெறாமல் கீழான பூமிகளின்கண் உண்டாம் சித்திகளின் மேல் ஆசைகொண்டு, அவைகளில் திருப்தியாகவிருத்தல்.

ஸமாதிநிலையினின்று நழுவுதல் = ஸமாதி நிலைபெற்ற பிறகு அதைக் காப்பாற்றிக்கொள்வதில் முயற்சியில்லாமை.

31. 𑌦𑍁𑌃𑌖𑌦𑍌𑌰𑍍𑌮𑌨𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌮𑍇𑌜𑌯𑌤𑍍𑌵𑌶𑍍𑌵𑌾𑌸𑌪𑍍𑌰𑌶𑍍𑌵𑌾𑌸𑌾
𑌵𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌸𑌹𑌭𑍁𑌵𑌃॥

துக்கம், தௌர்மநஸ்யம், சரீர நடுக்கம், உச்வாஸம், நிச்வாஸம் இவை விக்ஷேபத்துடன் நிகழ்பவை.

துக்கம் என்பது ஆத்தியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் இவைகளால் உண்டாகும். துக்கம் பிரதிகூலமான அநுபவம்.

தௌர்மநஸ்யம்=செய்த முயற்சி பலிக்காமல் அதனால் உண்டாம் மநச்சஞ்சலமாம்.

சரீரநடுக்கம்=அங்கங்களின் அசைவு. இது யோகாப்பியாஸத்திற்கு விரோதி.

உச்வாஸ நிச்வாஸம்=நம்முடைய ஸ்வாதீநமின்றி காற்று உள்ளே போதலும் வெளியே வருதலும்.

ரேசகம், பூரகம் என்றவை இத்தனை மாத்திரை என்ற அளவுக்குட்பட்டு சுவாஸம் நடைபெறும்படி செய்தல்.

## 32. தத்ப்ரதிஷேதார்த்தமேகதத்வாப்யாஸ:॥

இவைகளை நிவிர்த்தித்து ஒன்றான தத்துவத்தை மாத்திரம் அப்பியஸித்தல் வேண்டும்.

குறிப்பு:—(1) நிவிர்த்தித்து என்றால், முன் சொல்லியிருக்கிறபடி, வைராக்கியத்தால் நிவிர்த்தி ஏற்படுத்தலாம். ஒன்றான தத்துவம் என்பதற்கு ஈசுவரன் என்பது அர்த்தமாம். விஞ்ஞாந பிக்ஷுவின் அபிப்பிராயப்படி யாதேனும் ஒரு தத்துவத்தைப் பற்றிச் சிந்தனை கொள்ளுதல் இதில் பயன்படும் என்கிறார். ஆனால் முன்னுள்ள சூத்திரங்களை நோக்க, ஈசுவரன் என்று கொள்ளுதலே உசிதமாகும். மேலும் மநம் ஒருமுகப்படவேண்டுமென்றால் உயர்வற உயர்நலமமைந்த அந்த பரம புருஷனைத் தியானித்தலே வேண்டும்.

(2) க்ஷணிக விஞ்ஞாந வாதிகளின் மத கண்டநம்:—
(a) அவர்கள் மதப்படி, மநோவிர்த்திகளைத் தவிர, மநம் என்று பிரத்தியேகமாக வேறொன்றுமில்லை. ஒவ்வொரு விர்த்தியும் க்ஷணிகம் அதனால் ஒவ்வொரு விர்த்தியும் நிகழ்தல் ஏகாக்கிரமாகும். அதனால் விக்ஷிப்தமே இல்லை என முடியும். அதனால் யோகாப்பியாஸ முயற்சி வேண்டுவதில்லை யெனவேற்படும். அது சரியன்று, மநம் வேறு, க்ஷணிகமன்று, நிலையுள்ளது. ஒரு பதார்த்தத்தைப் பல பதார்த்தங்களினின்று வேறுபடுத்தி அந்த வேறுபடுத்தப்பட்ட பதார்த்தத்தில் மநத்தை நிற்கும்படி செய்தல் கூடும். அதனால் ஏகாக்கிரம் ஏற்படும், அதனால் விக்ஷேபநிவிர்த்திக்காகச் செய்யவேண்டிய முயற்சி பிரயோஜநமுள்ளதுதான்.

(b) க்ஷணிகவிஞ்ஞாந வாதிகளின் வேறு அபிப்பிராயம்:—
விர்த்திகள் பல உள. அவைகளின் பிரவாகத்தில், ஒரே விர்த்தியாகவே மநம் மாறி நிற்றல் கூடுமென்றோ? அது சரியன்று. அவர்களின் ஸித்தாந்தப்படி, விர்த்தியும் மநமும் க்ஷணிகமென்பதனால், இரண்டிலும் பிரவாகம் ஏற்படுதல் கூடாது. அதனால் ஏகாக்கிரம் உண்டாவதற்கு அவகாசமில்லை. நான் என்ற ஆலய விஞ்ஞாநம் (சாமாந்நிய அகங்காரம் என்பார் வேதாந்திகள்) என்ற ஸ்திரமான நிலைமை

இருக்கின்றது என்றாலோ, அந்த "நான்" என்பதற்கு விக்ஷிப்தமின்மையாலும், விக்ஷிப்தம் மநத்தையே பொறுத்ததாகவிருக்கின்றமையாலும் யோகமுயற்சி பிரயோஜநம் இன்றே என்பது ஏற்படும்.

(c) க்ஷணிக விஞ்ஞாநவாதிகள், அதாவது வைநாசிகர்களின் சித்தாந்தத்தில், தர்மம் ஒன்றே உளது. அது ஆசிரயிக்கும் தர்மி என்பது இலது என்பதாம். அதனால் அந்தக்கரணம் இல்லை என்பார். விர்த்திகளின் பிரவாகம் இருக்கின்றது என்றால், அது சரியன்று. பிரவாகம் என்றால் ஸஜாதீயப் பிரத்தியயம் (ஒரே மாதிரியான விர்த்திகள்) தொடர்ந்து நிகழவேண்டும். அப்படியில்லாமல் விஜாதீயப் பிரத்தியயம் (விருத்தமான பிரத்தியயங்கள்) நடைபெற்றால் பிரவாகம் எங்ஙனம் உண்டாகும்? விர்த்திகள் தனித்தனியாக உண்டாகி அழிகின்றமையால், ஒரு விர்த்தியின் பலனை மற்றொரு விர்த்தி அநுபவிப்பதும் அறிதலும் எங்ஙனம்?

(d) மநம் ஒவ்வொரு க்ஷணத்திற்கும் வேறு வேறு என்றால் நான் என்ற அநுபவம் நிகழமாட்டாது. விர்த்திபேதங்கள் இருப்பினும், நான் என்ற தொடர்புள்ளது. விர்த்திகள் விஷயங்கள் இவ்வேறாயினும், நான் என்ற ஞாநம் அபிந்நமாக அநுபவத்திலிருக்கின்றது. சித்தம் ஒவ்வொரு விஷயத்திற்கும் வேறு வேறாயின், இந்த நான் என்ற அநுபவம் எப்படி உண்டாகும்? அது பிரமை (மருள்) என்று சொல்வது சரியன்று. அபேதமான 'அஹம்' என்ற ஞாநம் பிரத்தியக்ஷமான அநுபவம். இதற்கு விரோதமான வைநாசிகர்களின் மதம் சரியன்று.

33. மைத்ரீகருணாமுதிதோபேக்ஷாணாம் ஸுகது:க்க
புண்யாபுண்யவிஷயாணாம் பாவநாதச்சித்த
ப்ரஸாதநம்॥

சுகமாயிருப்பவர்கள், துக்கிக்கிறவர்கள், புண்யம் செய்பவர்கள், பாபிகள்; இவர்களிடம் முறையே ஸ்நேஹம், கருணை, சந்தோஷம், உபேக்ஷை இப்பாவனைகளை அப்பியாசம் செய்வதால் மநம் பிரஸாதம் பெறுகிறது.

குறிப்பு:—ராகத் துவேஷாதிகள், அகங்காரம், அசூயை, ஈரிஷை, கோபம் முதலிய துர்க்குணங்கள் நீங்கி மநம் நிர்மலமாகவேண்டியதற்கு உபாயம் சொல்லுகின்றார். சுகமாயிருப்பவரைப் பார்த்தால் ஈரிஷை உண்டாகும். அதனால் மநத்திற்குக் கல்மஷம் உண்டாகும். அப்படி உண்டாகாமல் இருத்தற் பொருட்டு அவர்பால் ஸ்நேஹபாவத்தையும், துக்கத்திற்குள்ளானவர்களிடம் தயை, காருண்ணியத்தையும்* புண்ணியம் செய்பவர்களிடம் சந்தோஷத்தையும், பாபம் செய்பவரிடத்தில், அவரையும் அவர் செய்யும் பாபத்தொழிலையும்பற்றிக் கவநியாதிருத்தலையும், நம் மநத்தில் உண்டு பண்ணிக்கொளல் வேண்டும்†. அப்படிச் செய்வதினால் மநத்தின் சாஞ்சல்லியம் நீங்கும். பரிசுத்தமாகவும், ரஜஸ், தமோகுணங்கள் நீங்கப்பெற்று, மநம் சுத்த ஸாத்விக குணமுடையதாகும் அதனால் சித்தம் ஐகாக்ரியம் அடையும், மநம் ஒருநிலைப்பெறும்.

இந்த சூத்திரம் தியாநகாலங்களில் தவிர, மற்ற காலங்களில், அதாவது உலகத்தில் நடைபெறுங் காலத்தில், யோகி ஒழுகவேண்டிய முறையை உபதேசிக்கின்றது.

34. ப்ரச்சர்த்தநவிதாரணாப்யாம் வா ப்ராணஸ்ய॥

பிராணனைப் பிரயத்நத்தால் (யோக முறைப்படி) வெளியே விடுதலும், உள்ளே நிறுத்தலும், என்ற பயிற்சியாலாவது (மநத்தை ஒருநிலைப் படுத்தல் வேண்டும்.)

குறிப்பு:—முந்திய சூத்திரத்திற் சொல்லியிருக்கிறபடி "மைத்ரீகருணை" முதலிய தன்மைகள் ஏற்படாவிடில், மநத்தை ஒரு நிலையில் இருக்கும்படி செய்தலுக்குச் சாதநங்களைச் சொல்லுகிறார், இந்த சூத்திரத்தில் ஒரு உபாயம் சொல்லுகிறார். அதுதான் பிராணாயாமம். வா என்பது இனிவரும் மற்ற சாதநங்களை உத்தேசித்தது.

பிராணாயாமம் செய்தலினால் மநத்தின்கண் உண்டாம் விர்த்திகள் ஒடுங்கும்.

---

* அதனால் பிறர்க்கு அபகாரம் செய்தலை நிவிர்த்தித்து, உபகாரம் செய்தலே நலம் என்ற எண்ணம் உண்டாகும்.

† அப்படிச் செய்வதினால், உண்டாகும் கோபம் விலகும்.

மன்மன மெங்குண்டு வாயுவு மங்குண்டு
மன்மன மெங்கில்லை வாயுவு மங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே—திருமந்திரம்.

வெளியே விடுதல் (ரேசகம் செய்தல்) உள்ளே நிறுத்தல் (கும்பகம் செய்தல்) என்ற முறை இந்த சூத்திரத்தில் சொல்லியிருக்கின்றது. அதாவது பூரகம் செய்யாமல் கும்பகம் செய்தலாம். இம்முறையில் வெளியேறின வாயுவை வெளியிலேயே இருக்கும்படி செய்தல் கும்பகமாம். இவ்விதம் செய்வதால், சரீரம் லகுத்துவத்தை அடைகிறது. அதன்மேல் மநம் ஸ்திரப்படுகிறது.

பூரகம், கும்பகம், பின்பு ரேசகம் என்ற முறை மற்றொன்று. அது இந்த விடத்திற் சொல்லவில்லை. கீதை 6-ம் அத்தியாயம் பார்க்க.

35. விஷயவதீ வா ப்ரவ்ருத்திருத்பந்நா மநஸ: ஸ்திதிநிபந்தநீ॥

அல்லது விஷயங்களை ஆசிரயித்த பிரவிர்த்தியானது மநத்தை அசையாமல் கட்டுப்படுத்தும்.

குறிப்பு:—விசேஷமான இந்திரிய சக்திகளை உண்டுபண்ணக்கூடிய மூக்கு நுனிமுதலிய ஸ்தாநங்களில் சித்த ஐகாக்ரிய முறைகளை நாடுதல், யோகமுறையில் நன்னம்பிக்கையை யுண்டுபண்ணும். அப்படிச் செய்வதால், தூரதிருஷ்டி, தூரக்கேள்வி, வாசனைப் பொருளின்றி நல்ல வாசனைகளின் அநுபவம் இவைபோன்ற சித்திகள் உண்டாகிறதினால், யோகாப்பியாசத்தில் உண்மையான நம்பிக்கை ஏற்படும். அதனால், தீவிரமான யோகமுயற்சி உண்டாகும்.

நாவிகாக்கிரத்தில் மநத்தை நிறுத்தினால் திவ்விய (சூக்ஷ்மமான) கந்தங்களின் அநுபவமும், நாக்கின் நுனியில் மநத்தைநிறுத்தித் தியாநம் பண்ணினால் தாரணை, தியாநம், சமாதிமுறைகளை அப்பியவித்தால் (இதுவே ஸம்யமம் என்றும் பெயர்பெறும்), திவ்விய ரசங்களின் அநுபவமும், தாலுவில் தியாநம்செய்தால் திவ்விய ரூபங்களின் அநுபவமும், நாவின் மத்தியில் தியாநம் செய்தால் திவ்விய ஸ்பரிசங்களின் அநுபவமும், நாவின் அடிமூலத்தில் தியாநம் செய்

தால் திவ்விய சப்தங்களின் அநுபவமும் உண்டாகும். இவ்விதமான அநுபவம் ஏற்பட்டால் ஸம்சயம் நீங்கி ஸ்தைர்யம் உண்டாகி சமாதிப்பிரஞ்ஞைக்கு துவாரம் (வழி) உண்டாகும். முன் சொன்ன தியாநமானது சந்திரன், சூரியன், கிரகங்கள், ரத்நங்கள், தீபம், மணி, முதலியவைகள் மேலும் நிகழலாம். அதனால் மேற்கண்டபடி சமாதி பிரஞ்ஞைக்கு வழி ஏற்படும்.

சாஸ்திரததினாலும், அநுமாநத்தினாலும், குருஉபதேசத்தாலும் தெரிந்த விஷயம் அவன் அவன் ஸ்வந்த அநுபவமில்லாவிடில் பரோக்ஷமாகவேயிருக்கும். அதனால் மோக்ஷம் முதலிய சூக்ஷம விஷயங்களில், உண்மையான ஸ்திரமான நம்பிக்கை உண்டாகிறதில்லை. யாதேனும் ஒரு சூக்ஷ்மமான விஷயத்தில் பிரத்தியக்ஷமான அநுபவம் ஏற்படுமாகில் சாஸ்திரம், அநுமாநம், குருஉபதேசம் இவைகளால் தெரிந்துகொண்ட ஞாநம் ஸ்திரப்படுகிறது. அதனால் மோக்ஷம் வரையுள்ள மற்ற சூக்ஷ்மமான விஷயங்கள் உண்மையென நம்பிக்கை உண்டாகிறது. இதனால் தான் மநத்திற்கு ஸம்ஸ்கார அப்பியாஸ முறைகள் சொல்லப்படுகின்றன. விர்த்திகள் நாநாவிதமாக மாறிக்கொண்டிருக்கின்றமையால் விர்த்திகள் ஒடுங்கும் பொருட்டு அநேக அப்பியாஸங்கள் இப்போது சொல்லப்படுகின்றன. அந்த அப்பியாஸம் பிரயோஜநப்படவேண்டுமானால், அதாவது மநத்தின் ஸ்திரமான நிலை உண்டாகவேண்டுமானால், அப்பியஸிக்கப்படும் முறையைத்தவிர மற்ற விஷயங்களில் வைராக்கியம் வேண்டும். அந்த ஸ்வைராக்கியத்தை வசீகாரம் எனச் சொல்லுகிறது.

36. விஶோகா வா ஜ்யோதிஷ்மதீ

அல்லது, துக்கமில்லாமல், ஜோதிஸை (மநத்தின் ஸ்த்வ பாவத்தை) ஆசிரயித்த பிரவிர்த்தி (மநத்தை அசையாமல் கட்டுப்படுத்தும்.)

குறிப்பு:—ஹிருதய புண்டரீகத்தில் மநத்தை நிறுத்தி, தாரணை தியாநம், ஸமாதி கொள்ளுகிறவனுக்கு புத்தி நிர்மலமாகவும் ஆகாசம் போல் எல்லாவற்றிலும் வியாபிக்கும் இயல்பினதாகவும் ஆகிறது.

ஹிருதய புண்டரீகத்தில் ஒரு சக்ரம் உள்ளது. அது 8 தள முள்ளது. அது அதோமுகமானதாக இருக்கிறது. பிராணயாமத் தினல் ஊர்த்துவமுகமாகத் திருப்பி, அதில் மநத்தை நிறுத்தவே ண்டும். அதன் மத்தியில் சூரியமண்டலம் ஜாக்கிரதாவஸ்தையின் இருப்பிடமும் அகாரம் என்ற அக்ஷரமும், அதன் மேல் சந்திரமண் டலம் ஸ்வப்நாவஸ்தையின் இருப்பிடமும் உகாரம் என்ற அக்ஷர மும், அதற்கும் மேல் அக்நிமண்டலம் சுஷுப்தி அவஸ்தையின் இருப்பிடம் மகாரம் என்ற அக்ஷரமும், அதற்கும் மேல், பரவியோம ஸ்வரூபம் துரீய அவஸ்தை பிரஹ்ம நாதம் என்று சொல்லப்படும் அர்த்த மாத்திரையும் இருக்கின்றன. அந்தத் தாமரையின் கர்ணிகையில் ஊர்த்துவமுகமான பிரஹ்ம நாடி இருக்கின்றது. அது சூரியாதி மண்டலங்களின் மத்தியில் பிரவேசிக்கிறது. அதற்கு மேல் போய்க்கொண்டிருக்கிறது ஸுஷும்நா நாடி. அது வெளியிலுள்ள சூரியமண்டலங்களைத் தாண்டிப்போகின்றது. அது தான் மநத்தின் ஸரியான ஸ்தாநம். அதில் தாரணை, தியாநம் செய்தால், சித்தஸம்வித் உண்டாகிறது. வஸ்துக்களின் உண்மையான நிலை(Thought Forms)யின் சாக்ஷாத் காரம் பெறுகிறான். அந்த ஸ்தாநத்தில் மநம் நிற்பதினால் சூரி யன், சந்திரன், கிரகங்கள், ரத்நங்கள் இவைகளின் தேஜோரூபங்க ளாக நாநாவிதமாகத் தோன்றுகிறது. அதாவது அந்த மநம் அந்த ரூபங்களாக ஆகிறது. ஸுஷும்நா நாடியை ஆசிரயித்திருக்கின்ற மையால், இந்த மநஸ் ரஜஸ், தமஸ் இரண்டும் குறைந்தும் சத்வம் மேலிட்டும் இருக்கின்றது. அதனால் அந்த நிலை ஜோதிஷ்மதீ (ஜோதிஸை உடையது) என்று சூத்திரத்திற் சொல்லப்பட்டிருக் கிறது.

முன்னே சொல்லியபடி விஷயங்களில் சம்பந்தம் பெற்றது போல, அஸ்மிதையில் (நான் இருக்கிறேன் என்ற பாவம்) ஏகாக் கிரதை பெற்ற மநஸ் ஆனது அலையற்ற சமுத்திரம் போலவும், சாந்தமாயும், (ரஜஸ், தமஸ் அற்றதாயும்) எங்கும் வியாபகமுள்ள தாயும், நான் என்ற சுத்தப் பிரஞ்ஞைமாத்திரம் உள்ளதாயிருக் கின்றது. இவ்விதமாகவே சாங்கிய சூத்திர வியாக்கியாதாவான பஞ்சசிகாசாரியாரும் சொல்லுகின்றார்.

விஷயங்களை ஆசிரயித்து நிகழும் பிரவிர்த்தியும், அஸ்மி தையை ஆசிரயித்த மநப் பிரவிர்த்தியும் ஜோதிஷ்மதீ எனப் பெயர் பெறும். இதனால் யோகியின் மநம் ஸ்திரமான நிலையை யடைகின்றது.

37. வீதராகவிஷயம் வா சித்தம்॥

அல்லது ஆசைவிட்ட மஹா புருஷர்களை மநம் விஷயீகரித்தலினால் (அது ஸ்தைர்யம் பெறும்.)

குறிப்பு:—ஆசைவிட்டவர்களான வியாஸர் முதலிய மஹர்ஷிகளின் குணங்களைத் தியாநித்தல் வேண்டும். அவர்களின் மநோ நிலையைத் தியாநித்தலால் அந்நிலையை, அப்பியாஸம் செய்கிற யோகி பெறுகிறான்.

38. ஸ்வப்நநித்ராஜ்ஞாநாலம்பநம் வா॥

அல்லது ஸ்வப்நத்திலும் நித்திரையிலும் ஏற்படும் ஞாநத்தை ஆசிரயித்துத் தியாநிப்பதால் மநம் நிலை பெறும்.

குறிப்பு:—(1) வேறு ஒரு அர்த்தம் "அல்லது ஸ்வப்நத்திலும் நித்திரையிலும் ஞாநம் நழுவாது வைத்துக்கொளல்." என்பதாம். ஜாக்கிரதையினின்று ஸ்வப்நத்திற்குப் போகும்போதும், ஸ்வப்நத்தினின்று சுஷுப்திக்குப் போகும்போதும் நான் என்ற பிரஞ்ஞையின் தொடர்பு அற்றுப்போகிறது. அத்தொடர்பு அறாமல், பிரஞ்ஞை நிலைத்தல் வேண்டும். அற்றுப்போகும் நிலையை பாழ் என்று சொல்லுகிறது. அப் பாழைத் தாண்டுதலுக்கு முயல வேண்டும். இது தான் இந்த சூத்திரத்தின் தாத்பரியம். நினைவிற்கும் கனவிற்கும் மத்தியில் ஒரு பாழ், கனவிற்கும் ஸுஷுப்திக்கும் மத்தியில் ஒரு பாழ், சுஷுப்திக்கும் துரியத்துக்கும் மத்தியில் ஒரு பாழ், ஆக முப்பாழ்கள், அதாவது லய ஸ்தாநங்கள் உண்டு.

(2) இந்திரியங்களுக்கு விஷயங்கள் இல்லாமலும், மநஸ் ஆனது வாஸநாரூபமான விஷயங்களை அநுபவிக்கும் ஸமயம் ஸ்வப்

நமாம். நித்திரையின் லக்ஷணம் முன் 10-ம் சூத்திரத்திற் கண்டு கொள்க.

(3) ஸ்வப்நத்தில் யாதேனும் ஒரு தேவதை அல்லது மஹா புருஷர் அல்லது உயர்ந்த பாவம் தோன்றும் பக்ஷத்தில் நினைவில் அந்த தேவதை, அந்த புருஷன், அந்த உயர்ந்த பாவம் இவைகளின்மேல் மநத்தை நிறுத்தினால், மநம் ஒருமுகப்படும். யோகி ஸ்தைர்யம் பெறுவான்.

(4) ஸுஷுப்தியின் ஞாநம் :—ஸாத்விக ஸுஷுப்தியின் ஞாநம், "சுகமாய்த் தூங்கினேன்" என்ற மட்டில்தான் ஸ்மிருதி நினைவில் உண்டாகும். அந்நிலையில் (சுகம் அநுபவித்த நித்திரை சமயத்தில்) மநம் தன் நிலையிலிருக்கும். அதுவே ஏகாக்ரமான நிலை. பிரஹ்மவித்துக்கள் அந்த ஸுஷுப்தி சுகத்தையே பிரஹ்ம ஸ்வரூபம் என்கின்றார்கள், சாந்தோக்கிய உபநிஷத்தில் ஸுஷுப்தியின் விசாரணையைப்பற்றிய விஷயம் இங்கு கவநிக்கத்தக்கது.

39. 𑌯𑌥𑌾𑌭𑌿𑌮𑌤𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑍍𑌵𑌾॥

அல்லது எது உனக்கு நலமெனப்படுகிறதோ, அதின் மேல் தியாநித்தலினால்.

குறிப்பு :—எது பிரியமாகவிருக்கிறதோ, அதன்மேல் மநம் நிற்பதாகும். அதனால் ஐகாக்ரியம் சித்திக்கும். தேவதையைத் தனக்குப் பிரியமான ரூபமாகத் தியாநித்தலினால், மநம் ஸ்திரத்தைப் பெறும்.

40. 𑌪𑌰𑌮𑌾𑌣𑍁 𑌪𑌰𑌮𑌮𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑍋𑌽𑌸𑍍𑌯 𑌵𑌶𑍀𑌕𑌾𑌰𑌃॥

(இவ்விதமாய்த் தியாநிக்கின்ற யோகிக்கு) பரம அணு முதல் பரம மஹத் வரையில் (உள்ள எல்லாம்) ஸ்வாதீநப்படும்.

குறிப்பு :—மேற்கண்ட உபாயங்களினால், யோகியானவன் ஸ்தூலவஸ்து முதல் வர வர மஹா ஸூக்ஷ்மவஸ்து வரை தியாநம் செய்யும்படியான திறமையும் ஸூக்ஷ்ம வஸ்து முதல் மஹா ஸ்தூல

வஸ்து வரை தியானம் செய்யும்படியான திறமையும் பெறுதல் கூடும். இதில் எவ்விதத் தடையும் கிடையாது. இந்நிலையைப் பெற்ற யோகியானவன், ஐகாக்ரியத்தின் பூர்ணத்திறமையைப் பெறுகிறுன். இனி அவ்விஷயத்தில் பழக்கம் வேண்டுவதில்லை.

41. க்ஷீணவ்ருத்தேரபிஜாதஸ்யேவ மணேர்க்ரஹீத்ரு
க்ரஹணக்ராஹ்யேஷு தத்ஸ்ததஞ்ஜனதா ஸமாபத்தி:॥

இவ்வித அப்பியாசத்தால், மநோவிர்த்திகள் க்ஷீணமாகியிருக்கின்ற யோகியின் மநஸ் அஸ்மிதையையும் இந்திரியங்கள், விஷயங்கள் இவைகளுடன் ஏகீ பாவத்தையும் அடையும். நிர்மலமான ஸ்படிக மணியைப் போன்றதாகும்.

குறிப்பு:—ஸ்படிக மணியின் ஸமீபத்தில் செம்பருத்தியின் புஷ்பத்தை வைத்தால் அதன் நிறம் அம் மணியில் தோன்றிடும். அது போல யோகியின் மநம் நிகழும். விர்த்திகள், சாத்விக, ராஜஸ, தாமஸம் என மூன்று விதங்கள். ராஜஸ, தாமஸ விர்த்திகள் மாத்திரம் க்ஷயத்தை அடைகின்றன. சாத்விக விர்த்தி இருக்கின்றது. சாத்விக விர்த்தி நிகழ்தலேத்தான் மநம் அந்தர்முகப்படுகிறது என்று சொல்லுகிறது. மற்ற இரண்டு விர்த்திகள் (ராஜஸ, தாமஸம்) பகிர்முகமானவை. முதன்மையில் இவ்விரண்டு வித விர்த்திகள் அடங்கி, மநம் அந்தர்முகப்படும், சாத்விக விர்த்தி மாத்திரம் நிகழும். பின்பு, இவ்விர்த்தியும் ஒடுங்கும். ராஜஸ தாமஸ விர்த்திகள் நிகழும் காலத்தில் மநம் மலிநமாக விருக்கும். இவை நீங்கி ஸாத்விக விர்த்தி அதிகப்படவே, மநம் ஸ்படிகம்போல் நிர்மலமாக இருக்கும். அப்போது எந்த வஸ்துவுடன் மநம் ஸம்பந்தப்படுகிறதோ, அந்த வஸ்துவின் தன்மையாக ஆகிவிடுகிறது.* அது ஓர் நிலைமை. மநஸ் ஆனது விஷயங்களுடன் சம்பந்திக்காமல், இந்திரியங்களுடன் மாத்திரம் சம்பந்தித்து, இந்திரியங்களை விஷயமாகக்கொள்ளும் நிலைமை இரண்டாவது. † மநம் பிரமாதாவுடன் (ஆத்மாவுடன்) சம்பந்தித்தல் மூன்றும் நிலைமை. இதற்கு கிரஹீத்ருஸமாபத்தி என்று பெயர்.

---

* இதற்கு கிராஹ்யஸமாபத்தி என்று பெயர்.

† இதற்கு கிரஹணஸமாபத்தி என்று பெயர். கிரஹணம் என்றால் இந்திரியங்களுக்குப் பெயர்.

கிரஹீதிரு என்றால் கிரஹிக்கிறவன், அதாவது ஆத்மா என்றர்த்தம் ஸமாபத்தி=தந்மயமான பரிணமம். தன்னிடத்தில் உள்ள ஆத்மாவினிடம் தந்மயப்படுதலைத் தவிர, முக்தர்களான சுகர், பிரஹ்லாதர் முதலானவர்களிடம் மநத்தை ஒரேபிடியாய் நிறுத்தலும் இந்த ஸமாபத்தியிலடங்கும்.

42. தத்ர ஶப்³தா³ர்த²ஜ்ஞாந விகல்பை:
ஸங்கீர்ணா ஸவிதர்கா ஸமாபத்தி:॥

மேற்கண்ட ஸமாபத்திகளுக்குள், சப்தம், அர்த்தம், ஞாநம் இவைகளுடன் கலந்து நிகழும் ஸமாபத்தியானது ஸவிதர்க்க ஸ்மாபத்தி என்று பெயர் பெறும்.

குறிப்பு:—41-ம் சூத்திரத்தில் ஸமாபத்தியின் பொதுவான லக்ஷணம் சொன்னார். இந்த சூத்திரம் முதல் 44-ம் சூத்திரம் வரையில், ஸமாபத்தியின் விசேஷ லக்ஷணங்கள் சொல்லப்படுகின்றன. உதாரணமாக இந்த ஸமாபத்தியில் "பசு" என்ற பதம், அதன் பொருள், அதன் ஞாநம், இவை தியாநத்தில் கலந்து நிற்றலாகும். இது திரிபுடி நிகழும் நிலை. அதாவது மநோவிர்த்தியானது மேற்கண்ட மூன்றிலும் சம்பந்தப்பட்டிருக்கும். பதத்தையும் ஞாநத்தையும் விட்டு பொருள்மாத்திரத்தில் மநம் தனித்து நின்றால், அத்துடன் ஒன்றுபட்டால், அது நிர்விதர்க்க ஸமாபத்தி என்று சொல்லப்படும். அதாவது இதில் சப்தத்தினுடைய ஸங்கேத ஞாநமும், அநுமாநத்திற்கு ஸாதநமான ஸ்மரணமும் விலகும்போது, மநம் அர்த்தத்தில் மாத்திரம் நிற்கும். இந்த நிர்விதர்க்க ஸமாபத்தியில் உண்டாகின்ற வஸ்து ஞாநமானது யோகிக்கு உண்மையான பிரத்தியக்ஷப் பிரமாணமாகிறது, இப்பிரமாணம், சப்தம், அநுமாநம் என்ற பிரமாணங்களுக்குக் காரணமாக இருக்கின்றது.

43. ஸ்ம்ருதிபரிஶுத்³தௌ⁴ ஸ்வரூபஶூந்யேவார்த²மாத்ர
நிர்பா⁴ஸா நிர்விதர்கா॥

ஸ்மிருதி போயும், நான் என்ற பிரஜ்ஞை அற்று இருக்கிறது போலவும் (தியாநம் பண்ணப்படும்) வஸ்து மாத்திரமாக மநம் நிற்கும் நிலைமையானது, நிர்விதர்க்க ஸமாபத்தி எனச் சொல்லப்படும்.

உ

மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலையில்
விற்பனைக்குத் தயாராயிருக்கும்

# அருமையான தமிழ்ப் புஸ்தகங்கள்

| | |
|---|---|
| தனிச்செய்யுட் சிந்தாமணி 182 வித்துவான்கள் பாடிய 3815பாடல்கள் | ரூ. 3— 0—0 |
| சிவஞானபாஷ்யம் | 1— 4—0 |
| பழநிமாம்பழக்கவிச்சிங்க நாவலர் பிரபந்தத்திரட்டு | 2— 8—0 |
| கம்பராமாயணம் ஆரண்யகாண்டம் மூலமும் உரையும் | 3— 8—0 |
| திருக்குற்றாலத்தலபுராணம் செய்யுள் (அரும்பதவுரையுடன்) | 1— 8—0 |
| திருச்செந்தூர்ப் பிரபந்தத்திரட்டு (அரும்பதவுரையுடன்) | 1— 8—0 |
| திருக்குறள் பரிமேழகருரையுடன் (பாக்கெட் சயிஸ்) | 1— 0—0 |
| திருவாப்பனூர்ப்புராணம் | 1— 0—0 |
| அரிமழத்தலபுராணம் | 1— 4—0 |
| திருக்குற்றாலத்தலபுராணம் (வசனம்) | 0—12—0 |
| குலோத்துங்கசோழன் கோவை (அரும்பதவுரையுடன்) | 0—12—0 |
| குமணசரித்திரம் ஷை | 0— 8—0 |
| ஸ்ரீவான்மீகி இராமாயண சருக்கார்த்த சங்கிரகம் | 0— 8—0 |
| மாண்டவன் மீண்டமாயம் (ஓர் துப்பறியும் தமிழ் நாவல்) | 0— 8—0 |
| கன்னியாகுமரித்தலபுராணம் வசனமும், செய்யுளும் | 1— 0—0 |
| சித்தாந்தஞானரத்னாவளி | 0— 6—0 |
| சர்வஞானோத்தரம் | 0— 1—0 |
| லாலா லஜபதிராய் சரித்திரம் (படத்துடன்) | 0— 2—0 |
| திருவுருமாமலைச்சிலேடைவெண்பா | 0— 2—0 |
| மூவகையான்மாக்களினிலக்கணம் | 0— 1—0 |
| பரப்பிரம்மவிளக்கம் | 0— 1—0 |
| கைக்குவார் மஹாராஜா அவர்கள் மஹோபந்நியாசம் தமிழ் மொழி பெயர்ப்பு படத்துடன் | 0— 2—0 |
| மாலைமாற்றுமாலை மூலமும்உரையும் | 0— 8—0 |
| சந்நியாசிகீதமும் பராதஜாதிய கீதமும் | 0— 2—0 |
| சேதுபர்வதவர்த்தனியம்மைபிள்ளைத்தமிழ் | 0— 4—0 |
| அத்துவிதவாக்கியத்தெளிவுரை | 0— 4—0 |
| திருச்செந்தூர்கலம்பகம் | 0— 3—0 |
| அட்டாங்கயோகக்குறள் | 0— 2—0 |
| பாரதம் (தமிழ்ச்சங்கம் பதிப்பு) | 3— 0—0 |
| வைத்தியசார சங்கிரகம் ,, | 3— 0—0 |
| பன்னூற்றிரட்டு ,, | 2— 0—0 |
| சைவமஞ்சரி ,, | 1— 8—0 |
| ஞானமிர்தம் ,, | 1— 0—0 |
| தமிழ்ச்சொல்லகராதி ,, (உயிரெழுத்துமுடிய உதாரணங்களுடன்) | 6— 0—0 |

[இவைகளுக்குத் தபால்சார்ஜ் வேறு.]

மு. ரா. கந்தசாமிக் கவிராயர்,
புரோப்ரைட்டர் அன் பத்திராதிபர்,

# வித்தியாபாநு.

இம்மாதாந்தத் தமிழ்ப்பத்திரிகை சௌமியஸ்ரீ சித்திரைமீ முதல் "மதுரை விவேகபாநு அச்சியந்திரசாலை" யிலிருந்து வெளியாகி வருகிறது. ஒவ்வொரு விஷயமும் இலக்கணப்பிழையின்றி தெளிவானநடையில் எழுதப்படுகிறது. பாஷாஞானமும், பகவத்பக்தியும், நல்லொழுக்கமும், தெளிந்த புத்தியும் உண்டாக்கத்தக்கனவாக தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்ல பண்டிதர்கள் பலர் விஷயதானஞ்செய்து வருகிறார்கள்.

சந்தா விவரம்:—வருஷம் 1-க்கு (தபாற்கூலியுள்பட) ரூபாய் 2, மாணவர்கட்கு மட்டும் ரூபா 1, (தபாற்கூலி வேறு) தனிப்பிரதி 3 அணா.

## அச்சுவேலைகள்.

தமிழிலும், இங்கிலீஷிலும், பலவித மைகளாலும், கிலீட்டுகளாலும், திருமணப்பத்திரிகைகள், பட்டா, முச்சலிக்கா, ரசீது, உண்டியல், வக்காலத்து முதலிய கோர்ட்டு சம்பந்தமான சகல வேலைகளும், கணக்குப் புத்தகங்கள், வட்டிச்சிட்டைப் பாரங்கள், லெட்டர்ப் பாரங்கள், பழையநூல்கள், தற்காலவித்துவான்கள் பாடும் புதிய நூல்கள், கியாலண்டர்கள், இலக்கணப் பிழைகளில்லாமல் திருத்தமாயும் பார்டர்களாலும் படங்களாலும் ஒவ்வொருவர் மனத்தையும் கிரகிக்கும்படி அலங்கரித்துச் சீக்கிரமாகவும் சார்சு சகாயமாகவும் செய்துகொடுக்கலாகும்.

## பயிண்டு வேலைகள்.

கட்டிங்மிஷின், ரூலிங்மிஷின், நம்பரிங்மிஷின், கம்பித்தையல்மிஷின், பெர்ப்ரேஷன்மிஷின், டைமிஷின் முதலிய இயந்திரங்கள் எங்களிடமிருப்பதால் கிலிட்டு முதலிய அலங்காரத்துடன் எவ்வித உயர்ந்த பயிண்டுகளும் குறைந்த சார்சுக்கு சீக்கிரம் தயார்செய்து கொடுக்கலாகும்.

## ரப்பர் முகர்கள்.

ரப்பர் முகர்கள் அவரவர் விரும்புகிற மாதிரியில் நீடித்தநாள் கெடாமலிருக்கும்படி சார்சு சகாயமாயும் நேர்த்தியாயும் சீக்கிரம் செய்துகொடுக்கலாகும்.

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்,
புரொப்ரைட்டர் அன் பத்திராதிபர்,
விவேகபாநு அச்சியந்திரசாலை, மதுரை.

குறிப்பு:—ஸ்மிருதி, பிரத்தியக்ஷம், சப்தம், அநுமானம் முதலிய பிரமாணங்களால் அநுபவித்த விஷயங்களின் நினைப்பு. இந்த ஸமாபத்தியில் திரிபுடி அற்று மனம் வஸ்து ரூபமாக ஆகிறது. ஷை இரண்டு ஸமாபத்திகளும் ஸ்தூலமான வஸ்துக்களைத் தியானித்த லாம்.

44. ஏதயைவ ஸவிசாரா நிர்விசாரா ச ஸூக்ஷ்மவிஷயா வ்யாக்யாதா ॥

முன் சொன்ன (ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸமாபத்திகளின் முறைப்படியே) சூக்ஷ்மமான வஸ்துக்களை விஷயீகரிக்கிற ஸவிசார, நிர்விசார ஸமாபத்திகள் சொல்லப்படுகின்றன.

குறிப்பு:—முன் ஸவிதர்க்க நிர்விதர்க்க ஸமாபத்திகளில், ஸ்தூலமான விஷயங்களின் தியானம் திரிபுடி உள்ளதாகவும், திரிபுடி அற்றதாகவும் நிகழ்ந்தது. அவ்விதமே, சூக்ஷ்மமான வஸ்துக்களை விஷயீகரித்தலிலும், தியானித்தலிலும், திரிபுடி உள்ளது ஸவிசார ஸமாபத்தி என்றும், திரிபுடி அற்றது நிர்விசார ஸமாபத்தி யென்றும், அறியத்தக்கது. விசாரம் என்றால் தியானத்தில் ஒரு நிலையாம், தர்க்க விசாரம் அன்றாம். சூக்ஷ்ம வஸ்து என்றால் பரம அணு. இவைகள் அலையும் மனத்தை நிறுத்தும் முறை.

45. ஸூக்ஷ்மவிஷயத்வம் சாலிங்கபர்யவஸானம் ॥

(மேற்கண்ட) ஸூக்ஷ்மமான வஸ்துவை விஷயீகரித்தலானது மூலப் பிரகிருதிவரை நடைபெறுகிறது.

குறிப்பு:—பஞ்ச பூதங்களின் சூக்ஷ்மமான நிலை—பஞ்சதந்மாத்திரைகள். பஞ்சதந்மாத்திரைகளின் சூக்ஷ்மமான நிலை லிங்கம் அதாவது மஹத்தத்துவம். மஹத்தத்துவத்தின் சூக்ஷ்மமான நிலை அலிங்கம், அதாவது மூலப்பிரகிருதி. மூலப்பிரகிருதியைவிட சூக்ஷ்மமான வஸ்து இல்லை. மூலப்பிரகிருதியை விட சூக்ஷ்மமாகப் புருஷன் இருந்தாலும், புருஷன் பிரபஞ்சத்திற்கு உபதான காரணமாக இல்லை. மூலப்பிரகிருதி பிரபஞ்சத்திற்கு உபதான காரணமாக இருக்கின்றமையால், அதுவே முடிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

46. தா ஏவ ஸபீஜ: ஸமாதி: ॥

(மேற்கண்ட நாலு ஸமாபத்திகளும்) பீஜத்துடன் கூடிய ஸமாதிகளே.

குறிப்பு:—"பீஜத்துடன் கூடிய" என்றால் "வெளியிலுள்ள வஸ்துவை ஆலம்பநமாக ஆசிரயித்த" என்பதாம்.

47. நிர்விசாரவைசாரத்யேऽத்யாத்மப்ரஸாத: ॥

நிர்விசார ஸமாதியில் சாமர்த்தியமுள்ளவனுகில் மநத்தில் தெளிவான ஞாநம் உண்டாகிறது.

குறிப்பு:—ரஜஸ், தமஸ் இவைகள் விஷயங்களை மறைத்தலாகிய ஆவரணத்தை யுண்டுபண்ணுகின்றன. இவைகள் யோகாப்பியாஸத்தினால் போகவே, மநம் ஸத்துவமாகப் பிரகாசிக்கின்றது. வைசாரத்யம்=பாண்டித்தியம் உண்டாகும்போது. சாதாரணமாய் ஏனையருக்கு ஞாநம் ஒன்றின்பின் ஒன்றாய்க் கிரமமாக உண்டாகிறது, இந்நிலையை அடைந்தவனுக்கு அப்படியின்றி ஏக காலத்தில் எல்லா விஷயங்களின் ஞாநம் உண்டாகிறது. இந்நிலையில் உள்ளவன், பிறர் யாராலும் பரிதபிக்கக்கூடாதவனுக அத்தன்மையான உயர்ந்த ஸ்தாநத்தை அடைந்து பர்வதத்தின் மேலுச்சியிலுள்ளவன் போல, ஜநங்களைக் கருணையுடன் பார்க்கிறான். இவ்விதம் மஹா பாரதத்தில் சாந்தி பர்வத்தில் சொல்லப்பட்டுள்ளது.

48. ருதம்பரா தத்ர ப்ரஜ்ஞா ॥

அந்நிலையிலுள்ள பிரஜ்ஞை 'ரிதம்பரா' என்று பெயர் பெறும்.

குறிப்பு:—அந்நிலையில் உள்ள பிரஜ்ஞையானது, ஸம்சய விபரியயங்களின்றி வஸ்துக்களின் உண்மையான ஸ்வரூபத்தையே அறிவிக்கிறது. ரிதம்பரா = உண்மை தரித்தல்.

49. ச்ருதாநுமாநப்ரஜ்ஞாப்யாமந்யவிஷயா
விசேஷார்த்தத்வாத் ॥

(முன் சொல்லிய ரிதம்பரா என்ற பிரஜ்ஞையானது) சுருதி, அநுமாநங்களால் ஏற்படும் பிரஜ்ஞையை விட வேறானது. அது வஸ்துக்களின் விசேஷ ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிறது.

507



குறிப்பு:—சுருதி அநுமானங்களால் கிடைக்கும் ஞானம் சாமாந்நியமானது. வஸ்துக்களின் விசேஷ ஸ்வரூபத்தைக் காட்டும் தன்மையது அல்ல. ரிதம்பரா என்ற பிரஞ்ஞையானது மேற்கண்ட இரண்டு பிரமாணங்களும் பிரவேசிக்க இயலாத பிரஞ்ஞாபூமி. இதில் உள்ளபடி யதார்த்தஞானம் உண்டாகிறது. சூக்ஷ்மமான பரம அணுக்கள், மறைவுள்ள வஸ்துக்கள், தூரத்திலுள்ள வஸ்துக்கள், இந்த பிரஞ்ஞா நிலையில், பிரத்தியக்ஷமாகின்றன. இவைகள் லௌகிக பிரத்தியக்ஷம், சப்தம், அநுமானங்களான பிரமாணங்களுக்குப் புறம்பானவை.

50. 𑌤𑌜𑍍𑌜𑌃 𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍋𑌽𑌨𑍍𑌯𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍀 ॥

மேற்கண்ட (ரிதம்பரா என்ற பிரஞ்ஞாநிலையால் ஏற்படும் ஸம்ஸ்காரமானது) மற்றைய வெளி விஷயங்களால் ஏற்படும் ஸ்ம்ஸ்காரங்கள் உண்டாகாமல் தடுக்கும் தன்மையது.

குறிப்பு:—இந்நிலையில் உள்ள யோகியானவன், வெளிவிஷயங்கள் தன் மநத்தில் தங்க இடம் கொடான். அத்தன்மையான பூர்வ வாஸனைகள் இருப்பினும், அவைகள் தன்னை மேற்கொள்ளவும் இடங் கொடான். ஸமாதியினுல், பிரஞ்ஞையானது ஸ்திரப்படுகிறது. அதனுல் ஸமாதிரூபமான ஸம்ஸ்காரமானது, மேன்மேலும் விருத்தியடைகிறது. சாதாரண விஷய அநுபவத்தில் மநம் அதன்கண்ணே நிற்பதுபோல ஸமாதி நிலை உறுதிப்பட, மநம் அந்நிலையில் இருப்பதாகும். இரண்டிற்கும் வித்தியாஸம் இல்லை யென்றுலோ, வித்தியாஸம் உண்டு. ஸமாதி நிலையால் ஏற்படும் ஐகாக்ரியமானது மநத்தின் விஷய வாஸனைகளைப்போக்கி அதைத் தூய்மைப்படுத்தும் இயல்பினது, புருஷ ஸாக்ஷாத்காரம் உண்டாகும்படி செய்கிறது. புருஷ ஸாக்ஷாத்காரம் உண்டாகவே மநம் விர்த்தியின்றி ஓய்வடைகிறது. மனோநாசம் உண்டாகிறது என்னலாம். விஷய அநுபவத்தின் ஐகாக்ரியமானது விஷய அநுபவங்களை விருத்திபண்ணுகிறது.

51. 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨𑌿𑌰𑍋𑌧𑍇 𑌸𑌰𑍍𑌵-
𑌨𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑍍𑌬𑍀𑌜𑌃 𑌸𑌮𑌾𑌧𑌿𑌃 ॥

மேற்கண்ட (ரிதம்பரா பிரஞ்ஞையால் ஏற்படுகிற) ஸம்ஸ்காரப் பிரவாகத்திற்குத் தடை உண்டாகும்போது எல்லா ஸம்ஸ்காரங்களுக்கும் தடை உண்டாகின்றன. அந்நிலை “நிர்பீஜம்” என்ற ஸமாதியாகும்.

குறிப்பு:—இந்த நிர்பீஜ ஸமாதியானது எல்லா ஸம்ஸ்காரங்களையும் பாதிக்கின்றது. இதனால் மநத்தின் விஷய அநுபவச்செயல் அற்றுப்போகிறது. யோகியானவன் கைவல்யத்தை அடைகிறான். அந்நிலையில் புருஷன் தன் ஸ்வரூபமாத்திரத்தில் இருப்பவனும், சுத்தனும், கேவலனும் ஆகிறான். இந்நிலையில் "முக்தன்" எனப்படுகிறான். முதன்மையில், பல விர்த்திகளால் சித்தம் அலையுள்ளதாக இருந்து, பின்னர் யோகப்பயிற்சியால் பலவிர்த்திகள் தவிர்ந்து, ஒரே விர்த்தி மாத்திரம் ஏற்பட்டது. இந்நிலையில் நான் என்ற பிரஞ்ஞை உள்ளது. பின்னர் அந்த விர்த்தியும் ஒழியவே கைவல்ய பதவி ஸித்திக்கிறது. அடியில் வரும் திருமந்திர வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று நானென்றுஞ் சாற்றகி லேனே

சாற்றரி தாகிய தத்துவஞ் சித்தித்தா
லாற்றரி தாகிய வைந்து மடங்கிடு
மேற்றிகழ் ஞானம் விளக்கொளி யாய்நிற்கும்
பாற்பர சாயுச்சிய மாகும் பதியே—திருமூலர்

ஸமாதிபாதம் முற்றிற்று.

---

பகவான் பதஞ்சலி மஹரிஷி அருளிச்செய்த

# யோகசூத்திரம்.

## 2-வது ஸாதந பாதம்.

1. தப: ஸ்வாத்யாயேஶ்வரப்ரணிதாநாநி க்ரியாயோக: ॥

தபஸ், ஸ்வாத்தியாயம், ஈசுவரப்பிரணிதாநம் இவை கர்மயோகம்.

குறிப்பு:—முந்திய அத்தியாயத்தில், எவன் மநம் ஒழிவையடைந்து, அந்தர்முகப்பட்டு சமாதியில் நோக்காயுள்ளதோ, அவனுக்குப் பயன்படும்படியாக யோகம் சொல்லப்பட்டது. எவன் மநம் அந்தர்முகப்படாமல், வெளி விஷயங்களில் பிரவிர்த்திக்கின்றதோ அவனும் யோகியாக ஆதலுக்கு அநுகூலமான ஸாதநங்கள் இந்த அத்தியாயத்தில் சொல்லப்படுகின்றன.

தபஸ் என்றால் தாபத்தை உண்டுபண்ணுதல், அதனால் மநம், மொழி, மெய்யைப் பரிசுத்தப்படுத்தல். மநத்தில் ஏற்படும் அசுத்தியானது வெகுகாலமாய் இருந்து வருகிற கர்ம கிலேசங்களால் நாநாவிதமாயும், விஷய நுகர்ச்சியில் பிரவிர்த்திக்கும்படியாயும் செய்கிறது. அது தபஸினால் பேதிக்கப்படுகிறது. அதனால் தபஸ் முக்கிய ஸாதநம். சித்தத்தின் பிரஸாதத்தைப் பாதிக்காமல் இத் தபஸ் நிகழவேண்டும். தபஸ் என்றால் காயக்கிலேசம் எனப் பொருள் பெறும். சுத்தமாக ஆகாரமின்மை யோகாப்பியாசத்திற்கு விரோதம். இதனால் மித போஜநம் வேண்டும் என்பது இங்கு கிரஹிக்கப்படுகிறது. அதனால்தான் 'சித்தத்தின் பிரஸாதத்தைப் பாதிக்காமல் என்ற எச்சரிக்கை ஏற்பட்டிருக்கிறது.

ஸ்வாத்தியாயம் யோகத்திற்குச் சாதகமான பிரணவ முதலிய பரிசுத்த மந்திரங்களை ஜபித்தலும், உபநிஷத் முதலிய மோக்ஷ சாஸ்திரத்தைப் படித்தலும் இதில் அடங்கும்.

ஈசுவரப் பிரணிதாநம், ப்ர = நன்றாய், நிதாநம் = வைத்தல் சகல காரியங்களையும் பரம குருவான ஈசுவரனிடத்தில் அர்ப்பணம் செய்தல்,

510

𑌯𑌤𑍍𑌕𑌰𑍋𑌷𑌿 𑌯𑌦𑌶𑍍𑌨𑌾𑌸𑌿 𑌯𑌜𑍍𑌜𑍁𑌹𑍋𑌷𑌿 𑌦𑌦𑌾𑌸𑌿 𑌯𑌤𑍍 ।
𑌯𑌤𑍍𑌤𑌪𑌸𑍍𑌯𑌸𑌿 𑌕𑍌𑌨𑍍𑌤𑍇𑌯 𑌤𑌤𑍍𑌕𑍁𑌰𑍁𑌷𑍍𑌵 𑌮𑌦𑌰𑍍𑌪𑌣𑌮𑍍 ॥

ஸ்ரீமத் பகவத்கீதை 12-ம் அத்.

அல்லது பலாபேக்ஷையின்றிக் கர்மங்களைச் செய்தல்,

𑌕𑌰𑍍𑌮𑌣𑍍𑌯𑍇𑌵𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌸𑍍𑌤𑍇 𑌮𑌾 𑌫𑌲𑍇𑌷𑍁 𑌕𑌦𑌾𑌚𑌨 ।
𑌮𑌾 𑌕𑌰𑍍𑌮𑌫𑌲𑌹𑍇𑌤𑍁𑌰𑍍𑌭𑍂𑌰𑍍𑌮𑌾 𑌤𑍇 𑌸𑌙𑍍𑌗𑍋𑌽𑌸𑍍𑌤𑍍𑌵𑌕𑌰𑍍𑌮𑌣𑌿 ॥

ஸ்ரீமத் பகவத் கீதை 2-ம் அத். 47-ம் ஸ்

2. 𑌸𑌮𑌾𑌧𑌿𑌭𑌾𑌵𑌨𑌾𑌰𑍍𑌥𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌤𑌨𑍂𑌕𑌰𑌣𑌾𑌰𑍍𑌥𑌶𑍍𑌚 ॥

அது (முன் சோல்லிய கிரியா யோகமானது) ஸமாதி நிலையை யடைதற்கும் கிலேசங்களைக் குறைசெய்துகோண்டு வருதலுக்கும் (பிரயோஜநமாம்).

3. 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌮𑌿𑌤𑌾𑌰𑌾𑌗𑌦𑍍𑌵𑍇𑌷𑌾𑌭𑌿𑌨𑌿𑌵𑍇𑌶𑌾𑌃 𑌕𑍍𑌲𑍇𑌶𑌾𑌃 ॥

அக்கிலேசங்களாவன:—அவித்தை, அஸ்மிதை, ராகத்துவேஷம், அபிநிவேசம் (உயிர்மேல் பற்று.)

குறிப்பு:—இவை ஐந்தும் மனிதனை ஆசிரயித்து குணங்களை ஸ்திரப்படுத்துகின்றன. மஹத், அகங்காரம், தந்மாத்திரைகள் முதலிய பரிணமங்களை விருத்தி செய்கின்றன. காரிய காரண பரம்பரையை விருத்தி அடையும்படி பண்ணுகின்றன. ஒன்றுக்கொன்று உதவியாகவிருந்து கர்மங்களின் பரிபாகத்தை உண்டு பண்ணுகின்றன.

4. 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌮𑍁𑌤𑍍𑌤𑌰𑍇𑌷𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌤𑌨𑍁𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑍋𑌦𑌾𑌰𑌾𑌣𑌾𑌮𑍍 ॥

ப்ரஸுப்த, தநு, விச்சிந்த, உதார என்ற நான்குவித அவஸ்தைகளையுடைய மேற்கண்ட அஸ்மிதை முதலிய நான்கு கிலேசங்களுக்கும் அவித்தை என்பது இருப்பிடமாம்.

குறிப்பு:— பிரஸுப்த=வெளியாகாமல் வித்தில் மரம்போல உள்ளடங்கி யிருத்தல்.

தநு = ஒரு வாஸனையை, வேறொரு எதிரிடையான வாஸனையை அப்பியாஸம் செய்து குறைத்தல்.

விச்சிந்ந = ஒரு விர்த்தி வெளிப்படுங் காலத்தில், மற்ற விர்த்திகள் ஒடுங்குதல்.

உதார = ஓர் ஓர் விஷயத்தை நோக்கி விர்த்தி வெளிப்படுதல்.

மேற்கண்டபடி நாலுவிதமான அவஸ்தைகளை அஸ்மிதை முதலிய கிலேசங்கள் பெறுகின்றன.

புருஷ ஸாக்ஷாத்காரம் பெறுமவனுக்கு இக்கிலேசங்கள் வறுத்த விதைபோல ஆகும். திரும்பவும் அவைகள் முளைக்காவாம். அவனைப் பாதிக்காவாம். அது ஐந்தாம் அவஸ்தை எனப் பெயர் பெறும். அதனால் அந்த ஜந்மம் அவனுடைய கடையான ஜந்மமாம். விதேகப் பிரகிருதிலயாளுக்கு அவர்கள் மஹத்தான சுகங்கள் அநுபவிக்குங் காலத்தில், கிலேசங்கள் பிரஸுப்த அவஸ்தையைப் பெறும். அச்சுகங்கள் முடியுங்காலத்தில் திரும்பவும், அவர்கள் ஜந்மம் பெறும் சமயத்தில் அவர்களைப் பாதிக்கும்.

கிலேசங்கள் வரவரக் குறைதலுக்கு இப்பாதம் முதல் ஸூத்திரத்தில் சொல்லியிருக்கிற தபஸ் முதலானவை ஸாதநங்களாம்.

எல்லாக் கிலேசங்களும் அவித்தையின் பேதங்களாம்.

தத்வங்களில் லயமடைகிறவர்களுடைய கிலேசங்கள் பிரஸுப்த அவஸ்தையைப் பெறும்.

யோகிகளுடைய கிலேசங்கள் தநு என்ற அவஸ்தையைப் பெறும்.

ஸாதாரண விஷயிகளுடைய கிலேசங்கள் விச்சிந்ந, உதார என்ற அவஸ்தைகளைப் பெறும்.

5. அநித்யாஶுசிது:கா²நாத்மஸு
நித்யஶுசிஸுகா²த்மக்²யாதிரவித்³யா ॥

அநித்தியத்தையும், அசுத்தத்தையும், துக்கத்தையும், அநாத்மாவையும் முறையே நித்தியமாயும், சுத்தமாயும், சுகமாயும், ஆத்மாவாயும் நினைத்தல் அவித்தையாம்.

குறிப்பு :—அநித்தியத்தை நித்தியமாக நினைத்தல், பிருதிவி முதலிய பஞ்ச பூதங்களை நித்தியமென்று நினைத்து, அவைகளை உபாஸனை செய்து, அவைகளின் ஸ்வரூபத்தைப் பெறவேண்டுமே

னச் சிலர் மூடஜனின்றார்கள். அவ்விதமே, சந்திரன், சூரியன், நக்ஷத்திரங்கள் முதலியவைகளை நித்தியமாக நினைத்து அவைகளின் தாரதம்மியம் (நிலைமை) அடைய விரும்பினவராய் நாநாவிதமான கர்மங்களைச் சிலர் அநுஷ்டிக்கிறார்கள். அமரர்களாக வேண்டுமெனப் பல தேவர்களை உபாஸிக்கின்றார்கள்.

அசுத்தத்தைச் சுத்தமாய் நினைத்தல்.—மாதாவின் கர்ப்பாசயம் என்ற இடம், மாதாபிதாக்களின் சுக்கில சோணித சம்பந்தத்தினால் ஏற்படும் உற்பத்தி நிலை, மாதா உட்கொள்ளும் உணவினின்று சுண்டப்பெற்ற உணவு, கர்ப்பப்பையினின்று சிசு வெளிவந்த மேல் உண்டாகும் வியர்வை, மரணம் முதலியன அசுத்தமாக இருக்கின்றன. அவற்றைச் சுத்தமென்று மதித்தல், அசுத்தமாக இருக்கின்ற சரீரத்தைச் சுத்தமென்று மதித்தல், இவ்வித மதியிநத்தால் ஸ்திரீகளைச் சந்திரனைப்போலவும் இன்னும் பலவிதமாக வர்ணித்தலும், பாபத்தைப் புண்ணியமென நினைத்தலும், தீயதை நலமெனக் கருதலும் இவை போன்றவை இதில் அடங்கும்.

துக்கத்தைச் சுகமென்று நினைத்தல், அறிஞர் உலகத்தில் உள்ள யாவும் துக்கமெனக் கருதுவர்.

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்ன
தற்றோ ருறுவ தறிகஎன்று அருளி"

என்ற மணிமேகலைச் செய்யுள் இங்கு கவனிக்கத்தக்கது.

அநாத்மாவை ஆத்மாவாக நினைத்தல்:—அநாத்மாவாகிய புத்திரகளத்திராதிகளையும், போகத்திற்கு இருப்பிடமான சரீரத்தையும், இந்திரியங்களையும், மநத்தையும் ஆத்மாவென நினைத்தல்: நான்குவிதமாய்ச் சொல்லப்பட்டிருக்கிற அவித்தையானது, பெருகி வரும் கிலேசங்களுக்குக் காரணமாயும், கர்மத்திற்கும் அதின் பலத்திற்கும் இருப்பிடமாயும், ஆகிறது. அமித்ரன் என்ற பதம், மித்ரனின்மை என்ற அர்த்தத்தை மாத்திரம் குறிப்பிடாமல் மித்ரன் என்பதற்கு விரோதியான சத்துருவைக் குறிப்பிடுகிறது. அவ்வித

மே அவித்தை என்ற பதம் ஞாநமின்மை என்ற அர்த்தத்தைமாத்திரம் குறிப்பிடாமல் வித்தைக்கு எதிரிடையான அவித்தை என்ற பதார்த்தத்தைக் குறிப்பிடுகிறது. அவித்தை என்பது பாவ வஸ்துவாம். அபாவமன்று.

6. த்ருக்³த³ர்ஶநஶக்த்யோரேகாத்மதேவாஸ்மிதா ॥

பார்க்கிறவன் (திருக்) பார்க்கச் சாதநமான கருவியுடனே (தர்சந= அகங்காரத்துடனே) சேர்ந்து ஒன்றாய் இருப்பவன் போல நடைபெறும் நிலைமை அஸ்மிதையாம்.

குறிப்பு:—புருஷன் பார்க்கிறவன்(திருக்). தர்சநம், பார்வை யென்றும், பார்வைக்குச் சாதநம் என்றும் பொருள்படும். ஆனால் இவ்விடத்தில் சாதநமான அந்தக்கரணமாம். புருஷன் அந்தக்கரணத்துடன் சேர்ந்து ஒன்றாய் இருப்பது போலத் தோன்றுதல் அஸ்மிதை. ஆத்மாவான புருஷன் அநாத்மாவான அந்தக்கரணத்தில், நான் அதாவது ஆத்மா என்றபிமானித்தல் அஸ்மிதை என்பதாம், பார்க்கிறவனான ஆத்மா பார்வைக்குச் சாதநத்தைத் தான் என்றபிமாநித்தல். பார்வைக்குச் சாதநமாவது அந்தக்கரணம். இது அகங்காரம், புத்தி, சித்தம், மநஸ், எனப் பிரியும். இவைகளில் அகங்காரம் மூலம். சித்தம் என்பது முன் அநுபவத்தைச் சிந்திப்பது, மநஸ் என்பது பிரகிருதத்தில் விஷயங்களை அறிவது, புத்தி என்பது அவிவேகம் ஏற்பட்டுச் சந்தேகம்வருங்கால் தீர்மானிப்பது. ஆத்மா எப்போதும் பரிணாம மில்லாதவன். அந்தக்கரணம் எப்போதும் பரிணாமமுள்ளது. ஆத்மா சேதநன், அந்தக்கரணம் அநாத்மா, ஜடம். நாம் கோபம், துக்கம், சந்தோஷம் முதலிய அநுபவங்கள் அடையுங்கால், நான் கோபி, நான் துக்கி, நான் ஸந்தோஷி என்று சொல்லும்போது அந்தக்கரணத்துடன் சேர்ந்து அப்படி நினைக்கிறோம். ஆத்மா, அந்தக்கரணம் இவைகளின் உண்மையான ஸ்வரூபத்தை அறிந்தால் கைவல்யம் ஏற்படும். கைவல்யம் என்பது தன்நிலை. ஆத்மாவும் அந்தக்கரணமும் சம்பந்தப்பட்டால் விஷயங்களின் அநுபவம் உண்டாகும். இன்றேல் தன் நிலையில் ஆத்மா இருக்கிறான்.

7. 𑌸𑍁𑌖𑌾𑌨𑍁𑌶𑌯𑍀 𑌰𑌾𑌗𑌃॥

ஆசையானது ஸுகத்தையும் ஸுகஸாதநத்தையும் நோக்கியதாக நடைபெறுகிறது.

குறிப்பு:—முன்னநுபவித்த ஸுகத்தின் ஸ்மரணையால், சுகத்தின்மீது அல்லது ஸுகஸாதநத்தின்மீது உண்டாகும் ஆசை ராகம் எனப்படும். ஸுகசிந்தனையின்மேலுள்ள ஆசையும் இதில் அடங்கும்.

8. 𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍁𑌶𑌯𑍀 𑌦𑍍𑌵𑍇𑌷𑌃॥

வெறுப்பானது துக்கத்தையும், துக்கஸாதநத்தையும் நோக்கியதாக நடைபெறுகிறது.

குறிப்பு:—முன்னநுபவித்த துக்கத்தின் ஸ்மரணையால் துக்கத்தின்மீது அல்லது துக்கஸாதநத்தின்மீது உண்டாகும் வெறுப்பு துவேஷமெனப்படும்.

9. 𑌸𑍍𑌵𑌰𑌸𑌵𑌾𑌹𑍀 𑌵𑌿𑌦𑍁𑌷𑍋𑌽𑌪𑌿 𑌤𑌥𑌾𑌰𑍂𑌢𑍋𑌽𑌭𑌿𑌨𑌿𑌵𑍇𑌶𑌃॥

அபிநிவேசம் என்பது ஸ்வபாவமாய் வாஸநாரூபமாக நிகழ்வதாயும் ஸாதாரண மனிதனிடத்தில் போல வித்துவானிடமுங்கூட ஸ்திரப்பட்டிருக்கிறதாயுமுள்ள ஒரு பற்று.

குறிப்பு:—உயிர்ப்பற்று, அதாவது முன் ஜந்மத்தின் மரணாநுபவம் பின் ஜந்மத்தில் வாஸநா ரூபமாக இருந்துகொண்டு, ஆத்மாவானது சரீராதிகளினின்று விட்டுப்பிரிதல் உண்டாகக்கூடாதென்ற மனோவிர்த்தி அபிநிவேசமாம். இஃது எல்லாப் பிராணிகளிடமும் உள்ளது. "நான் இறக்காமல் என்றும் இருக்கக்கடவேன்" என்ற பிரார்த்தனை ரூபமான விர்த்தி எல்லா ஜீவராசிகளிலும் தவறாமல் இருக்கின்றது. மரண அநுபவமில்லானுக்கு இஃது இருக்கப்பாலதன்று. மரணபயம் இருக்கின்றமையால் பூர்வ ஜந்மம் உண்டென அநுமானிக்கலாகும், பிறந்த புழுவுக்குங்கூட மரணபயம் உள்ளது. இது பிரத்தியக்ஷம், அநுமாநம், சப்தம் என்ற பிரமாணங்களால் உண்டாகின்றதன்று, அறிவில்லானிடமும், அறிவுள்ளானிடமும் இது ஸமாநமாக இருக்கின்றது.

10. தே ப்ரதிப்ரஸவஹேயா: ஸூக்ஷ்மா:॥

வாசநாரூபமான சூக்ஷ்மமான கிலேசங்கள் எதிரிடையான பரிணாமங்களால் தள்ளத்தக்கன.

குறிப்பு:—கிலேசங்கள் ஸ்தூலம், ஸூக்ஷ்மம் என இருவகைத்து. வாஸநாரூபமானவை ஸூக்ஷ்மமானவை. யோகியின் மநம் ஸமாதியை யடையும்போது மேற்கண்ட ஐவகையான கிலேசங்கள் வறுத்த வித்தைப்போலாகி மநத்துடன் லயமடைகின்றன.

மநம் விஷயங்களை நோக்கிப் பகிர்முகப் படாமல், தனக்குக் காரணமான அஸ்மிதையை நோக்கி அந்தர்முகப்பட்டு ஸ்வரூப நாசம் பெறுகிறது. இதுதான் எதிரிடையான பரிணாமம் பெறல். மநம் நாசமுறுகிறதினால், அது சம்பந்தமாகவுள்ள சூக்ஷ்மமான கிலேசங்களும் நாசமடைகின்றன.

11. த்யாநஹேயாஸ்தத்வ்ருத்தய:॥

(ஸ்தூலமான கிலேசங்களான) விர்த்திகள் தியாநத்தினால் தள்ளத் தக்கவைகள்.

குறிப்பு:—முன் சூத்திரத்தில் வாஸநாரூபமான சூக்ஷ்மமான கிலேசங்கள் அழிவுறும் முறை உபதேசிக்கப்பட்டது. இந்த சூத்திரத்தில் ஸ்தூலமான கிலேசங்கள் (அவைகளே விர்த்திகளாம்) அழிவுறும் முறை சொல்லப்படுகின்றது. அதாவது அவைகள் தியாநத்தால் அழிகின்றன.

அழுக்கான வஸ்திரம் தோய்க்கப்பட்டால் அதன் ஸ்தூலமான மலம் முதலில் போகின்றது, பின்பு உவர்மண் முதலியவை சேர்த்துத் தோய்த்தால் அதன் சூக்ஷ்மமான மலம் போகின்றது. மலத்தின் வாஸனையானது வஸ்திரம் அழியும்வரை நிற்பதாகும். வஸ்திரம் அழிந்தால் அதுவும் அழியும், அவ்விதமே அடர்த்தியான கிலேசங்கள் கிரியா யோகத்தால் பிரிந்து விலகியும், தியாநத்தால் ஸூக்ஷ்மமாகியும் பின்பு மநோநாசத்தால் நாசமடைகின்றன.

12. க்லேஶமூல: கர்மாஶயோ த்ருஷ்டாத்ருஷ்டஜந்மவேதநீய:॥

(புண்ணிய பாப) கர்மங்களின் ஸம்ஸ்காரம் கிலேசங்களை மூலமாக உடையது. இது திர்ஷ்டமான இந்த ஜந்மத்திலும் அதிர்ஷ்டமான ஜந்மத்திலும் அறியப்பாலது.

குறிப்பு:—கிலேசங்கள் இன்னவை என்ற நிரூபணம் முன்னர் ஏற்பட்டது. கிலேசங்கள் என்ற பெயர் வருதலுக்குக் காரணம், என்னவென்றால், அவைகள் சாக்ஷாத்தாக நேரில் சுக துக்கங்களை உண்டுபண்ணு விட்டாலும், கர்மங்களை உண்டுபண்ணி அவைகள் மூலமாய் மனிதனைக் கர்மபலங்களை அநுபவிக்கும்படியாக்ச் செய்கின்றமையால் அவைகளுக்கு அப்பெயர் ஏற்பட்டது. இதில் கர்மங்களின் காரணம், கர்மங்களின் ஸ்வரூபம், கர்மங்களின் புலம் இவை மூன்றும் பிரஸ்தாபிக்கப்படுகின்றன. அவித்தை முதலிய கிலேசங்களை முன்வைத்துத்தான், புண்ணிய பாப கர்மங்களில் பிரவிர்த்தி உண்டாகின்றது. அதனால் கிலேசங்கள் கர்மங்களின் காரணமாகும். கர்மங்களின் ஸ்வரூபம்: முதலில் ஸ்தூலமாக வெளிப்பட்ட கர்மங்கள் இந்த ஜந்மத்திலோ வரும் ஜந்மத்திலோ பலனைக் கொடுக்கும் வரையில், ஸம்ஸ்கார ரூபமாக சூக்ஷ்ம நிலைமையை அடைகின்றது. அது ஆசயம் என்று சூத்திரத்தில் சொல்லப்பெற்றிருக்கிறது.

கர்மங்களின் பலன் இருவகைத்து. ஒன்று, கர்மங்கள் நிகழும் ஜந்மத்திலேயே பலன் உண்டாதலும், அநுபவித்தலும், அறிதலும்; மற்றொன்று, இனிவரும் ஜந்மாந்தரங்களில் பலன் உண்டாக, அதை அந்த ஜந்மாந்தரங்களில் அநுபவித்தலும் அறிதலுமாம்.

நந்திகேசுவரர் மனிதனைப் பிறந்து தீவிர தபஸ், மந்திர ஜபம், ஸமாதி முதலியவைகளால் ஈசுவர ஆராதனைகளைப் புரிந்து, அவைகளின் பயனாக அதே ஜந்மத்தில் தேவஜாதி, தீர்க்க ஆயுஸ், திவ்விய போகங்களையும் அடைந்தார்.

விசுவாமித்திரர் தீவிரமான தபஸ் முதலியவைகளால், அதே ஜந்மத்தில் உயர்ந்த ஜாதி, தீர்க்க ஆயுஸ், ஸித்திகள் இவைகளைப் பெற்றார். அவ்விதமே உக்கிரமான பாபகர்மத்தால் பலன் இந்த ஜந்மத்திலேயே உண்டாகும். நகுஷன் முன் ஜந்மத்தில் செய்த புண்ணிய கர்மபலனாக இந்திர பதவி பெற்றும் உடனே கொடிய பாபம் செய்ததினால் அதே ஜந்மத்தில் ஸர்ப்பமாக ஆனான்.

அதிர்ஷ்ட கர்மபலன்களாவன:—இதே ஜன்மத்தில் யாதொரு காரணமுமின்றி நன்மை அல்லது தீமையான ஸம்பவங்கள் ஒருவனுக்கு நேரிடுகின்றன. அவைகளின் காரணத்தை ஆராய்வோமாகில் அச்சம்பவங்கள், முன் ஜன்மங்களிற் செய்த கர்மங்களின் பலன் எனவே மதிக்கத்தக்கன. சில கர்மங்கள் செய்கின்றோம். அவைகளின் பலனை இனிவரும் ஜன்மங்களில் அநுபவிப்போம்.

13. ஸதி மூலே தத்விபாகோ ஜாத்யாயுர்போகா:॥

கர்மாசயத்திற்கு மூலமான கிலேசமானது இருந்தால்தான், ஜநநம் தீர்க்காயுஸ், போகம் என்றவை கர்மங்களின் பலனாக ஏற்படும்.

குறிப்பு:—கர்மங்களின் பலன்கள் ஏற்படவேண்டுமாயின் கிலேசங்கள் இருத்தல் வேண்டும். அதனால் கிலேசங்களின் க்ஷயத்தை அடையும் யோகிக்கு கர்மபலன்கள் கிடையா என்று இதன் மூலமாக ஏற்படுகிறது. யோகியானவன், பிரகிருதி புருஷ விவேகம் பெற்று, அதனால் கிலேசங்களைத் தகிக்கிறான். கிலேசங்கள் போகவே, உமிபோன நெல் வித்தைப்போல, கர்மங்கள் பலனைக் கொடுக்கும் தன்மையை இழக்கின்றன.

கர்ம பரிபாகம் மூன்று விதம்:—(1) ஜாதி, மக்கள், தேவர், நரகர், விலங்கு முதலியன. (2) ஆயுஸ் உயிருடன் இருக்கும் காலம் தீர்க்கமாக இருத்தல்வேண்டும். (3) போகம், இதுதான் கர்மங்களின் பலனுடைய அநுபவம். முன் ஜாதியும் ஆயுஸும் இதற்கு ஸாதகம்.

ஒரே ஜன்மத்தில் பரஸ்பர விருத்தமான சுக, துக்க அநுபவங்கள் காணப்படுவதால், முன் கர்மங்களுள் பரிபாகமுள்ள அநேகங்கள் ஒன்று சேர்ந்து ஒரு ஜன்மத்தைக் கொடுக்கின்றன என ஏற்படுகிறது. ஆனால் ஒரு பெரிய கர்மம் மாத்திரம் அந்த ஜன்மத்தின் பொது கதியை நடத்தும். சிறியனவானபல கர்மங்கள் அந்த ஜன்மத்தில் பல சமயங்களில் சுகங்களையும் துக்கங்களையும் உண்டுபண்ணும் சில கர்மங்கள் பிறப்பையும், சில ஆயுளையும், சில போகத்தையும் கொடுக்கின்றன. கர்மங்களின் ஸ்வரூபத்தை அறிதல் மிகவும்

கஷ்டமானது. அதனால்தான் பகவத் கீதையிலும் பகவான் "மஹாநாகஷி்ணோமதி:" என்றார்.

பொதுவாய்க் கர்மங்கள் இரண்டு விதமான தகைமைகளுடையன:—

(1) அவைகள் செய்யப்பெறும் ஜந்மத்திலேயாவது, வரும் ஜந்மத்திலேயாவது சுக துக்கமான போகங்களை உண்டுபண்ணும் இயல்பின.

(2) ஒருவிதமான கர்மத்தைச் செய்துகொண்டு வருவதால், அத்தன்மையான கர்மங்களைச் செய்யத்தூண்டும் வாஸனை ஏற்படுகின்றது. அவ்வாஸனை நன்மையாக இருப்பின், விவேகத்தினால் அதை யறிந்து, அதை விருத்தி செய்தலும், அது தீமையாக இருப்பின் வைராக்கியத்தால் அதைத் தவிர்த்து வேறு நல்ல கர்மத்தை அப்பியாஸம் செய்தலும் யோக சாஸ்திரத்தின் உபதேசமாம்.

கர்மங்கள் பூமியில் பிறப்புக்கும் இறப்புக்கும் மத்தியகாலத்தில் தான் பெரும்பாலும் ஏற்படுகின்றன. இறந்தமேல் மறு ஜந்மம் ஏற்படும் வரை அவைகள் அநேகமாக உண்டாகின்றன அல்ல அப்போது முன் கர்மங்களின் அநுபவம் மாத்திரம் நிகழும். சிறுபான்மையாய் லோகாந்தரங்களில் ஜீவன் கர்மம் செய்தல் கூடும்.

மரணகாலத்தில் இனிவரும் ஜந்மத்திற்குக் காரணமாகும் பரிபக்குவமான கர்மங்கள் நன்றாய் வியக்தப்படுகின்றன; ஜீவனின் பிரஞ்ஞையில் தோன்றுகின்றன. இதுவிஷயமாகப் ப்ருஹத் ஆரண்ணியக உபநிஷத், 4-வது அத்தியாயம், 4-வது பிராஹ்மணம், 2-ம் மந்த்ரத்தையும், அதன்மேல் ஸ்ரீமத் சங்கராசார்யரவர்களின் பாஷ்யத்தையும் பார்க்க. பகவத்கீதை 8-ம் அத்தி., 6-ம் சுலோகமும், 2-ம் அத்தி. 72-ம் சுலோகமும் இங்கு கவநிக்கத் தக்கன. இதனால்தான், மரணகாலத்தில் பகவந் நாமத்தை உச்சரித்தலும் உபநிஷத் முதலான பாராயணங்களும் மரிக்கிறவன்காதில் படும்படியாக உச்சரிக்கின்றார்கள். அவைகளால் நல்ல சிந்தனை யுண்டாகி, அவன் அச்சிந்தனைக்குரிய நற்கதியை யடைதல் கூடும் என்பதாம்.

14. தே ஹ்லாதபரிதாபபலா:
புண்யாபுண்யஹேதுத்வாத் ॥

அவை (ஜாதி, ஆயுஸ், போகம்) சுக, துக்கங்களைப் பலனுக உடையன. ஏனெனில் அவைகளுக்கு (ஜாதி, ஆயுஸ், போகங்களுக்கு) புண்ணிய பாபகர்மங்கள் காரணமாக இருக்கின்றமையால்.

குறிப்பு:—புண்ணிய, பாபகர்மங்கள், ஜாதி, ஆயுஸ்களை உண்டு பண்ணுகின்றன. அவைகள் உண்டாகவே, கர்ம பலங்களான சுக துக்கங்களின் அநுபவம் ஏற்படுகின்றது. ஜாதி, ஆயுஸ்கள் விலக்கப்படுவதற்காக உபாயத்தைத் தெரிவிக்க இச்சூத்திரம் ஏற்பட்டிருக்கிறது.

15. பரிணாமதாபஸம்ஸ்காரது:கைர்குணவ்ருத்தி
விரோதாச்ச து:கமேவ ஸர்வம் விவேகின: ॥

விவேகியாகிய யோகிக்கு எல்லாம் (விஷயசுகமெல்லாம்) துக்கமாகவே இருக்கின்றன. ஏனெனில், (விருத்திகளின்) பரிணாமம் (அவைகள் நிகழுங்காலத்தில் உண்டாம்) தாபம், (பூர்வ) வாஸனைகள் துக்கமாகத் தோன்றுகின்றன, தவிரவும் குணங்களால் உண்டாகும் மநோவிருத்திகள் பரஸ்பர விரோதங்களாகவும் இருக்கின்றன.

குறிப்பு:— (1) துக்கத்தைக் கொடுக்கக் கூடிய ஜாதி, ஆயுஸ், முதலியவை தள்ளத்தக்கவையாயினும், சுகத்தைக் கொடுக்கக் கூடிய ஜாதி, ஆயுஸ்கள் தள்ளத்தக்கவையல்லவே என்ற வினவிற்கு இச்சூத்திரம் சமாதானம் சொல்லுகிறது. யோகிக்கு எல்லாம் துக்கமே.

(2) விஷயசுகம் அவித்தையாலேற்படுகிறது. சுகம் என்பது கர்மேந்திரியம், ஞானேந்திரியம், மநம் இவைகள் சலநமற்றிருப்பவடைதல். அதாவது அவைகள் திருப்தியடைதல். அத் திருப்தியில்லாமல் அவை சஞ்சலித்துக் கொண்டிருக்குமாகில் துக்கப் பிராப்தியேற்படுகிறது. விஷயசுகங்களை யநுபவிப்பதினுல் அவைகளின் ஆசை முடிவு பெருது, பெருகுவதாகும். தேள் கொட்டுமெனப் பயந்து ஸர்ப்பம் கடிக்கப் பெற்றாற்போல, விஷய சுகங்களின் போகத்தால் திருப்தி பெற்று அவைகளின் ஆசையைத் தொலைக்க கருதுகிறவனுவன், இன்னும் அதிக ஆசைபற்றியவனுகி அதி

கத் துக்கங்களுக்கு உள்ளாவான். விஷய சுகங்களை அடிக்கடி அநுபவிக்க, காமாக்னி விருத்தியடைகிறது. இச்சைகொண்ட விஷயம் கிடைக்காவிடில் துக்கமுண்டாகும். கிடைத்தாலும் அநுபவிக்க முடியாவிட்டாலும் துக்கமுண்டாகும். அநுபவித்தற்குத் தடை செய்பவர்களிடம் த்வேஷமுண்டாகும். தன்னிஷ்டப்படி விஷய சுகங்களை யநுபவிக்கிறதினாலும் வியாதிகள் நேரிடுவதாகும். இவை போன்று பரிணாமத்தின் துக்கம் நிகழும்.

விஷயசுகம் அநுபவிக்குங்காலத்தில், அது நீடித்திருக்கமாட்டாதே என்ற கவலையும், அதினால் என்ன கெடுதல் நேரிடுமோ என்ற கவலையும் இவை போன்று தாபத்தின் துக்கம் நிகழும்.

ஸகல துக்க அநுபவங்களினால் அவைகளின் வாஸனைகள் அமைகின்றன. அவை உண்மையில் யோகிக்கு துக்கமே.

இதனால் பகவான் கௌதம புத்தர் ஜன்மம் துக்கம், வியாதி துக்கம், ஜரை துக்கம், ஸகலமும் துக்கமென்று உபதேசித்தார்.

16. ஹேயம் து:கமநாகதம் ॥

**வரப்போகின்ற துக்கம் (பிரயத்தனத்தால்) தவிர்க்கத்தக்கது.**

குறிப்பு:—(1) வியாதி, வியாதியின் காரணம், அதை நிவிர்த்திக்கும் உபாயம், ஆரோக்கியம் இந்நான்கும் எவ்விதம் வைத்திய சாஸ்திரத்தில் விசாரிக்கப் படுகின்றனவோ, அவ்விதமே இந்த சாஸ்திரத்திலும் (ஹேயம்) தள்ளத்தக்கது இன்னது, அதன் காரணம், அதைத் தவிர்க்கிறதற்கு உண்டான உபாயம், பின்பு மோக்ஷம் என்பன விசாரிக்கத்தக்கவை. இந்த சூத்திரம் முதலாவதான ஹேயத்தைப்பற்றியது.

(2) மூன்று காலத்திலும், துக்கம் தள்ளத்தக்கதாக விருந்தாலும், இறந்தகாலத்தைப்பற்றிய துக்கம் அநுபவித்துச் சென்றமையாலும், நிகழ்காலத்தைப்பற்றிய துக்கம் அநுபவிக்கப்படுகின்றமையாலும், அவைகள் தள்ளுவதற்குச் சாத்தியமானவையல்ல. அதனால் வருங்காலத்தைப்பற்றிய துக்கம் மாத்திரம் தள்ளத்தக்கது என்று இச்சூத்திரம் அறிவிக்கிறது.

17। 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍃𑌦𑍃𑌶𑍍𑌯𑌯𑍋𑌃 𑌸𑌂𑌯𑍋𑌗𑍋 𑌹𑍇𑌯𑌹𑍇𑌤𑍁𑌃

புருஷனுக்கும் புத்திக்கும் உள்ள சம்பந்தமானது (ஹேய) துக்கத்திற்குக் காரணமாம்.

குறிப்பு:— (1) புருஷனிடத்திலிருக்கின்ற சைதந்நிய சக்தியானது புத்தியில் பிரவேசிக்கின்றதினுல், உதாஸீநனுன புருஷன் திரஷ்டா எனப்படுகின்ருன். திருச்யம் என்ருல், புத்தியில் தோன்றுகிற எல்லா விஷயங்களுமாம். புத்தியென்பது பிரதாநத்தின் அதி ஸூக்ஷ்மமான நிலைமை. மநஸ், சித்தம், அகங்காரம், புத்தி முதலியன பிரகிருதியின் பரிணுமங்கள்.

(2) புருஷன் ஹிருதயகுகையில் இருக்கிருன். அவன் ஸமீபத்திலிருக்கிறது புத்தி. அதனுல் புத்தியை மாத்திரம் புருஷன் அறியலாம். அதனுல் புத்தியைத் திருச்யம் எனச் சொல்லலாம். மற்றைய வஸ்துக்கள் புருஷனுடன் ஸாக்ஷாத் ஸம்பந்த மின்மையால், அவைகளைத் திருச்யம் என எப்படிச் சொல்லுதல் கூடும்? இதற்குச் சமாதாநம், புத்தியானது எல்லா விஷயங்களையும் இந்திரியங்கள் மூலமாய்க் கிரஹித்து, அவ்வவ்விஷயங்கள் ரூபமாகத் தன்னைப் பரிணமித்துக்கொள்ளுகின்றது. அத்தகைய புத்தியைப் புருஷன் சாக்ஷாத்கரிப்பதால், புத்தியில் பரிணுமமாக அமைந்திருக்கின்ற எல்லா விஷயங்களையும் புருஷன் அறிந்தவனுக ஆகின்ருன். அதனுல் எல்லா விஷயங்களும் திருச்யமாக ஏற்படுகின்றன.

(3) புருஷனிடமுள்ள சைதந்நிய சக்தியைப் புத்தி அடைவதாலும் புருஷனுக்கு அடுத்து சமீபத்தில் புத்தி இருக்கின்றமையாலும் இரண்டும் (புருஷனும் புத்தியும்) ஒன்றுபோலத் தோன்றுகின்றன. அயஸ்காந்தத்தைப்போல, புத்தியானது புருஷனிடமுள்ள சக்தியை ஆகர்ஷித்து, புருஷனும் தானும் அபேதமாகத் தோன்றுகிறது. இந்தஅபேதப் பிராந்தி தான் அவித்தை என்னப்படும். இது தான் துக்கத்திற்குக்காரணம். இப்பிராந்தியை விலக்குவதினுல் கைவல்லியம் ஏற்படும். முள் தனிமையாக இருந்தால் யாதொரு கெடுதியுமில்லை. அது காலில் தைத்தால் துக்கமுண்டாகிறது. அதைப் பிடுங்கி எறிந்தால் துக்கம் நீங்குகிறது. அதுபோல புத்திக்கும்

புருஷனுக்கும் ஏற்பட்டிருக்கிற ஸம்யோகம் நீங்கினால் துக்கம் நீங்குகிறது.

(4) புத்தியின் சத்துவத்தை, ரஜஸ்தமோ குணங்கள் மேல் போகவிடாமல் பாதிக்கின்றன. அவை யிரண்டையும் விலக்கி, சத்துவகுணம் மாத்திரம் மேலிடும்படி செய்தால், புத்தியானது புருஷஸாக்ஷாத்காரத்தைப் பெறுகிறது.

18. ப்ரகாஶக்ரியாஸ்திதிஶீலம் பூதேந்த்ரியாத்மகம்
போகாபவர்காா²ர்த²ம் த்³ருஶ்யம்॥

திருச்யம் என்பது பிரகாசம், கிரியை, இருத்தல், இவைகளை உடையதாகவும், பூதங்கள், இந்திரியங்கள் ரூபமாகவும், (புருஷனுக்கு) போக கைவல்லியங்களைக் கொடுக்கக் கூடியதாகவும், இருக்கிறது.

குறிப்பு:—திருச்யத்தின் ஸ்வரூபம் இந்த சூத்திரத்தில் சொல்லப்படுகிறது. பிரதானம் முதல் பௌதிகங்கள் வரை (ஸ்தாவர ஜங்கமங்கள் வரை) யுள்ள ஸமஸ்த பதார்த்தங்களும் திருச்யமெனப்படும். பிரகாசம், கிரியை, இருத்தல், என்பன முறையே சத்வ, ரஜஸ், தமோ குணங்களின் காரியமாம். குணங்கள் சூக்ஷ்மமாகவிருக்கின்றமையால், அவைகளைப் பிரஸ்தாபிக்காமல் அவைகளின் காரியங்கள் பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன.

பிரகாசம் ஸத்வகுணம் மேலிடுதல்.

கிரியை ரஜோகுணம் மேலிடுதல் சஞ்சலமாக இருத்தல்.

இருத்தல் மேற்கண்ட இரண்டும் இல்லாமல் மோக ரூபமாக இருத்தல்.

வஸ்துக்கள் குணங்களால் தாரதம்மியப்படுகின்றன. பிரதானமே பஞ்சதன்மாத்திரைகளாகவும், பூதங்களாகவும் கர்மேந்திரிய ஞானேந்திரியங்களாகவும் புத்தி, சித்தம், மனஸ், அகங்காரங்களாகவும் பரிணமிக்கின்றது. போகம் அபவர்க்கம், விஷய நுகர்ச்சி, வீடு அல்லது கைவல்லியம் இவைகளைப் புருஷனுக்குக் கொடுக்கிறவைகளாக மேற்கண்ட பிரதானத்தின் பரிணமங்களிருக்கின்றன.

சைவ ஸித்தாந்தத்தில் சொல்லுகிறபடி தநு, கரண, புவந, போகங்கள், புருஷன் மேன் மேலும் சித்த சுத்தி பெற்றுக் கடைமுறையில் வீடுபெற ஏற்பட்டிருக்கின்றன.

திருச்யம் அல்லது பிரபஞ்சத்தின் பிரயோஜநம் யாது? புருஷன் அநுபவம் பெறுதலின் பொருட்டாம். புருஷன் தன் இயற்கை நிலைமையின் அருமையையும் பெருமையையும் மறந்தான். ஒரு கதை—இந்திரன் ஒரு காலத்தில் பன்றியாக ஆயினான்; தன் பெட்டைப்பன்றியுடனும், குட்டிகளான பரிவாரங்களுடனும் உல்லாசமாகவும் சந்தோஷமாகவும் காலங்கழித்தான். தேவர்கள் இந்திரனின் நிலையைக்கண்டு வியஸநமுற்று "ஓ! பன்றியே! நீவிர் இந்திரனாவீர். நீவிர் பன்றியாக உழலுவானேன் என்று வினவ, இந்திரனான பன்றி சொன்னதாவது:—"நான் இந்நிலையிலேயே இருக்கட்டும். இது எனக்குச் சுகமாக இருக்கின்றது. தேவலோகம் எனக்கு வேண்டாம்." இதைக் கேட்ட தேவர்கள் வியப்புற்று இன்னவிதம் செய்தால் இந்நிலையைவிட்டு இந்திரன் திரும்புவார் எனத் தெரியாமல் திகைப்புற்றார்கள். பின்பு ஒன்றொன்றாய்ப் பன்றிக்குட்டிகளை அவர்கள் கொல்ல ஆரம்பித்தார்கள். கடைசியில் பெண் பன்றியையும் கொன்றார்கள். எல்லாப் பன்றிக்குட்டிகளும் தன் இணை பிரியாத பெட்டைப்பன்றியும் இறந்தமேல் பன்றி ரூபமான இந்திரன் மிக வியஸநமுற்று 'கோ!' என்று கதறி அழுகவே, தேவர்கள் அப்பன்றி சரீரத்தை வெட்டிப் பிளந்தார்கள். அதனின்று திடீரென்று இந்திரன் வெளிவந்து, இது என்ன கனவு! என்று சிரித்தான். இவ்விதம் புருஷன் பிரகிருதியுடன் ஸம்பந்தித்து, அபேதநினைவுகொள்ளுகிறான். தேஹோஹம் என்ற பாவனை பெறுகிறான். தன்னுடைய உண்மை நிலையை மறக்கிறான். புருஷனான ஆத்துமா உண்மையில் சுத்தனாகவும் அஸங்கனாகவும் இருக்கிறான். பிரபஞ்சமாகிய திருச்யத்துடன் புருஷன் சம்பந்தம் பெறுகிறதனால், சுக துக்கங்களுக்குட்பட்டவன்போலக் காணப்படுகிறான். இச்சம்பந்தத்தை அநுபவத்தினால் விலக்கிக்கொள்ளுதலின் பொருட்டு யோகசாஸ்திரம் பிரவிர்த்தித்தது (இது விவேகாநந்தர் சொல்லியது).

19. 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌿 𑌗𑍁𑌣𑌪𑌰𑍍𑌵𑌾𑌣𑌿 ॥

விசேஷங்கள், அவிசேஷங்கள், லிங்கம், அலிங்கம், இவை(சத்வ, ரஜஸ், தமஸ்) என்ற குணங்களின் பரிணமங்கள்.

குறிப்பு:—(1) விசேஷங்களாவன, பிருதிவி, அப்பு, தேஜஸ், வாயு, ஆகாயம் என்ற 5 மஹா பூதங்களும், 5 கர்மேந்திரியங்களும், 5 ஞானேந்திரியங்களும், மநம் 1, ஆக 16, இவை எப்போதும் மாறி மாறிக்கொண்டிருக்கின்றமையால் லாங்கிய சாஸ்திரத்தில், விகாரங்கள் எனப் பெயர் பெறும். இவை 16ம் காரியங்களே அல்லாமல் காரணமல்ல

(2) அவிசேஷங்களாவன பஞ்சதந்மாத்திரைகள், அகங்கார தத்துவம் ஆக 6 இவை புத்தி (மஹத்தத்துவத்தின்) யின்காரியங்களாயும், மேற்கண்ட 16 விசேஷங்களுக்குக் காரணமாகவும் இருக்கின்றன. இவை புத்தியின் காரியமாக இருக்கின்றமையால் விகிருதி என்றும், விசேஷங்களுக்குக் காரணமாக இருக்கின்றமையால் பிரகிருதி என்றும், இரண்டு தன்மைகளை உத்தேசித்து பிரகிருதி விகிருதி என்றும் பெயர் பெறும்.

(3) லிங்கம், மஹத்தத்துவம்: மூலப்பிரகிருதியான அலிங்கத்தில் இது லயமடைவதால், இது லிங்கமெனப் பெயர் பெறும்,

(4) அலிங்கம், மூலப் பிரகிருதி, இது லயம் அடையக்கூடியது, பிறிதொன்றுமில்லை. அதனால் இது அலிங்கமென்னப்படும். இது குணங்களுக்குள் தாரதம்மியமில்லாத ஸாம்யாவஸ்தை.

விசேஷங்கள் 16, அவிசேஷங்கள் 6, மஹத்தத்துவம் 1, மூலப்பிரகிருதி 1, ஆக தத்துவங்கள் 24, புருஷன் உள்பட 25.

20. 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌾 𑌦𑍃𑌶𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌃 𑌶𑍁𑌦𑍍𑌧𑍋𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌃 ॥

பார்க்கிறவன் (புருஷன்) அறிவை (ஞானத்தை) ஸ்வரூபமாக உடையவன் சுத்தன், அதாவது பரிணமமில்லாதவன். ஆயினும் புத்தி விருத்தியை அநுசரித்து விஷயங்களைக் கிரஹிக்கிறன்.

குறிப்பு:—(1) புருஷன் சுத்தனுய் இருப்பினும், புத்தியின் விருத்தி விசேஷங்களில் பிரதிபிம்பிக்கின்றமையால், புத்தியின் சல

ங்கள் புருஷனுடையவையாக நினைக்கப்படுகின்றன.

(2) புருஷன், சேதநன். புத்தி, அசேதநம். புத்திக்குப் பல சாமக்கிரியைகள் வேண்டும். அவையாவன, இந்திரியங்கள், விஷயங்கள் முதலியன.

(3) புருஷன் ஸ்வார்த்தன், புத்தி பரார்த்தம், சைதந்நியமே புருஷன்.

21. 𑌤𑌦𑌰𑍍𑌥 𑌏𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌾 ॥

திருச்ய வஸ்துவின் ஸ்வரூபம் (இருத்தலானது) அவனுடைய (புருஷனுடைய) பிரயோஜநத்திற்காகவாம்.

குறிப்பு:—(1) திருச்யம், அதாவது வஸ்துக்களானவை காரியம், காரணம், கரணம், என குணத்திரயங்களாக இருக்கின்றன. அவை புருஷனின் போகத்தின் பொருட்டும், மோக்ஷத்தின் பொருட்டுமாம். பிருஹதாரண்ணியக உபநிஷத்தின் மைத்திரேயி பிராஹ்மணத்தில்

" 𑌆𑌤𑍍𑌮𑌨𑌸𑍍𑌤𑍁 𑌕𑌾𑌮𑌾𑌯 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌭𑌵𑌤𑌿 "

என்பது இவ்விஷயத்தையே உபதேசிக்கின்றது.

(2) திருச்ய வஸ்துக்களுக்கு அழிவு உண்டு. புருஷனுக்கு அழிவில்லை.

(3) அத்வைத வேதாந்திகளின் அபிப்பிராயத்தில், பிரஹ்மமே பிரபஞ்சஸ்வரூபமாகத் தோன்றுகிறது என்பதாம். சாங்கிய யோகிகள் மதத்தில் புருஷனும் பிரபஞ்சமும் வேறாக இருப்பினும், புருஷனுடைய சம்பந்தமின்றி பிரபஞ்சம் (ஸத்) இருத்தலைப் பெறுதலின்றாம்.

22. 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌨𑌷𑍍𑌟𑌮𑌪𑍍𑌯𑌨𑌷𑍍𑌟𑌂
𑌤𑌦𑌨𑍍𑌯𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ॥

போகம், அபவர்க்கம் இரண்டையும் அடைந்தபுருஷனை (முக்தனை) உத்தேசிக்க, பிரதாநம் நாசமுற்றாலும், அது முக்தனுக்கும் மற்றவர்களுக்கும் பொதுவாயுள்ளமையால், (அம் மற்றவர்களை உத்தேசிக்க) நாசமுறுகிறதில்லை.

குறிப்பு:—(1) யோகிகள் மதத்தில் புருஷர்கள் பலர். அதனால் ஒருவன் முக்தி பெறுவதினால், பிரதாநம் அவனைக் குறித்து நாசமடைந்தாலும், மற்றவர்களுக்கு நாசமடைகிறதில்லை. வேதாந்திகள் மதத்தில், புருஷன் ஒருவனே ஆயினும், புருஷன் பிரதிபிம்பிக்கின்ற உபாதிகள் பலவாறாக இருக்கின்றமையால், உபாதிகள் நாசமுறும் வரையில் ஸம்ஸார பந்தம் உண்டு.

(2) பிரதாநம் ஒன்று, புருஷர்கள் பலர். இது ஸாங்கிய யோகிகளின் ஸித்தாந்தம். அடியிற்கண்ட மந்திரம் இங்கு கவனிக்கத்தக்கது.

“ அஜாமேகாம்லோஹிதஶுக்லக்ருஷ்ணாம்
பஹ்வீ:ப்ரஜாஸ்ஸ்ருஜமாநாம்ஸரூபா:”

ஶ்வேதாஶ்வதரோபநிஷத்

புருஷார்த்தம் பெற்றவனுக்குப் பிரதாநம் இல்லை. புருஷார்த்தம் பெறாதவனுக்கு, பிரதாநமானது, மஹதாதிரூபமாகப் பரிணமித்து, ஸம்ஸாரத்தை யுண்டுபண்ணுகிறது. இதனால் ஒருவன் முக்திபெற மற்றவர்களுக்கு இராதும் என்பது ஸித்தாந்தம் பெறுகிறது.

23. ஸ்வஸ்வாமிஶக்த்யோ: ஸ்வரூபோபலப்திஹேது: ஸம்யோக: ॥

திருச்யம், திரஷ்டா, இவ்விரண்டின் சக்திகளின் சம்பந்தமானது ஸ்வரூபத்தை அடைதலுக்குக் காரணமாம்.

குறிப்பு:—(1) ஸ்வம், திருச்யம் அதன் சக்தி என்றால், ஜடத்தன்மை. பார்க்கத்தகுந்ததாக இருத்தல் புத்திமுதல் பிருதிவி கடையில் உள்ள யாவற்றும் திருச்யமாம். ஸ்வாமி என்றால் (ஸ்வத்தை) உடையவன், அதாவது புருஷன், புத்தி (அந்தக் கரணம்), விஷயங்கள் (திருச்யங்கள்) இருக்கின்றன. புத்தி இந்திரியங்களுடன் சேர்ந்து வெளிநோக்கி விஷயங்களைக் கிரஹிக்க, போகங்கள் உண்டாகின்றன. அதனால் பந்தம் ஏற்படுகிறது. புத்தி, இந்திரியங்களின் சம்பந்தத்தைத் தவிர்த்துப் புருஷனை அறிதல் அபவர்க்கம் எனப்படும். அதுவே கைவல்லியமாம். இவ்விதம் யோகிஞான

வன் கைவல்லிய நிலையைப் பெறவே, பிரதாநம் இவனுக்கு, முன் சூத்திரத்தில் சொல்லியபடி நாசத்தை அடைகிறது.

(2) கடோபநிஷத்திலுள்ள அடியில்வரும் மந்திரம் இந்த சூத்திரத்தை விளக்குகின்றது.

ஆத்மேந்த்ரியமநோயுக்தம்।
போக்தேத்யாஹுர்மநீஷிண: ॥

இதன் பொருள்: இந்திரியங்கள், மநம், இவைகளுடன் புருஷன் சேருங்கால், போக்தா என்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள்.

விமுக்தஶ்ச விமுச்யதே ॥

என்ற வசநத்தினால், இவைகளைவிட்ட புருஷன் முக்தனுகிறான் என்று சொல்லப்படுகிறது.

(3) ஸம்யோகம் என்பது முன் 1-வது குறிப்பில் கண்டபடி புத்தியின் மூலமாய் விஷயங்களுடன் சம்பந்தித்தலும் விஷயங்களைத் தவிர்த்து புத்தி புருஷனை ஸாக்ஷாத்கரித்தலுமாம். பிரகிருதி புருஷ ஸம்யோகத்தின் முடிவான பிரயோஜநம் யாதெனில், புத்தி முதலில் விஷயங்களுடன் சம்பந்தம்பெற்று, விஷய நுகர்ச்சியின் துக்கத்தை அநுபவத்தால் அறிந்து அவைகளைச் சிறுகச் சிறுகத் தவிர்த்து, வெளிநோக்கியதான புத்தி பின்பு அந்தர் முகப்பட்டு ஆத்ம விஷயங்களில் பயின்று, கடைமுறையில் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறுதலுக்கேயாம். ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறவே, பிரகிருதி புருஷவிவேகம் ஏற்படும். ஞாநம், அதாவது புருஷதர்சநம் பிரகிருதி புருஷ வியோகத்திற்குக் காரணமாம். அதர்சநம் (அவித்தை) பிரகிருதி புருஷ ஸம்யோகத்திற்குக் காரணமாம். அவித்தை என்ற திரைநீங்கவே, ஸ்வதஸ்ஸித்தமான கைவல்லியம் ஸித்திக்கிறது. இந்த தாத்பரியத்தைக் கீதையின் முடிவில் அர்ஜுநன் சொல்லியிருக்கிறார்:—

"நஷ்டோ மோஹஸ்ஸ்ம்ருதிர்லப்தா"

இதன்பொருள் "மயக்கம் தீர்ந்தது. முன்னிருந்த ஞாநத்தைத் திரும்பப் பெற்றேன். இதில் ஸ்ம்ருதி என்ற வார்த்தையா

னது கவநிக்கத்தக்கது. ஸ்மிருதி=முன்னினைவு. அதாவது எப்பொழுதும் ஜீவாத்மாவானவன் ஸர்வஞ்ஞன்; மயக்கத்தினால் அறியாதவன் போலிருக்கிறான். மயக்கம் நீங்கவே ஸ்வாபாவிகமான ஞாநம் வெளிப்படுகிறது.

24. 𑌤𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍁𑌰𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 ॥

அதற்கு (பிரகிருதி புருஷ ஸம்யோகத்திற்கு)க் காரணம் அவித்தையாம்.

குறிப்பு:—முன் ஸூத்திரத்தில் ஸம்யோகத்தின் ஸ்வரூபம், காரியம், இரண்டும் சொல்லப்பட்டன. இந்த ஸூத்திரத்தில் அதன் காரணம் சொல்லப்படுகிறது.

அவித்தை (பிராந்திஞானத்தினால் உண்டாகிற வாஸனை) ஸம்யோகத்திற்குக் காரணம். திரஷ்டாவையும், திருச்யத்தையும் ஒன்றுபடுத்தி, நான் என நினைத்தல் பிராந்தி. அந்த பிராந்தி வாஸனையுடன் கூடிய மநமானது பிரளய காலத்தில் பிரதாநத்தில் லயத்தை அடைந்து ஸ்ருஷ்டிகாலத்தில் அந்த பிராந்தி வாஸனையுடன் வெளிவருகிறது. இத்தன்மையான மநஸ்ஸினால் தான் பந்தம் உண்டாகிறது. அதனால் அநாத்மாவில் ஆத்மாவை நினைத்தும், நான் எனது என்ற பாவனைகளை ஜீவன் விருத்தி செய்கிறான்.

25. 𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌭𑌾𑌵𑍋 𑌹𑌾𑌨𑌂
𑌤𑌦𑍍𑌦𑍃𑌶𑍇𑌃 𑌕𑍈𑌵𑌲𑍍𑌯𑌂 ॥

அது (அவித்தை) இல்லாமல் போதலினால் (முன் சொல்லிய) புத்தி, புருஷன் இரண்டின் ஸம்யோகம் அற்றுப்போகின்றது. (இதற்கு) ஹாநம் என்று பெயர். அதுவே (இந்த ஹாநம் நிகழ்தல்) சைதந்நிய ஸ்வரூபியாகிய புருஷனுக்குக் கைவல்லியமாம்.

குறிப்பு:—முன்னர் தள்ளத்தக்கதான துக்கம் இன்னதென்றும் துக்க காரணம் இன்னதென்றும், நிரூபணம் செய்து ஹாநம் (விடுதல்) என்பது இன்னது என்று இச்ஸூத்திரத்தில் வியவஹரிக்கிறார். பந்த நிவிர்த்தி ஏற்பட்டால் ஸ்வதஸ்ஸித்தமான புருஷ ஸ்வரூபம் வெளியாகிறது என முன் சொல்லியபடி, இப்போதும் அவித்தை நீங்கவே, புருஷஸ்வரூபம் ஸித்திக்கிறதென்று இச்ஸூத்திரத்தில் சொல்லப்படுகிறது.

26. 𑌵𑌿𑌵𑍇𑌕𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌰𑌵𑌿𑌪𑍍𑌲𑌵𑌾 𑌹𑌾𑌨𑍋𑌪𑌾𑌯𑌃 ॥

ஸ்திரமான விவேகஞாநம் முன் சொல்லிய ஹாநம் பெறுதலுக்குச் சாதநமாம்.

குறிப்பு:-(1) விவேகம், திரஷ்டாவான புருஷன் வேறு, திருச்யமாகிய புத்தி முதலிய பிரபஞ்சம் வேறு, என ஆராய்தல். ஞாநம், அதை அறிதல். விப்லவம் என்றால் மித்தியா ஞாநம்.

(2) முதலில் சாஸ்திரஞாநத்தால் விவேக ஞாநமானது சாதாரணமாய் உண்டாகிறது. அஃது அநுபவமில்லாமல் பரோக்ஷ ஞாநம் ஏற்படுகிறது. பின்பு மநநத்தினால் அந்த சாஸ்திரஞாநம் திடப்பட்டும், விஷயங்களில் மநத்திற்கு வைராக்கியம் உண்டாகியும், அதனால் மநஸ் ஆனது அந்தர்முகப்பட்டு, புருஷனையே நிரந்தரமாகத் தியாகித்து, மநஸ் ஆனது புருஷ ஸ்வரூபத்தைப் பெறுகிறது. இதைத்தான் அவிப்லவ* என்ற பதம் விவரிக்கிறது.

27. 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌪𑍍𑌤𑌧𑌾 𑌪𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌭𑍂𑌮𑌿𑌃 𑌪𑍍𑌰𑌜𑍍𑌞𑌾 ॥

அவனுடைய (அந்த யோகியினுடைய) பிரஞ்ஞையானது கடைமுறையில் ஏழு படிகளை உடையது.

குறிப்பு:—(1) ஸ்திரமான விவேகத்தையுடைய யோகியின் பிரஞ்ஞைக்கு ஏழு படிகள் உள்ளன.

i. அறியவேண்டியவை அறியப்பட்டன. இனி அறியவேண்டியவை ஒன்றுமில்லை. இந்த பூமியில் ஸர்வ ஸம்சயங்களும் நிவிர்த்தி அடைகின்றன. தன்னை அறியவேண்டுமென்ற விருப்பம் மாத்திரம் உள்ளது.

ii. பந்தத்திற்குக் காரணமான கிலேசங்கள் எல்லாம் நாசம் பண்ணப்பெற்றன. ஸர்வதுக்கங்களும் நிவிர்த்தி யடைகின்றன.

iii. இனி அடையவேண்டியவை ஒன்றுமில்லை. ஸர்வ காமப் பிராப்தி உண்டாகின்றது. இப்போது இவனுக்கு ஆப்தகாமன்

*"சாத்திரம் ஓதும் சதுர்களை விட்டுநீர்
மாத்திரைப் போது மறித்துள்ளே நோக்குமின்" என்ற
திருமூலர்வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

என்று பெயர். 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌕𑌾𑌰𑍋𑌨𑍁𑌸𑌹 என்ற தைத்தரீய வசநம் இங்கு கவனிக்கத்தக்கது.

iv. இனிச் செய்யவேண்டியவை ஒன்றுமில்லை. நான் கிருத கிருத்தியன் என்ற ஞாநம் உண்டாகிறது.

v. ஸர்வ கார்யநிவிர்த்தி ஏற்படுகிறது. புத்தியானது நிர்மலமாகி சோக நிவிர்த்தியைப் பெறுகிறது.

vi. ஆறும்படியில் புத்திக்கே காரணமான குணங்கள் இவனை விட்டு நழுவிப் பிரதாநத்தில் லயமடைகின்றன. புத்தியும் சூக்ஷம் பெறுகிறது. இதில் "அபயம்" என்று உபநிஷத்துக்களில் சொல்லப்பெறும் நிலை ஏற்படுகிறது.

vii. இதில் புருஷன் தனிமையாக இருக்கிறான். எல்லா ஸம்பந்தங்களும் விலகி, கேவலனாக இருக்கிறான். இதுவே கைவல்விய நிலை.

(2) முதல் நான்கு படிகளில் கார்யங்களினின்று கிரமமாக விடுதலையும் ஐந்தாம் ஆறும் படிகளில் காரணங்களினின்று விடுதலையும் ஏற்படுகின்றன. ஏழாம்படியில், ஸ்வரூபமாத்திரமாக புருஷன் இருத்தலும் ஏற்படுகிறது.

(3) மேற்கண்ட ஏழு படிகளும் உபநிஷத்துக்களில் அடியில் வருமாறு சொல்லப்படுகின்றன:—

i. 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌃 𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃
𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 ॥

இதன் பொருள்: காரணரூபத்தால் பரமாயும், காரிய ரூபத்தால் அபரமாயுமிருக்கின்ற அந்த பரமாத்மாவை ஒருவன் பார்ப்பானாகில், ஹிருதயத்தின் கண்ணுள்ள அவித்யா வாஸநாமயமான பந்தங்கள் பேதிக்கப்பெற்று விட்டுப்போகின்றன. ஸமஸ்தமான ஸம்சயங்களும் நாசமுறுகின்றன. இந்த ஞாநியின் ஆகாமி, ஸஞ்சித கர்மங்களும் நசிக்கின்றன.

ii. ஏதꣳ ஹ வாவ ந தபதி।
கிமஹꣳ ஸாது நாகரவம்।
கிமஹꣳ பாபமகரவமிதி।—தைத்தரீயோபநிஷத்.

இதன் பொருள்: நான் ஏதோ காரணத்தால் சுபகர்மத்தைச் செய்யாமற் போனேனே, ஏதோ காரணத்தால் பாபகர்மத்தைச் செய்தேனே என்ற தாபத்தால் அந்த ஞானியானவன் தபிக்கப்பெறுகிறானில்லை.

iii. ஸோऽஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ।
ப்ரஹ்மணா விபஶ்சிதேதி॥—தைத்தரீயோபநிஷத்.

இதன் பொருள்: அந்த ஞானி, பிரஹ்மமாக இருந்து, ஒரே காலத்தில் எல்லாக் காமங்களையும் அடைகிறான்.

iv. ஆத்மாநஞ்சேத்விஜாநீயாதயமஸ்மீதி பூருஷ:।
கிமிச்சந்கஸ்ய காமாய ஶரீரமநுஸஞ்ஜ்வரேத்॥
பிருஹதாரண்யகோபநிஷத்.

இதன் பொருள்: ஒருவன் தன் ஸ்வரூபமின்னதென்று அறிவானாகில், அவன் செய்யவேண்டிய காரியம் என்ன? அவன் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை, என்றபடி.

v. தத்ர கோ மோஹ: க: ஶோக ஏகத்வமநுபஶ்யத:॥

இதன் பொருள்: எங்கும் ஆத்மா ஒன்றையே பார்க்கிறவனுக்கு மோஹம் எது? சோகம் எது?

vi. யதா ஹ்யேவைஷ ஏதஸ்மிந்நத்ருஶ்யேऽ
நாத்ம்யேऽநிருக்தேऽநிலயநேऽபயம் ப்ரதிஷ்டாம் விந்ததே॥
தைத்தரீயோபநிஷத்.

அபயம் வை ஜநக ப்ராப்தோஸி।
பிருஹதாரண்யகோபநிஷத்.

இவை இரண்டின் சேர்ந்த பொருள்: ஆத்மாவை அறிந்தவன் பயமற்ற நிலையைப் பெறுவான்.

vii 𑌸𑌤𑍍𑌯𑌂𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌨𑌨𑍍𑌤𑌂𑌬𑍍𑌰𑌹𑍍𑌮।
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌭𑌵𑌤𑌿॥—தைத்ரீயோபநிஷத்.

இதன் பொருள்: பிரஹ்மமானது ஸத்ரூபமாயும், சித்ரூபமாயும், ப்ரிச்சேதமில்லாததாயும் இருக்கிறது. பிரஹ்மத்தை அறிந்தவன் பிரஹ்மமாகவே ஆகிறான்.

28। 𑌯𑍋𑌗𑌾𑌂𑌗𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌾𑌦𑌶𑍁𑌦𑍍𑌧𑌿𑌕𑍍𑌷𑌯𑍇
𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍀𑌪𑍍𑌤𑌿𑌰𑌾 𑌵𑌿𑌵𑍇𑌕𑌖𑍍𑌯𑌾𑌤𑍇𑌃॥

யோகாங்கங்களை அநுஷ்டிப்பதினால், மநத்தின் மலம். குறையக் குறைய, புருஷஸாக்ஷாத்காரம் வரையில், ஞாநப்பிரகாசமானது மேன் மேலும் உண்டாகிறது.

குறிப்பு:—ஐந்து வகையாயுள்ள (அவித்தை, அஸ்மிதை,ராகம், துவேஷம், அபிநிவேசம்)விபரியயஞாநம் யோகாங்கங்களான யமம், நியமம், முதலியவைகளைச் சரியாய் அப்பியஸிப்பதினால் குறைவு படுகிறது. அதன் முடிவில் புருஷதர்சநம் ஏற்படுகிறது. யோகாங் கங்களை அநுஷ்டித்தால் பிரகிருதி புருஷ விவேகஞாநம் தானே உண்டாகின்றது. அவ்வநுஷ்டாநத்தால் மநமலம் நீங்கவே, ஸ்வத ஸ்ஸித்தமான புருஷனின் ஸாக்ஷாத்காரம் ஏற்படுகிறது.

29. 𑌯𑌮𑌨𑌿𑌯𑌮𑌾𑌸𑌨𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌯𑌾𑌮𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌧𑌾𑌰𑌣𑌾𑌧𑍍𑌯𑌾𑌨
𑌸𑌮𑌾𑌧𑌯𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌵𑌂𑌗𑌾𑌨𑌿॥

யமம், நியமம், ஆஸநம், பிராணுயாமம், பிரத்தியாஹாரம், தாரணை தியாநம், ஸமாதி என்பன யோகமுறையின் எட்டு அங்கங்களாம்.*

குறிப்பு:—(1) இதில் சொல்லப்பட்டிருக்கிற வரிசையில் முன்னதை அப்பியஸிக்காமல், பின்னதை மாத்திரம் அப்பியஸித்தால் பிரயோஜநமின்று. உதாரணமாக யமம் மாத்திரம் தனித்து

* இயம நியமமே யெண்ணிலா வாதன
நயமுறு பிராணுயாமம் ப்ரத்தியாகாரஞ்
சயமிகு தாரணை தியானஞ் சமாதி
யயமுறு மட்டாங்க மாவது மாமே.—திருமந்திரம்.

அப்பியஸிக்கலாம். யமம் இன்றி, நியமம் முதலியவற்றை அப்பியஸித்தால் பிரயோஜநமுண்டாகாது. அப்படியே யமம், நியமம் இன்றி ஆஸநம் மாத்திரம் பிரயோஜநமின்றாம். அப்படியே பின்னுள்ளவைகளைப்பற்றியும் அறிந்துகொள்க.

(2) முதல் பாதத்தில் பிரஸ்தாபித்துள்ள அப்பியாஸம், வைராக்கியம், வீரியம் முதலியவை யமம் முதலியவைகளுள் அடங்கும். அப்படியே வேதாந்திகள் சொல்லுகிற விவேகம், வைராக்கியம், ஷட்ஸம்பத்தி, முமுக்ஷுத்துவம் இவைகளும் யமம் முதலியவைகளுள் அடங்கும்.

30. 𑌅𑌹𑌿𑌂𑌸𑌾𑌸𑌤𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍇𑌯𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌾𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌾 𑌯𑌮𑌾𑌃॥

அஹிம்ஸை, சத்தியம், களவின்மை, இந்திரியநிக்கிரஹம், திரவிய அபேக்ஷயின்மை, இவை யமத்தின் ஸ்வரூபங்களாம்*

குறிப்பு:—அஹிம்ஸை: மநம், வாக்கு, காயத்தால் எவ்விதத்தாலும், எக்காலத்திலும், எப்பிராணிக்கும் ஹிம்ஸை செய்யாதிருத்தல். சத்திய முதலான மற்றையவை அஹிம்ஸை என்ற தர்மத்தைச் சுத்தம்செய்வதற்கும், பூர்த்திபெறச் செய்வதற்கும் ஏற்பட்டஸாதநங்கள். அஹிம்ஸை என்ற தர்மத்தைப் பரிபாலிக்காமல் மற்றைய தர்மங்களை அநுஷ்டித்தல் பிரயோஜநமில்லை. அஹிம்ஸை என்ற தர்மம் மற்றைய தர்மங்களின் அநுஷ்டாநமின்றி பூர்த்திபெறுதாகையால், அவைகள் முக்கிய ஸாதநங்களாம்.

ஸத்தியம்:—பிறர் நன்மையின் பொருட்டு, பிரமாணங்களால் கிரகித்து, மநத்தால் நினைத்தபடி வாக்கினால் சொல்லுதல். இதைக் கேட்கிறவன் உள்ளபடி கிரகிக்கும்படியாகச் சொல்லவேண்டும். வஞ்சகமும் கபடமுமுள்ளதாயும், கேட்கிறவன் உள்ளபடி அறியாமலிருக்கும்படியாகவும் மொழிதல் சத்தியமன்று. உண்மையாயிருப்பினும், பிராணிகளுக்கு நன்மை பயக்கக்கூடிய மொழி

---

*கொல்லான் பொய்கூறான் களவிலா னெண்குண
னல்லா னடக்க முடையா னடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காம
மில்லா னியமத் திடையினின் றானே.—திருமந்திரம்.

மாத்திரம் சத்தியமாகும். உண்மையாயிருப்பினும் தீமைபயக்கக் கூடியவை அசத்தியமேயாகும். ஒருகால் நன்மை உண்டுபண்ணக் கூடியதான பொய்யும் சத்தியத்தின் பெருமையைப் பெறும்.

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்."

என்ற குறள் இங்கு கவனிக்கத் தக்கது.

மநுவின் வசநம் இதுவாம்.

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍
𑌨 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 𑌸𑌤𑍍𑌯𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑌂
𑌪𑍍𑌰𑌿𑌯𑌂 𑌚 𑌨𑌾𑌨𑍃𑌤𑌂 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍॥

இதன் பொருள்: உண்மைபேசு, அது பிரியகரமாக இருத்தல் வேண்டும். உண்மையான வார்த்தையாயினும், பிரியமின்றேல், அதைச் சொல்லுதலைத் தவிர். பிரியமானதென்று பொய்யைப் பேசாதே.

களவின்மை:—பலாத்காரமாகவாவது, இரஹஸ்யமாகவாவது, பிறர் பொருளை அபஹரிக்காமல் இருத்தலும், அத்தன்மையாண சிந்தனையைத் தவிர்த்தலும், இந்திரிய நிக்கிரஹம் அல்லது பிரஹ்மசர்யம், ஸ்திரீகள் பற்றிய காமனைகளைத் தவிர்த்தலுமாகிய இவையே களவின்மையாம். ஸ்திரீகள் பற்றிய காமனைகள்: இது 9 விதமான அங்கங்களையுடையன. (1) ராகத்துடன் ஸ்திரீகளைப் பார்த்தல் (2) ஸ்பரிசித்தல், (3) அவர்கள் வார்த்தைகளைக் கேட்டல், (4) அவர்களைச் சிந்தித்தல், (5) அவர்களைப்பற்றிப் பேசுதல், (6) அவர்களுடன் விளையாடல், (7) அவர்களுடன் பேசுதல், (8) அவர்களைப்பற்றி ஸங்கற்பித்தல், (9) அவர்களுடன் ஸம்ஸர்க்கம் செய்தல் என்பவைகளாம்.

பிரஹ்மசர்யம்:—பிரஹ்ம = வேதத்தை உத்தேசித்து, சர்யம் = நியமங்களை அநுஷ்டித்தல். வேதாத்தியயநம் செய்தலுக்கு, இந்திரிய நிக்கிரஹம் முக்கியமானதால், பிரஹ்மசர்யம் என்ற பெயர் இந்திரிய நிக்கிரஹத்திற்கு ஏற்பட்டுவிட்டது.

திரவிய அபேக்ஷை இன்மை:—சரீர யாத்திரைக்கு இன்றியமையாதவைகளைத் தவிர மற்ற விஷயங்களில் பிரவிர்த்தியில்லாமலிருத்தல் என்பது இதன் முக்கிய கருத்து. சொத்தைச் சம்பாதித்தல், அதைப் பேணுதல், அதற்காகப் பிறரை ஹிம்ஸித்தல் இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

31. 𑌜𑌾𑌤𑌿𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌸𑌮𑌯𑌾𑌨𑌵𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌾𑌃
𑌸𑌾𑌰𑍍𑌵𑌭𑍌𑌮𑌾 𑌮𑌹𑌾𑌵𑍍𑌰𑌤𑌮𑍍॥

ஜாதி, தேசம், காலம், ஸமயம் இவைகளின் வரம்புக்குட்படாமல், யோகத்தின் எல்லாப் பூமிகளிலும், யமம் என்ற விரதமானது அநுஷ்டிக்கத்தக்கது. இதைப் பூர்ணமாக அநுஷ்டித்தல் மஹாவிரதமெனப்படும்.

குறிப்பு:—உதாரணமாக, மீன் பிடிக்கிறவன் மீனைமாத்திரம் ஹிம்ஸித்தல் கூடும் என்று சொன்னாலும், மற்றவைகளைத் தவிர்த்தல்—ஜாதி.

கோவில் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களில் ஹிம்ஸித்தலை விலக்கல்—தேசம்.

அமாவாஸ்யை முதலிய பருவகாலங்களில் தவிர்த்தல்—காலம்.

சிராத்தம் முதலியவைகளில் தவிர்த்தல்—ஸமயம்.

இப்படியே சத்தியம் முதலிய யமங்களையும் சேர்த்து ஆராய்ந்து கொள்ளுக.

32. 𑌶𑍌𑌚𑌸𑌨𑍍𑌤𑍋𑌷𑌤𑌪𑌃𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾
𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑌪𑍍𑌰𑌣𑌿𑌧𑌾𑌨𑌾𑌨𑌿 𑌨𑌿𑌯𑌮𑌾𑌃॥

பரிசுத்தம் செய்துகொள்ளுதல், ஸந்தோஷம், (தபஸ்) துவந்தங்களைச் சகித்தல், (ஸ்வாத்தியாயம்) யோகஸித்திக்கநுகூலமான மந்திரங்

களை ஜபித்தல், (ஈசுவரப் பிரணிதானம்)எல்லாக் கர்மங்களையும் ஈசுவரனிடம் அர்ப்பணம் செய்தல், நியமமாம்.*

குறிப்பு:—பரிசுத்தம் செய்துகொள்ளுதல் இருவகைத்து. ஒன்று பாஹ்ய சௌசம், ஜல முதலியவைகளால் ஸ்தூல சரீரத்தைச் சுத்தி செய்தல். இரண்டாவது ஆந்தர சௌசம், மைத்ரீ, முதிதா முதலிய ஸத் பாவங்களால் மநத்தின் மலத்தை நீக்குதல்.†

ஸந்தோஷம் : கிடைத்ததை வைத்துத் திருப்திபெறல்.

தபஸ் : காயக் கிலேசத்திற்குரிய சாந்த்ராயண் விரதத்தை அநுஷ்டித்தல். ஸுகதுக்கங்களான துவந்தங்களை ஸகித்தல்.

மற்றவைகள் சூத்திரத்தின் அர்த்தத்திலேயே விளங்கும்.

33. 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌬𑌾𑌧𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑌾𑌵𑌨𑌮𑍍॥

(யம நியமங்களுக்கு)விருத்தமான சங்கற்பங்களால் தடைகள் நேரிடுமாகில் அச்சங்கற்பங்களின் தோஷங்களை நினைக்கப்பாலது.

34. 𑌵𑌿𑌤𑌰𑍍𑌕𑌾 𑌹𑌿𑌂𑌸𑌾𑌦𑌯𑌃 𑌕𑍃𑌤𑌕𑌾𑌰𑌿𑌤𑌾𑌨𑍁𑌮𑍋𑌦𑌿𑌤𑌾
𑌲𑍋𑌭𑌕𑍍𑌰𑍋𑌧𑌮𑍋𑌹𑌪𑍂𑌰𑍍𑌵𑌕𑌾 𑌮𑍃𑌦𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌾
𑌦𑍁𑌃𑌖𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑌨𑍍𑌤𑌫𑌲𑌾
𑌇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌕𑍍𑌷𑌭𑌾𑌵𑌨𑌮𑍍॥

---

* ஆதியை வேதத்தி னப்பொரு ளானனைச்
சோதியை யங்கே சுடுகின்ற வங்கியைப்
பாதியுண் மன்னும் பராசத்தி யோடே
வீதி யுணர்ந்து நியமத்த னாமே.

தூய்மை யருளுண் சுருக்கம்பொ றைசெம்மை.
வாய்மை நிலைமை வரைதலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே.

தவஞ்செபஞ் சந்தோட மாத்திகந் தானஞ்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண் மதிசொல்லீ ரைந்து
நிவம்பல செய்யி னியமத்த னாமே.—திருமந்திரம்.

குறிப்பு:—ஒண்மதிச்சொல் = பிரணவம். நிவம்=நிபம்=காரணம்.

† 1-ம் பாதம், 33-ம் சூத்திரத்தைப் பார்க்க.

யோகத்திற்குத் தடைகளான ஹிம்ஸை முதலியன, தான் நேரில் செய்தாலும், பிறரைச் செய்யும்படி ஏவினாலும், அதைச் சரியென்று அநுமோதித்தாலும், (எல்லாம் பாபமே யென்றும்), அவை ஆசையினாலாவது, கோபத்தினாலாவது, மோஹத்தினாலாவது உண்டாயினும், அவை அற்பமாயினும், மத்திமமாயினும், அதிகமாயினும் ஏற்பட்டாலும், அவை முடிவில்லாத் துக்கங்களுக்கும், அறிவில்லாமைக்கும் காரணமாகின்றன எனச் சிந்திக்கத்தக்கவை.

குறிப்பு:—(1) இந்த சூத்திரத்தில் யம, நியமங்களுக்கு விரோதிகளான எண்ணங்களின் ஸ்வரூபத்தையும், அவை உண்டாகும் பிரகாரத்தையும், காரணங்களையும், உட்பிரிவுகளையும், அவைகளின் பயன்களையும் விவரித்திருக்கிறார்.

(2) துக்கங்கள் என்றால் துக்கங்களுக்குரிய அநேக ஜன்மங்கள் என்று தாத்பர்யம்.

35. அஹிம்ஸாப்ரதிஷ்டாயாம் தத்ஸந்நிதௌ வைரத்யாக:॥

அஹிம்ஸை ஸ்திரமாகிப் பூர்ணம் பெறும்பொழுது, அந்த யோகியின் முன்னர் பகைமை போய்விடும்.

குறிப்பு:—அந்த தர்மத்தை அநுஷ்டிக்கிறவன் முன்னிலையில் பரஸ்பரம் வைரியாயுள்ள ஜீவராசிகளும் கூட விரோதத்தை விட்டு, பரஸ்பரம் அன்பு பாராட்டும். உதாரணம்: பசு, புலி; பாம்பு, கீரி; எலி, பூனை முதலியனவாம். மஹாதேவரின் குடும்பம் இங்கு கவனிக்கத்தக்கது.

36. ஸத்யப்ரதிஷ்டாயாம் க்ரியாபலாஶ்ரயத்வம்॥

ஸத்திய விரதம் ஸ்திரமாகிப் பூர்ணம் பெறவே, யோகியின் வார்த்தை கர்மபலத்தை உண்டுபண்ணும் தன்மையை உடையதாகிறது.

குறிப்பு:—ஸத்தியம் என்ற தர்மம் பூர்ணமாக ஏற்படவே, யோகியின் வார்த்தை பலிக்கக்கூடியது. விளையாட்டில் சொன்னாலும் கூட அது பலிக்கும். நன்மை, தீமை என்ற இருபலன்களையும் அளிக்கும். அவன் வார்த்தை தவறாது.

37. 𑌅𑌸𑍍𑌤𑍇𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌰𑌤𑍍𑌨𑍋𑌪𑌸𑍍𑌥𑌾𑌨𑌮𑍍॥

களவின்மை ஸ்திரப்பட்டுப் பூர்ணமாகவே, எல்லாவிடத்திலும், எல்லாக் காலத்திலும் ரத்நங்கள் முதலிய எல்லாப் பொருள்களும் அவனையடையும்.

38. 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌚𑌰𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌯𑌾𑌂 𑌵𑍀𑌰𑍍𑌯𑌲𑌾𑌭𑌃॥

பிரஹ்மசர்யம் ஸ்திரமாகிப் பூர்ணம் பெறவே, வீர்ய லாபம் உண்டாகும்.

குறிப்பு:—வீர்யத்தை வியயம் பண்ணாமல் உள்ளே அடக்க, மநத்தெளிவு, புத்திநுட்பம், தைர்யம், பலம் உண்டாகும். அஷ்ட ஸித்திகள் ஏற்படும்.

39. 𑌅𑌪𑌰𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑍈𑌰𑍍𑌯𑍇 𑌜𑌨𑍍𑌮𑌕𑌥𑌨𑍍𑌤𑌾𑌸𑌂𑌬𑍋𑌧𑌃॥

பிரதிக்ரஹம் இல்லாமை ஸ்திரமாகிப் பூர்ணம் பெறவே, பிறப்பின் காரணம் தெளிவு பெறும்.

குறிப்பு:—பிறரிடம் யாதொன்றையும் கிரகிக்காமலும் இச்சிக்காமலும் இருத்தல் ஸ்திரப்படுமாகில், யோகியானவன் பிரகிருத ஜந்மம் உண்டாதலுக்கு யாது காரணம் என்றும், முன் ஜந்மங்களில் தான் செய்த கர்மங்கள் இன்னவை யென்றும், அவை இனி எத்தனை ஜந்மங்களை உண்டுபண்ணுமென்றும், தான் கைவல்யம் பெறும் வரை ஏற்படும் ஜந்மங்கள் இன்னவையென்றும் அறிவான்.

பிறர் உதவியை நாடான், என்பதினால், தான் தனித்து நிற்கும் தகைமையையுடையவனாவான். ஜநநத்தை உண்டுபண்ணும் இராகத்தை இனிச் செய்யான். அதனால் அவன் மநம் தூய்மை பெறுகிறது. அந்நிலையின் பயனாய்ப் பிறப்பு இன்னதென்பதையும், அதன் பிரகாரத்தையும் (மக்கள், தேவர், நரகர் முதலியவைகள்), பிறப்பின் காரணங்களான கிலேசங்களையும் கர்மங்களையும், அதன் பலனான துக்கத்தையும், முடிவான புருஷ ஸாக்ஷாத்காரத்தையும் குரு உபதேசத்தால் அறிகிறான்.

40. 𑌶𑍌𑌚𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑌜𑍁𑌗𑍁𑌪𑍍𑌸𑌾 𑌪𑌰𑍈𑌰𑌸𑌂𑌸𑌰𑍍𑌗𑌃॥

சௌசம் (சுத்தம்) பூர்ணமாக ஏற்படவே தன் அவயவங்களில் அருவருப்பும், பிறருடன் சேராமலிருத்தலும் உண்டாகின்றன.

குறிப்பு:—இனி, நியமங்களின் ஸித்திகளைச் சொல்லுகிறார். தன் சரீரத்தை அடிக்கடி உள்ளும் புறமும் சுத்திசெய்துவரவே, அதன் ஆராய்ச்சி ஏற்படுகிறது. அதன் தன்மை அசுத்தமென அறிகிறான். அதனால் சரீரத்தின்மேலுள்ள அபிமாநம் விட்டு விலகுகிறது. பிறர் சரீரங்களைப்பற்றி இன்னும் அதிகமான அருவருப்பு உண்டாகிறது.

41. ஸத்த்வஶுத்திஸௌமநஸ்யைகாக்ர்யேந்த்ரியஜயாத்மதர்ஶநயோக்யத்வாநி ச॥

அதனால் (சௌசத்தின் ஸித்தியால்) மநம் சுத்தம் பெறுதலும், அதனால் மநத் தெளிவும், அதனால் மநம் ஒருமைப்படுதலும், அதனால் இந்திரிய ஜயமும், முடிவில் ஆத்ம ஸாக்ஷாத்காரம் பெறுதலுக்குரிய தகுதியை அடைதலும் ஏற்படுகின்றன.

42. ஸந்தோஷாதநுத்தமஸ் ஸுகலாப:॥

ஸந்தோஷம் என்ற நியமம் ஸித்திபெறுதலினால் உயர்நலமுள்ள ஸுகம் உண்டாகும்.

குறிப்பு:—எல்லா விஷய சுகங்களையும் அநுபவித்தலால் ஏற்படும் ஸந்தோஷத்தைப் பார்க்கிலும், அவைகளில் விருப்பு வெறுப்பு என்ற பற்றில்லாமல் இருத்தலினால் ஏற்படும் ஸந்தோஷம் மிகவும் உயர்நலமுடையது. தைத்தரீய உபநிஷத்தின், ஆநந்த மீமாம்ஸையில் இந்தப் பற்றில்லாமை கடைமுறையில் பிரஹ்மாநந்தத்தைக் கொடுக்கும் என்ற உபதேசமுள்ளது.

43. காயேந்த்ரியஸித்திரஶுத்திக்ஷயாத்தபஸ:॥

தபஸ்ஸினால் அசுத்தத்திற்குக் காரணமாம் கிலேசங்கள் நசித்தும் போகின்றன. அதன் பயனாகச் சரீரத்திற்கும் இந்திரியங்களுக்கும் ஸித்திகள் ஏற்படுகின்றன.

குறிப்பு:—சித்திகள், அணிமா முதலான* 8 ஸித்திகளும், இந்திரியங்களுக்கு லோகாந்தரத்திலும், தேசாந்தரத்திலும், காலாந்தரத்திலும் நேரிடும் விஷயங்களைப் பார்த்தல், கேட்டல் முதலிய ஸித்திகளும் உண்டாகும்.

44. ஸ்வாத்யாயாதிஷ்டதேவதாஸம்ப்ரயோக:॥

(யோகாநுகூலமான) மந்த்ரங்களை ஜபிக்கிறதினுல், இஷ்டமான தேவர்களுடைய ஸாந்நித்தியம் உண்டாகிறது.

குறிப்பு:—மந்த்ர ஜபத்தினுல் மந்த்ர அதிஷ்டாந தேவர்கள், மந்த்ரத்தைக் கண்டுபிடித்த ரிஷிகள், ஸித்த புருஷர்கள் இவர்கள் இவனுக்கு தர்சநத்தைக் கொடுத்து, அநுக்ரஹம் செய்கிறுர்கள்.

45. ஸமாதிஸித்திரீச்வரப்ரணிதாநாத்॥

ஈசுவரனைத் தியாநம் செய்வதால் அல்லது ஈசுவரனுக்குத் தன்னை அர்ப்பணம் செய்வதால் ஸமாதியின் ஸித்தி ஏற்படுகிறது.

குறிப்பு:—ஈசுவரத் தியாநத்தால் ஸமாதி பூர்ணம் பெறுதல் உண்டாகிறது. அதாவது யோகியின் பிரக்ஞை விசாலமாகிறது. காலதேசங்களின் வரம்பின்றி எல்லாவற்றையும் அறியும் தகைமையைப் பெறுகிருன்.

ஈசுவரத் தியாநத்தால், ஸமாதி பூர்ணம் உண்டாகிறது என்பதினுல் யமம் முதலியவை வேண்டுவதில்லை என்று அர்த்தமில்லை. யமம் முதலியவை மாத்திரம் இருந்து ஈசுவரத் தியாநம் இல்லாவிடில் ஸமாதி ஸித்தி உண்டாகாது என்பது பொருள்.

46. ஸ்திரஸுகமாஸநம்॥

ஆஸநம் என்பது ஸ்திரகரமாயும், ஸுககரமாயும் இருத்தலாம்.

---

* அணிமா = அணுவைப்போலாதல்.
மஹிமா = மிகவும் பருத்தல்.
கரிமா = இருப்பு மலையினுங் கனத்தல்.
லகிமா = பஞ்சிலும் இலேசாதல்.
பிராப்தி = வேண்டுவனவெல்லாமடைதல்.
பிராகாமியம் = குறைவின்றியிருத்தல்.
ஈசத்துவம் = யாவர்க்கும் தேவனுகுதல்.
வசித்துவம் = யாவரும் வணங்கநிற்றல்.

குறிப்பு:—ஆஸநம் இருவகைத்து, ஒன்று பாஹ்ய ஆஸநம் வஸ்த்ரம், கருப்பு மான்தோல், தர்ப்பை, கம்பளம் முதலியன. இரண்டாவது சாரீர ஆஸநம், பத்மாஸநம், வீராஸநம், பத்ராஸநம், ஸ்வஸ்திகாஸநம், தண்டாஸநம் முதலியன. முந்தியவை சரீரத்திற்குப் புறம்பானவை. பிந்தியவை சரீர அவயவங்களைப் பலவிதமாக அமைத்துக்கொள்ளுதலால் ஏற்படுகின்றவை.

47. ப்ரயத்நஶைதில்யாநந்தஸமாபத்திப்யாம்॥

முயற்சியைத் தேயும்படி செய்தலானும், அநந்தன் உபாஸனையாலும் ஆஸநஜயம் உண்டாகும்.

குறிப்பு:—முயற்சியைத் தேயும்படி செய்தல், என்றால், மநம், மெய், மொழிகளால் ஸாதாரணமாய் உண்டாகும் பிரயத்நங்களைத் தடுத்து ஒருமுகப்படுத்தல்.

அநந்தன் = ஆதிசேஷன். பூமியைத் தாங்குகிற 1,000 தலைகளையுடைய ஆதிசேஷனை உபாஸனை செய்வதால், ஆஸந ஜயத்தைப் பெறுகிறான். அநந்தன் ஆஸநத்திற்கு அபிமாநியான தேவதை. புராணவரலாற்றை நீக்கி, அதன்கண் குப்தமாயுள்ள உண்மையை வெளியிடில், பூமிக்கு ஆகர்ஷண சக்தியுண்டு, ஸூர்யனுக்கும் ஆகர்ஷண சக்தியுண்டு. இரண்டும் ஒன்று மற்றொன்றை இழுக்கின்றன. பூமி சிறிது, அதனால் அதன் சக்தியும் சிறிது. சூரியன் பெரிது, அதனால் அதன் சக்தி பெரிது. அக்காரணத்தால் பூமி, சூரியனிடம் வீழ்ந்து போகாமல் தன் நிலையைக் காப்பாற்றிக்கொண்டு தான் இயங்குகின்றது போல, யோகியானவன் பெரிதான பலமான உலகப் பற்றுக்களை ஜயித்து, அந்தர்முகப்பட்டு, மநத்தை ஒருமுகப்படுத்தி ஸ்திரப்படுத்திக்கொள்ளல் வேண்டும். ஆகர்ஷணசக்தி ஸர்ப்பமாகப் பிரதிகப்படுத்தப்பட்டிருக்கிறது.

48. ததோ த்வந்த்வாநபிகாத:॥

அதனால், (ஆஸந ஜயத்தினால்) துவந்தங்களின் உபத்திரவம் இன்றும்.

குறிப்பு:—துவந்தங்கள் = சீதோஷ்ண முதலியவைகள்.

49. தஸ்மிந் ஸதி ஶ்வாஸப்ரஶ்வாஸயோர்கதிவிச்சேத: ப்ராணாயாம:॥

அதில் (ஆஸந ஜயம் ஏய்படும்போது) சுவாஸத்தின் வரத்துப்போக்கை நிறுத்தல் பிராணாயாமமாம்.

குறிப்பு:—(1) ஆஸந ஜயத்தின் மூலம் சரீரம் ஸ்வாதீநம் ஆகிக்கொண்டுவர, பிராணாயாமம் செய்தல் இயலும். பிராணன் = பிராணனை, ஆயாமம் = நீளும்படி செய்தல்.

ஸாதாரணமாய், உசுவாஸமும், நிசுவாஸமும் நம்முடைய பிரயத்நமின்றி யாதொரு தடையில்லாமல் விரைவாய் நடைபெறுகிறது. பிரயத்நத்தால் அவை அளவுக்குட்பட்டு நடைபெறும்படி செய்தல். அதாவது, உட்கொள்ளும் சுவாஸத்தை விரைவாய்த் தானே செல்லாமல் தடுத்து நீண்டகாலம் நிகழும்படியாகவும் அவ்விதமே உட்கொண்ட சுவாஸத்தை வெளியேறாமல் நீண்டகாலம் தங்கும்படி செய்தலும், பின்னர் நிசுவாஸமாகிய வெளியேறும் சுவாஸத்தை நீண்டகாலம் நிகழும்படி செய்தலும் பிராணாயாமம் எனப்படும். உசுவாஸம் = பூரகம், நிறுத்தல் = கும்பகம், நிசுவாஸம் = ரேசகம்.

(2) வெறுமையாக சுவாஸத்தை மேற்கண்டபடி நிகழும்படி செய்தல் மாத்திரம் போதாது. அடியிற்கண்ட மநுஸ்மிருதியின் வசநத்தை அநுஸரித்துச் செய்தல் வேண்டும்.

ஸவ்யாஹ்ருதிம்ஸப்ரணவாம்காயத்ரீம்ஶிரஸா ஸஹ।
த்ரி:படேதாயதப்ராண:ப்ராணாயாமஸ்ஸ உச்யதே॥

இதன் பொருள்: பிரணவத்தோடு கூடிய ஏழு வியாஹ்ருதிகள், காயத்ரீ, அதன் சிரஸ் இவைகளை மநத்தால் மும்முறை ஜபித்து சுவாஸத்தை நிரோதம் செய்தல், பிராணாயாமம் என்பதாம். இது த்விஜர்கள் செய்யவேண்டிய முறை. ஏனையர் அவரவர்கள் இஷ்டதேவதையைத் தியாநம் பண்ணிக்கொண்டு செய்தல் நலமாம்.*

---

*கும்பகத்தி னுள்ளே குறித்தரனைத் தானோக்கிற்
றும்பியோ ணிற்குந் தொடர்ந்து. —ஔவைகுறள்.

50. 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌤𑌮𑍍𑌭𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌭𑌿𑌃
𑌪𑌰𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑍋 𑌦𑍀𑌰𑍍𑌘𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌃॥

வெளிப்போகின்ற சுவாஸம் (ரேசகம்) என்ன, உட்கொள்ளும் சுவாஸம் (பூரகம்) என்ன, நிறுத்தப்பெறும் சுவாஸம் (கும்பகம்) என்ன, இவைகளை தேசத்தினுலும், காலத்தினுலும் எண்ணிக்கையாலும் கவனித்துப் பார்த்து வருதலினுல், சுவாஸம் நீண்டதாகவும் சூக்ஷ்மமாகவும் ஆதலில் இயலும்.

குறிப்பு:—(1) ரேசகம் முன் மாசம் 12 அங்குலம் நீண்டது, இந்த மாஸம் 18 அங்குலம் நீண்டது என்றறிவது தேசத்தால் அறிதலாம். முன் மாசம் 2 நிமிஷ காலம் ரேசகம் நிகழ்ந்தது, இந்த மாஸம் 3 நிமிஷ காலம் நிகழ்ந்தது என்றறிவது காலத்தால் அறிதலாம். முன் மாசம் 1 முதல் 10 வரை எண்ணும் வரைக்கும் ரேசகம் நடைபெற்றது, இந்த மாஸம் 1 முதல் 20 வரை எண்ணும் வரைக்கும் ரேசகம் நடைபெற்றது என்றறிவது எண்ணிக்கையால் அறிதலாம். இவ்விதமே, பூரகம், கும்பகம் முதலியவைகளையும் தேசம், காலம், எண்ணிக்கைகளைச் சேர்த்து அறிந்து கொள்ளுக.

(2) ஸ்வபாவமாய் ஏற்படும் உசுவாஸ நிசுவாஸங்களை அப்படி நிகழாமல் பிரயத்நத்தால் சிறுகச் சிறுகத் தடுத்து வந்து, கடைமுறையில் கும்பகம் தீர்க்ககாலம் நிகழும்படி செய்தல் தான் பிராணாயாமத்தின் முக்கியக் கருத்தாம். அதனுல், மநம் சலநமற்று ஓய்வைப்பெறும்.

(3) ரேசகத்தின் அப்பியாஸத்தில் சுவாஸம் எப்படி நீண்டு வருகிறது என்பதை, பஞ்சு முதலிய மெல்லிய திரவியங்களை மூக்கின் முன்னர் வைத்துப் பரீக்ஷிக்கவேண்டும். பூரகத்தின் அப்பியாஸத்தில் எவ்விதம் சுவாஸம் நீண்டு உட்கொள்ளப்படுகிறது என்பதை, முதல் மாசம் அல்லது வருஷத்தில் மார்பு வரையும், இரண்டாம் மாசம் அல்லது வருஷத்தில் நாபி வரையும், மூன்றும் மாசம் அல்லது வருஷத்தில் மூலாதாரம் வரையும், பின்னர் கடைமுறையில் சரீரம் முழுமையும் சுவாஸம் எறும்புபோல் ஊறிக்கொண்டு பிரவேசித்து ஸஞ்சரிக்கிறதைக் கவநமாய் ஆராய்ந்து அறியலாம்.

(4) பிராணன், சாதாரணமாய் சுவாஸம் (பிராணவாயு) என்றாலும், உண்மையில், சரீரத்தின்கண்ணுள்ள எல்லா சக்திகளுக்கும் ஏற்பட்ட பெயர். பிரச்ந உபநிஷத்தில், உலகத்திலுள்ளவைகள் ரயி, பிராணன் என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பிராணாயாம ஜயம் என்றால், அந்தப் பிராணனை ஸ்வாதீநப் படுத்தலாம்.

(5) பிராணவாயு நாஸித்துவாரங்களிரண்டிலும் மாறி மாறி ஸஞ்சரிக்கின்றது. இடது துவாரத்தின் வழியாய்ச் செல்லும் போது, இடைகலை யென்றும், சந்திரன் என்றும், வலது துவாரத்தின் வழியாய்ச் செல்லும் போது பிங்கலை யென்றும், சூரியனென்றும், புருவமத்தியில் அது நிற்கும்போது, ஸுஷும்நா அல்லது சுழிமுனை யென்றும் அக்கிநி என்றும் பெயர் பெறும்.*

(6) தமிழ் நூல்களில், முக்கியமாக ஔவையாரது ஞானக்குறளில், பிராணாயாமத்திற்கு வாயுதாரணை என்று பெயர் வழங்குகிறது.

(7) சுவாஸமானது நாஸித்துவாரங்களில் நடைபெறுவதில் ஒவ்வொரு நாஸியில் 5 நாழிகை மாறி மாறி நடைபெறும். அப்படி நடைபெறுவதில் 5 பாகமாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பாகத்திலும் அடியில் வரும் விவரப்படி காலம் செல்லும்.

| | | | |
|---|---|---|---|
| i. | பிருதிவீ | $1\frac{1}{2}$ | நாழிகை |
| ii. | அப்பு | $1\frac{1}{4}$ | நாழிகை |
| iii. | தேயு | 1 | நாழிகை |
| iv. | வாயு | $\frac{3}{4}$ | நாழிகை |
| v. | ஆகாயம் | $\frac{1}{2}$ | நாழிகை |

பிருதிவீ என்றால் இரு நாஸித்துவாரங்களுக்கும் மத்தியில் இருக்கின்ற பாகத்தைத் தழுவிச் செல்லும் சுவாஸத்தின் பெயர்.

அப்பு என்றால் நாஸித்துவாரத்தின் வெளிபக்கத்தைத் தழுவிச் செல்லும் சுவாஸம்.

---

*இடைபிங் கலைகள் ரேசக மாற்றில்
அடையும் அரனருள். —ஔவை குறள்.